10 சிறுகதைகள்

# சிறுகதை மஞ்சரி

காலாண்டிதழ்

ISSUE NO 4 - SEP 2020 - £3

## 10 SHORT STORIES


WRITTEN BY VARIOUS AUTHORS,
BROUGHT TO YOU IN
ONE CONSOLIDATED MAGAZINE

## 10 சிறுகதைகள்

சமூக விழிப்புணர்வு நிறைந்த எங்களின் பத்து எழுத்தாளர்களினுடைய சிறந்த கதைகள்

## களம்

ஆரம்ப, வளர்ந்த எழுத்தாளர்களுக்கான எங்களின் தளம்.



*unlock your potential*

# LUXMI EDUCATION CENTRE

## CONTACT US:

**TEL: 0208 573 0368**

**WEB: WWW.LECONLINE.CO.UK**

**EMAIL: WEBSITE@LECONLINE.CO.UK**

101A Blyth Road, Hayes, Middlesex, UB3 1DB

# NOW ENROLLING FOR 2020/2021

**GET IN TOUCH TO SECURE YOUR CHILDS PLACE**

**Small Groups**
**Individual Attention**
**Experienced Teachers**
**90 % Pass Rates**
**30 Years Experience in Coaching Students**

**YEARS 1 - 3**
MATHS, ENGLISH

**YEARS 4 - 5 (11 PLUS)**
MATHS, ENGLISH, VERBAL REASONING, NON VERBAL REASONING

**YEAR 6**
MATHS, ENGLISH, SCIENCE

**YEAR 7 - 9**
MATHS, ENGLISH, PHYSICS, CHEMISTRY, BIOLOGY

**YEAR 10 - 13**
MATHS, PHYSICS, CHEMISTRY, BIOLOGY

# மனம்விட்டு.......

சிறுகதை மஞ்சரியின் நான்காவது பூ இது. இந்த மஞ்சரியில் 10 சிறுகதைகள் மலர்கின்றன. நான்கு மஞ்சரிகளிலும் 36 சிறுகதைகள் மலர்ந்திருக்கின்றன. பதினைந்துக்கு மேற்பட்ட புதியவர்களை அறிமுகப்படுத்தியுள்ளேன். நான்கிலும் பன்னிரண்டு பேருடைய சிறுகதைகள் சிறந்த சிறுகதைகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் மேலும் புதியவர்கள் கதைகளை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். கடினமான பணியாக இருந்தாலும் உவகையோடு செய்கின்றேன். புதிய புதிய எண்ணங்கள் உங்களிடமிருந்து எனக்கு வந்து கொண்டிருக்கின்றன. எல்லாமே காத்திரமானவைகள். ஒவ்வொன்றாக அவற்றை நடைமுறைப்படுத்துவேன். ஆயிரம் பேர்களை அறிமுகப்படுத்தும் புதிய திட்டத்தினை ஆரம்பித்துள்ளோம். நம் நாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் சிறுகதை மஞ்சரி செல்லவேண்டுமென்பது எனது ஆசை. வடமாணத்திலுள்ள சகல பாடசாலைகளின் முகவரிகளை நண்பர் வசீகரன் அனுப்பியுள்ளார். கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் முகவரிகளை நண்பர் மைக்கல் கொலின் அவர்கள் எடுத்துத் தருவதாகக் கூறியுள்ளார். இதேபோல் மலையகப் பாடசாலைகளின் விபரங்களை யாராவது முன்வந்து எடுத்துத்தரின் சந்தோசமாக இருக்கும். இந்தப் பாடசாலைகளுக்கான சந்தாக்களை லண்டன் அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளவர்கள் செலுத்துவார்கள். அமெரிக்காவிலுள்ள குரு சதாசிவம் அவர்கள் வடமாணத்திலுள்ள ஐந்து பாடசாலைகளுக்குச் சந்தாவிற்கு ஒழுங்கு செய்துள்ளார். இன்னும் செய்வதற்கான முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளார். இலங்கையிலுள்ள முருகையா சுரேந்திரன் அவர்கள் முதல் மஞ்சரி அவர் கைகளை அடைந்ததும் 3000 ரூபாவினை மஞ்சரியின் கணக்கில் வைப்பிலிட்டுத் தன் சந்தோசத்தைத் தெரியப்படுத்தினார். அவரின் இந்தப் பணம் ஆறு பாடசாலைகளின் சந்தாவுக்குப் பாவிக்கப்படும். ண்டனிலுள்ள வைத்தியர் இராசையா– திரு திருமதி இராமநாதன் அறக்கட்டளையினர்-திரு கிருஸ்ணமூர்த்தி ஆகியோர் எழுத்தாளர்களுக்கு வழங்கும் பரிசில்களைத் தாங்கள் வழங்குவதாகப் பொறுப்பெடுத்துள்ளனர். இப்படிப் பலர் தாங்களும் பங்களிப்புச் செய்வதாக என்னைத் தொடர்பு கொண்டுள்ளனர். இவைகள் ஒரு உற்சாகத்தைத் தருகின்றன. எதையுமே செய்யாது வெத்துவேட்டுகளாக முகநூலில் தேவையற்ற விடயங்களுக்காக சில எழுத்தாளர்கள் என்று அழைப்போர் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர். இவற்றை விட்டுவிடுங்கள். உங்கள் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். பலனுள்ள விடயங்களை இலக்கியத்துக்குச் செய்யுங்கள். நிரம்பக் கதைப்பதை நிறுத்தி விடுகிறேன். உள்ளே செல்லுங்கள். கிழமைக்கொரு கதையைப் படியுங்கள். உங்கள் அபிப்பிராயங்களை எழுதுங்கள். எழுத்தாளர்கள் தங்களைப் புடம்போடத் துணையாகவிருக்கும்.

நன்றி

மு. தயாளன்



பலரின் வேண்டு கோளுக்கிணங்க இம்முறை எந்தவொரு சொல்லும் பிரிந்துவிடாமல் புதிய பாணியில் சஞ்சிகையை அமைத்துள்ளேன். உங்கள் அபிப்பிராயங்களை எழுதுங்கள்.

**சிறுகதை மஞ்சரி 3 இன் சிறந்த பரிசுக்குரிய கதைகள்**

1. மடத்துச் சோறு ( அலெக்ஸ் பரந்தாமன்)
2. வாழ்தல் இனிது(திருமலை ரதி தனஞ்சயன்)
3. துளிர்ந்த தேயிலைச் செடி ( N.K. வேணி)

## நன்றிகள்............

பங்காளர்களுக்கும் இந்தச் சிறுகதை மஞ்சரியை தன் வேலைப்பளுவுக்கு இடையிலும் ஒப்பு நோக்கித் தந்த திருமதி ஆர்த்தி துவாரகனுக்கும் இதன் அட்டையை வடிவமைத்த என் மகன் ரமணனுக்கும் சித்திரங்கள் வரைந்து தந்த பிருந்தாஜினி பிரபாகரனுக்கும் கைலாசநாதருக்கும் அட்டைப்பட ஓவியத்தை வரைந்து தந்த என் மனைவி சாருவுக்கும் என் அன்பு நிறைந்த நன்றிகள்.

## தவறுக்கு வருந்துகிறோம்

மஞ்சரி 3 இல் **தாய்மை** கதை எழுதியவரான சி. சிறீரங்கனின் படம் வரவேண்டிய இடத்தில் வேறு ஒருவரின் படம் வந்துவிட்டது.



சி. சிறீரங்கன்

**அட்டையில்...**




அட்டை வடிவமைப்பு : **Ram Nat**

அட்டைப்பட ஓவியம் : **சாரு தயாளன்**

# உங்களை மகிழ்விப்பவை.................


**3** **பங்காளர்கள்**

**4** **சிறுகதை பற்றி.....**

**5** **பத்மா சோமகாந்தன்**

**6** **வாசிப்பு அனுபவம்**

7

**சாமி – நெல்லை லதாங்கி**

இக்கதை தற்போதய வைரசின் தாக்கத்தால் அன்றாடங்காய்ச்சிகள் படும் துயரம் யதார்த்தமாகத் தரப்பட்டுள்ளது.

12

**அறிதல் – திருமலை சுந்தா**

தற்காலத் தலைமுறையின் வாழ்வு நிலைபற்றி ஒரு முதியவரின் ஏக்கம் உளவியல்ரீதியாக அணுகப்பட்டுள்ளது.

14

**ஊன்றுகோல் – நடராசா கண்ணதாஸ்**

இந்தக்கதை இன்றைய காலத்தில் பல்கலைக்கழகங்களில் நடைபெறும் பகிடிவதையின் தாக்கத்தை தெளிவாகக் கூறி நிற்கிறது.

17

**அது புத்தனின் சிசுவல்ல – பிரமிளா பிரதீபன்**

இந்தக் கதை ஆன்மீகப் போலிகளின் பெண்கள் மீதான வன்முறைகளின் கொடுமையைப் பற்றியும் அதிலிருந்து ஒரு பெண் துணிந்து வெளிவருதல் பற்றியும் அழகாகக் கூறப்பட்டுள்ளது.

24

**கட்டுச்சோறு – க. செந்தூரன்**

இந்தக்கதை அப்பாமீதான பாசத்தையும் அதே வய தொத்தவர்கள் மீது செலுத்த வேண்டிய அன்பு பற்றித் தெளிவாகவும் உணர்வுபூர்வமாகவும் எழுதப்பட்டுள்ளது.

29

**அகம் – நக்கீரன் மகள்**

இந்தக் கதை தற்போதய வைரஸ் நெருக்கடியின் ஊடாக நிறவெறி தவறானதென்ற கருத்து ஆழமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

33

**அவள் – எஸ் – ஜெயந்தி**

காதல் போனால் சாதல் என்பதை மறுதலிக்கின்ற ஒரு அணுகுமுறை.

35

**தாயே நீ என் தெய்வம் – அ. சிவரூபினி**

இக்கதை தாய்மையின் சிறப்பையும் மருமகள்களாக வருபவர்களின் தவறான அணுகு முறைகளையும் கூறி நிற்கிறது.

38

**கிரிம்சன் கூப்பரின் மாயக் கண்ணாடி – பாத்திமா சன்பறா**

இது முற்றுமுழுதான புனைகதை. புதுவிதமான கதை சொல்லல்.

41

**காலத்தின் கைமாறு – இரா. பிறேம்ராஜ்**

இக்கதை ஒரு ஆசிரியரின் மாணவன் மீதான அணுகுமுறையையும் மாணவனின் நன்றி உணர்வையும் சுட்டிக்காட்டி நிற்கிறது.

43.

**மஞ்சரிபற்றி மனந் திறந்து......**

44

**எழுத்தின் அனுபவங்கள் – நந்தினி சேவியர்**

இப் பக்கத்தில் நந்தினி தன் எழுத்துலக அனுபவங்களை இளம் எழுத்தாளர்களின் நன்மை கருதிப் பகிரச் சம்மதித்துள்ளார்.

# பங்காளர்கள்.....



**நெல்லை லதாங்கி**

**இடம்: நெல்லியடி**

யதார்த்தமான எழுத்து நடை கொண்ட பலரும் அறிந்த நல்ல படைப்பாளி.



**திருமலை சுந்தா**

**இடம்: திருமலை**

பலகதைகளுக்கும் விருதுகளுக்கும் சொந்தக்காரர் ஆளுமை நிறைந்த மூத்த படைப்பாளி



**ந. கண்ணதாஸ்**

**இடம்: ஈழம்**

எதையும் யதார்த்தமாக அணுகும் சுவையான எழுத்து நடை கொண்ட ஒரு படைப்பாளி



**பிரமிளா பிரதீபன்**

**இடம்: கொழும்பு**

மனிதஉணர்வுகளை உளவியல் ரீதியாக வெளிக்கொணரும் படைப்பாளி. நம்பிக்கைதரும் படைப்புகளின் சொந்தக்காரி.



**க.செந்தூரன்**

**இடம்: ஈழம்**

நம்பிக்கை தரும இளம் எழுத்தாளன். துல்லியமான சமூகப்பார்வை கொண்டவை இவரின் படைப்புகள்.



**நக்கீரன் மகள்**

**இடம்: டென்மார்க்**

தன்அனுபவங்களை அழகியலுணர்வோடும் தெளிவான புரிதலோடும் தருகின்ற மிகவும் நம்பிக்கைக்குரிய நல்ல படைப்பாளி



**S. ஜெயந்தினி**

**இடம்: ஈழம்**

வளரத் துடிக்கும் துடிப்புள்ள ஆர்வம் நிறைந்த இளம் படைப்பாளி



**அ. சிவரூபினி**

**இடம்: திருமலை**

மிகவும் துடிப்புள்ள கூர்மையான பார்வை கொண்ட இளம் படைப்பாளி



**பாத்திமா சன்பறா**

**இடம்: ஈழம்**

கற்பனை வளம் நிறைந்த எதிலும் புதுமை காணத்துடிக்கும் வித்தியாசமான ஒரு இளம் படைப்பாளி



**இரா.பிறேம்ராஜ்**

**இடம் : இலண்டன்**

நல்லதொரு வாசகனும் எழுத்தில் ஆர்வம் கொண்டவருமான இளம் படைப்பாளி

**சிறுகதை மஞ்சரியின் தொடர்பு முகவரி:**

Sirukathai Manjari, 14 Brands Road, Slough, Berkshire, SL3 8QP +44 7505455811 sirukathai1@gmail.com
Sirukathai Manjari, 91 Bharathi Street, Trincomalee, Srilanka Bank detail: Mrs Thanabalasingam Commercial bank , Trinco Branch , 8370042817 **Srilanka** 500Rs/Year **England & Other Countries** £20/year, £30/2year, £50/5year, **Europe** $40/year **Others** $50/year, M. Natkunathayalan, Barclays , Sort code 20-37-15, A/C 60389307, IBAN GB11BUKB20371560389307, SWIFTBIC BUKBGB22

# சிறுகதை ஒரு குறிப்பு...

சிறுகதை பற்றி நான் எழுதுகின்ற மூன்றாவது கட்டுரை இது.

சிறுகதை என்பது சிறிதாக இருக்கவேண்டுமென்றும் அவை குறிப்பிட்டநேரத்துக்குள் வாசித்து முடிக்கப்படவேண்டுமென்றும் சிறுகதைத் துறையில் வெற்றிகண்ட பலர் கூறியுள்ளமை உங்களுக்குத் தெரியும். நானும் கூறியிருக்கிறேன். இந்தக் கட்டுரையில் புதிய ஒரு கோணத்தில் சிறுகதையை அணுகலாமென நினைக்கிறேன்.

சிறுகதையை வாசகனோடு தொடர்புபடுத்தும் போது அதனை ஏன் வாசகனோடு உரையாடுதல் எனக் கருதக்கூடாது என்ற எண்ணம் என்னுள் உருவாகியது.

கவிதை வாசகனை ரசிக்கச் செய்கிறது. கட்டுரை வாசகனை சிந்திக்க வைக்கிறது. நாவல் வாசகனை அமைதியடைய வைக்கிறது. சிறுகதை ஒன்று மட்டும்தான் அவனோடு உரையாடுகிறது.

எந்த ஒரு சிறுகதை வாசகனோடு உரையாடுகிறதோ அந்தச் சிறுகதை வெற்றியடைகிறது. உரையாடுதல் என்பது சம்பவங்களோடு ஒன்றிப்போதல் எனலாம். சிறுகதையின் பாத்திரத்தை வாசகன் சுவீகரிக்கும் நிலை ஏற்படும்போது அவனது உரையாடலும் ஆரம்பமாகிறது எனலாம். அந்த உரையாடலின் தொடர்ச்சியாக எழுத்தாளனைவிட வாசகன் வேகமாகப் பயணிக்கத் தொடங்குகிறான். இந்தப் பயணம் அநதக் கதையின் முடிவைத் தீர்மானிக்கும் வரைக்கும் நடைபெறுகிறது. வாசகனிடம் அந்தப் பொறுப்பை விட்டுவிட்டால் அந்தக் கதை மூலமாக எழுத்தாளனுக்கு வெற்றிகிடைக்கிறது. அல்லவெனின் தோற்றுப் போகிறான்.

வாசகன் தீர்மானிக்காமல் முடிவை எழுத்தாளன் தீர்மானிக்கும்போது அது பிரச்சாரமாக மாறிவிடுகிறது. இங்கே எழுத்தாளனுக்கு என்ன வேலை என்கின்ற வினா எழுகின்றது. வாசகனோடு உரையாடும்போது ஒவ்வொரு வசனத்திலும் ஒவ்வொரு சொல்லிலும் எழுத்தாளன் தன் ஆழுமையைக் காட்டவேண்டும்.

ஒரு சிறந்த பேச்சாளன் எப்படி ஒரு கூட்டத்தைத் தன் பேச்சுத் திறமையால் சில மணி நேரங்கள் கட்டிப்போட்டு வைத்திருக்கிறானோ அதேபோல் எழுத்தாளனும் வாசகனைத் தன்னோடு பயணிக்க வைக்கும் சாமர்த்தியசாலியாக இருக்கவேண்டும். தன்னுடைய மன எண்ணங்களின் அதிர்வெண்ணும் வாசகனின் உரையாடலின் அதிர்வெண்ணும் சமநிலையில் இருக்கக்கூடிய வண்ணம் எழுத்தாளன் சாணக்கியம் நிறைந்தவனாக இருக்கவேண்டும். அப்போதான் எழுத்தாளனின் எண்ணத்திலுதித்த முடிவை வாசகனும் தன் உரையாடலினூடாக அடைவான். அது வெற்றியாக மலரும். இந்த நிலையை எய்துவதற்காக எழுத்தாளன் சரியான உத்திகளைப் பாவிக்கவேண்டும் அல்லது புதிய உத்திகளை உருவாக்க வேண்டும். எல்லா இலக்கிய வடிவங்களினின்றும் சிறுகதை இங்கேதான் தனித்து நிற்கிறது. பக்கங்களின் எண்ணிக்கையும் வாசிப்பு நேரமும் சிறுகதையைத் தீர்மானிக்கும் என்கின்ற கருதுகோள் வெறும் ஆரம்பநிலை மட்டுமே. அடுத்தநிலைக்குத் தன்னை நகர்த்திச் செல்பவனே வெற்றி பெற்ற சிறுகதை ஆசிரியனாகின்றான்.

***மு. தயாளன்***

**பத்மா சோமகாந்தன் மறைந்தார்-- மட்டக்களப்பு வசந்தன் கூத்தினைப் பதிப்பித்து வெளி யுலகிற்கு அளித்த சதாசிவ ஐயரின் தம்பி மகள் இவர்**

---

சென்ற வாரம் ஒரு காலைப்பொழுதில் எனது தொலைபேசி மணி ஒலித்தது மறுமுனையில் பழக்கமான பத்மாசோமகாந்தனின் கணீரென்ற குரல் "என்னப்பா சுகமாக இருக்கிறீர்களா? சித்திரா நலமா? உங்களையெல்லாம் காணாவும் கதைக்கவும் கொள்ளை ஆசையாக இருக்கிறது' என்ற பத்மாவின் குரலில் ஒரு பெரும் சோகம் இழையோடியது. சிறு கதை எழுத்தாளர் அல்லவா? கதை கூறுவது போலவே கதைப்பார். ஒரு நீண்ட உரையாடலாக எமது தொலைபேசி உரையாடல் தொடர்ந்தது, அதில் நாம் இருவரும் பழைய காலங்களை நினைவு கூர்ந்தோம் அவரது கணவர் செயல் வீரர் சோமகாந்தன், கைலாசபதி, சிவத்தம்பி ஞானா பிரேம்ஜி, டானியல், ரகுநாதன், வித்தியானந்தன், கணபதிப்பிள்ளை, சில்லையூர் செல்வராஜன் காவலூர் ராஜதுரை இளங்கீரன், நந்தி , முருகையன் சிவானந்தன் நீர்வைபொன்னையன் செ.யோகநாதன் பெனடிக்ட் பாலன் புதுவை ரத்தினதுரை எனப் பலரை நினைவு கூர்ந்தோம். இதில் எவரும் இப்போது இல்லை காலமாகிவிட்டார்கள் இவர்கள் அனைவரும் இலக்கியத்தால் சோமகாந்தனுக்கு மிக நெருக்கமானவர்கள்.



அவரினால் பத்மாவுக்கு நெருக்கமானவர்கள். ஒரு சிலரைத் தவிர அனைவரும் சோம காந்தன் வீட்டில் சிற்றுண்டி அல்லது உணவு உண்டவர்கள். பத்மாவின் கைப்பாக ருசியையும் அவர் உரையாடல் ருசியையும் சுவைத்தவர்கள். அவர்களுள் நானும் ஒருவன் "இருவரும்தான் உயிருடன் இருக்கிறோம் போல இருக்கிறது பத்மா" என்றேன் சிரித்துகொண்டே "அப்படிச் சொல்லாதீர்கள் நீங்கள் நீண்ட காலம் இருக்க வேண்டும்' என உணர்ச்சி பொங்க தன் வழமையான கம்பீரக்குரலில் கூறினார் பத்மா. 'நிரந்தரம் இன்மைதானே நிரந்தரம்" என்றேன். இருவரும் பலமாகச் சிரித்துகொண்டோம். "கொழும்புக்கு விரைவில் வருவேன் வந்தால் அவசியம் வருவேன் சந்திப்பேன்' என்றேன். இன்னும் ஒரு மாத காலத்துள் சந்திப்போம் எனத் தீர்க்கமான முடிவு எடுத்தோம். இனிச் சந்திப்பே இல்லை. இனிச் சந்திப்பு அவர் கருத்தியலின் படி வேறு இடங்களில்தான் நடைபெற முடியும். இந்த பத்மாவையும் அவர் கணவன் சோம காந்தனையும் நான் எனது 20 ஆவது வயதில் 1960களில் யாழ்ப்பாணத்தில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பருத்தித் துறையில் நடத்திய பாரதியாரின் ஞானகுருவான யாழ்ப்பாணச் சுவாமிகள் கவிஅரங்கிற்கு சென்றபோதுதான் சந்திக்கிறேன். யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை புறப்பட்ட எழுத்தாளரைச் சுமந்த பஸ்ஸில் இவர் தன் கணவருடன் வந்திருந்தார், அப்போது அவர்கள் இளம் தம்பதியினர். புது மணத் தமபதியினர். சோமகாந்தன் ஓடி ஓடி வேலை செய்தார். பருத்தித்துறையில் யாழ்ப்பாணச் சுவாமிகள் கவி அரங்கம் நடைபெறுகிறது. நான் கவிதை வாசிக்கிறேன் அனைவருக்கும் அறிமுகமாகின்றேன். மட்ட்க்களப்புப் பையன் என அறிமுகமாகிறேன். அதற்குச் சிபார்சு செய்து என்னை அங்கு பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து அழைத்துச் சென்றவர் கைலாசபதி. அக் கவிஅரங்கம் முடிய தேடி வந்து மனம் நிறையப் பாராட்டினார் இந்த பத்மா. அன்று ஏற்பட்ட அந்த உறவு சென்ற வாரம் வரை தொடர்ந்தது. இன்று நேற்று உறவா?. ஏறத்தாள ஆறு தசாப்த அறாத உறவு இலக்கியம் ஏற்படுத்திய உறவு பத்மா பூணூல் அணிந்த பகுதியினர் ஆயினும் அவர் வீட்டில் அனைவருக்கும் அவர் அமுதளித்தார். அதனால் அவர் சனாதனிகளின் கண்டனத்திற்கும் உள்ளானர். ஆனால் அக் கண்டனங்கள் பற்றி அவர் சிறிதும் கலங்கியதில்லை சமூகக் கட்டுகளிலிருந்து விடுதலை பெற அவர் சந்தித்த சவால்களை பெரும் எதிர்ப்புகளைக் கதை கதையாக அவர் கூறுவார், சோமகாந்தன் உறவு அவருக்குப் பெரும் துணையாயிற்று, துணிவாயிற்று. இருவரும் இணைந்தே செயற்பட்டனர். கொழும்பில் நானும் சித்திரலேகாவும் வாழ்ந்தபோது சோமகாந்தனும் பத்மாவும் எங்கள் குடும்ப நண்பர்களாயினர். சித்ரலேகாவும் பத்மாவும் நெருக்கமாயினர். பெண்ணியம் இருவரையும் இணைத்தது. சோமகாந்தன் இறப்பின் பின் சில காலம் பத்மா சோர்ந்திருந்தார். பல சவால்களைச் சந்தித்தார் எனினும் இயங்கினார். எழுதினார். செயற்பட்டார். இடைக்கிடை கொழும்பு தமிழ் சங்கத்தில் காணுவேன். பத்மாவுக்கும் மட்டக்களப்பிற்குமிடையே ஒரு தொடர்பு இருந்துள்ளது. மட்டக்களப்பு வசந்தன் கூத்தினை 1940 இல் பதிப்பித்து வெளியுலகிற்கு அளித்த சதாசிவ ஐயரின் தம்பி மகள் இந்த பத்மா என்பதுதான் அந்த உறவு. சதாசிவ ஐயர் அக்காலத்தில் மட்டக்களப்பில் கல்வி அதிகாரியாகப் பணி புரிந்தவர் பத்மாவிடம் பழைய நினைவுகள் பல இருந்தன. அவை ஆவணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் தவறிவிட்டோம் அவரையும் தவறவிட்டோம். பத்மாவுக்கு எனது ஆழ்ந்த அஞ்சலிகள்

- **பேராசிரியர் மௌனகுரு (நன்றி : முகநூல்)**

# வாசிப்பனுபவம் 1

**மு. தயாளன்**




***நூல்: ஒன்பதாவது குரல்***

***ஆசிரியர்: தாட்சாயினி***

***பக்கம்: 168 கதைகள்: 15***

***வெளியீடு: ஜீவநதி***

***கதைகளின் காலம்: 2000 - 2019***

சில கதைகளை வாசிக்கும் போது மனதுள் ஒரு உவகை ஏற்படும். அப்படி ஒரு உவகையை ஏற்படுத்தியது இந்தப் புத்தகத்திலுள்ள கதைகள். முன்பு சிறுகதை எழுதிய சிறுகதை ஆசிரியர்களான செ. கணேசலிங்கம், செ. கதிர்காமநாதன், டானியல், நந்தினி சேவியர் , அகஸ்தியர் , செ. யோகநாதன் போன்றவர்களின் கதைகளில் தோன்றிய கதை மாந்தர்களும் சம்பவங்களுக்கான கருத்துப் புலன்களும் ஒரு வகையில் வர்க்க சார்பை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளமையை அவதானிக்கலாம். இனரீதியான யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்பு கதைகளின் பின்புலங்கள் இனப் போராட்டம் சம்பந்தமாகவும் போரின் பின்னான விளைவுகள் சம்பந்தமுமாகவே உள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஒன்பதாவது குரல் சிறுகதைத் தொகுப்பும் இவ் வகையானதே. கதைகளைச் சொல்லுகின்ற பாங்கு மிக அற்புதமாக உள்ளது. தெளிந்த நீரோடைபோல எழுத்து நடை உள்ளது. சொல்லப்படவேண்டிய கருத்துகள் துல்லியமாகச் சொல்லப்பட்டுள்ளது. புதிதாகச் சிறுகதைத் துறைக்குள் புகுபவர்கள் நிச்சயமாக இந்தத் தொகுப்பைப் படிக்கவேண்டியது மிக அவசியமாகும். இனி கதைகளைப் பார்ப்போம். ஒரு பிள்ளையாரை வைத்து இந்தக் கதை நகர்கிறது. **"சாப்பாடு வேண்டும், தண்ணீர் வேண்டும் , மருந்து வேண்டும் என்று கேட்டவர்கள் ஒரு நாள் கேட்டார்கள் எங்களுக்குக் கடவுள் வேண்டும், கோவில் வேண்டும்"** என்று. இப்படி மனிதர்களின் மனநிலையை அழகாகப் படம் பிடித்துள்ளார். பிள்ளையாரைச் சுற்றிப் பல பிரச்சினைகளைக் கூறிவந்த இவர் சிறுகதையின் முடிவாக வாசகன் தானாகவே இந்தப் பிள்ளையாரால் ஆகப் போவது எதுவுமில்லை. அவர் எப்போதும் சிரித்துக் கொண்டே இருப்பார் என்று எண்ண வைத்துள்ளார். இந்த முடிவை ஆசிரியர் கூறவில்லை. வாசகனான நான் முடிவுக்கு வந்தேன். இதுதான் ஒரு சிறு கதையின் வெற்றி. இரண்டாவது கதை சிவப்புக் கோடு. இது ஒரு பெண்ணின் நாளாந்த வாழ்க்கை அனுபவத்தை வெளிக் கொணருகின்றது. இந்தக் கதையில் இதுவரை யாருமே வெளிப்படுத்தாத பெண்ணுக்குள் வாழும் சுயநலக் குணாம்சத்தைத் துணிவாக வெளிக் கொணர்ந்துள்ளார். அடுத்த கதை சாருமதியின் வீடு. இது நட்பின் வெளிப்பாடு. சாருமதியின் நண்பியாக ஆசிரியரே இருத்தலால் கதை இலகுவாக நகர்கிறது. சிறுகதைகளில் பெரும்பான்மையானவர்களின் கதைகளில் அழகியற் கூறுகள் வலிந்து திணிக்கப்படவில்லை.. தாட்சாயினியின் கதைகளில் அழகியல் இயல்பாகவே வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கதையில் சாருமதியின் வீட்டைப் பற்றிக் கூறுவதைப் பாருங்கள். **வாயிலின் இரண்டு பக்கமும் சரிந்து வீட்டை நோக்கிச் செல்லும் பச்சைச் செடிகள் மூன்றடிக்கு அழகாகக் கத்தரிக்கப்பட்டிருக்கும். புல்வேலி போல் பசுமை.....**இப்படிச் செல்கிறது. இந்த விவரிப்பு அந்த வீட்டை என் கண்முன்னே கொண்டு வந்தது. உங்களுக்கும் அந்த அனுபவம் வரவேண்டும் என்பதற்காக நான் முழுவதையும் குறிப்பிடவில்லை. அடுத்த கதை தொடராத சொந்தங்கள். இது நிற வேறுபாட்டால் திருமணம் குழம்பினாலும் இங்கு வரும் ஆசிரிய மாணவ உறவு நிலை என்னைக் கவர்ந்தது. அடுத்தது ராகவி ஆகிய நான். இந்தத் தொகுப்பில் சிறந்த கதையாக இது எனக்குப்பட்டது. போர்க்காலச் சூழலையும் அதன் தாக்கங்களையும் ஏற்றுக் கொள்ளக் கூடியவையில் வந்த முதற் சிறுகதை இதுவாகத் தானிருக்க முடியும். அடுத்து எனக்குப் பிடித்த கதை நர்மதாவின் கடிதங்கள். அருமையான கதை விபரிப்பு. தமிழ் இனத்தின் போராட்ட வரலாறு மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது. அடுத்து என்னைப் பிரமிக்க வைத்த கதை நியாயங்களும் கேள்விகளாகின்றன என்பதாகும். புத்த கோவில் பற்றி கூறியவிதம் என்னையும் கோவிலுக்குள் அழைத்துச் சென்றது. அமந்தியை அவன் கையாண்டவிதம் சரியாகப்படவில்லை. இதில் கொஞ்சம் கூடுதலான கவனம் செலுத்தியிருக்கலாம். தெளிவான சமூகப் பார்வை கொண்ட தாட்சாயினியின் பல கதைகள் உலகத் தரம் வாய்ந்தவையாக இருப்பது மனதிற்குச் சந்தோசத்தைத் தருகிறது. இன்னும் பல கதைகள் வெளிவரவேண்டும். காத்திருக்கிறோம்.

எங்கட புத்தகங்கள் நடாத்திய சிறுகதைப் போட்டியல் முதற் பரிசு பெற்ற கதை

# சாமி



நெல்லை லதாங்கி

காலை வெய்யில் மேனியைச் சுட்டெரிக்க மெதுமெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தார் மாயவன். வெய்யில் சுட்டெரித்த விதம் நேரம் பத்து மணியைத் தாண்டிவிட்டது என்பதை உணர்த்தியது. மேற்கு வாசல் குடில் என்பதால் பத்து மணிக்குமேல்தான் முன்னுக்கு வரும். மகள் பேரப்பிள்ளைகளுடன் சேர்ந்து படுக்க இடம் போதாமையால் முற்றம் தான் அவருடைய படுக்கை இடம். மழைக்காலம் என்றால் சகோதரியின் விறாந்தையில் தஞ்சமடைவார். மெது மெதுவாக எழும்பி அருகிலிருந்த பிரம்பை எடுத்து ஊன்றியபடி தனது காலைக் கடன்களை முடிக்க ஆயத்தமானார். வயது எண்பதைத் தாண்டிய போதும் தனது கடமைகளை ஆறிஆறிச் செய்து முடிப்பார். அதற்குக் காரணம் அந்தக் காலத்து உணவு வகைகள்தான் என்று அடிக்கடி கூறிக்கொள்வார்.

"ஒடியல் புட்டும், பழஞ்சோறும், பழைய மீன் குழம்பும் சொல்லி வேலையில்லை." உதட்டினைக் குவித்து உறிஞ்சி உச்சுக் கொட்டி அவர் சொல்லும் அழகைப் பதிவு செய்து பேணவேண்டும் என்று, மகள் குந்தவை அடிக்கடி சொல்வாள். மாயவன் முகத்தைத் தனது பழைய சறத்தால் துடைத்தபடி

"பிள்ளை .. தேத்தண்ணியைத் தாவன்"

முற்றத்தில் போடப்பட்டிருந்த பின்னல் கழன்ற நாற்காலியில் ஓரமாக அமர்ந்து கொண்டார். தேநீர்க் குவளையுடன் வெளியே வந்த குந்தவை கல்பணிஸ் ஒன்றையும் நீட்டினாள்.

"விடியக்காத்தாலை உந்த இனிப்பை … நீ தேத்தண்ணியை மட்டும் தா" குந்தவைக்குக் காரணம் சொல்ல முடியவில்லை. சீனி போடாத தேத்தண்ணி. எப்படி ஐயாவுக்கு ? தயங்கியவளை நிமிர்ந்து நோக்கினார் மாயவன். "இல்லை ஐயா காலைச் சாப்பாடும் இதுதான்" மென்று விழுங்கிக் கூறி விட்டாள். மாயவனால் புரிந்து கொள்ள முடிந்தது. இடைக்கிடை எடுத்துப் போட்ட கேவியோ இப்ப இரண்டு கிழமை, நாலு கிழமை எண்டு நீடிச்சால், அன்றாடம் காய்ச்சி பாவம் இவள், எங்கை போவாள்? தேடிப்பிடிச்சு ஒருத்தனைச் செய்து வைச்சன். வளர்ப்புச் சரியில்லாமல் வளர்ந்த பிள்ளை. எப்பிடி ஒத்துப் போகும்? அது தாயின்ரை பாலைக் குடிக்கத் தாய் வீட்டை விட்டிட்டு ஓடியிட்டுது. மனதிற்குள் பொருமிக் கொண்டவர்.

"கல்பணிஸ்ஸை பிள்ளையளுக்குக் குடு மோனே" என்றவாறு தேத்தண்ணியை வாங்கிக் குடிக்கத்

தொடங்கினார். இனிப்பில்லாத தேத்தண்ணி. மனைவி தங்கம்மாவை நினைவுக்குக் கொண்டு வந்தது. ஊதாரி! எத்தனை தடவை சொன்னாலும் ஊருக்குக் கொட்டிக் கொட்டிக் கொடுத்தாள். சேமிப்புத்தான் உழைப்பைவிட முக்கியம் எண்டு எத்தனை தடவை சொல்லியும் கேட்டாளே! இப்ப என்ரை பிள்ளை கஸ்ரப்படுகுது. தேநீரை மடமட எனக் குடித்தவர்

“சரி பிள்ளை …… மத்தியானம் என்ன மாதிரி”

“அது தானய்யா நானும் யோசிக்கிறன். ஒரு சுண்டு தீட்டல் இருக்கு, உப்புக்கஞ்சி காய்ச்சலாம் பிறகு…. இரவுக்குத்தான் என்ன செய்யிறதெண்டு” கூறியவள் யோசித்துவிட்டு

“ஐயா உவ சரசக்கா வீட்டை உதுக்குள்ளாலை போகலாம்தானே? இந்தக் காதிலை இருக்கிற தோட்டைக் குடுத்து.. ” குந்தவை கூறி முடிக்க இல்லை. “பிள்ளை நீ எந்த உலகத்திலை இருக்கிறாய். வட்டிக்குக் குடுக்கிறவை, வட்டிக்கு வாங்குறவை எண்டு யாரையும் தெரிஞ்சால், போன் நம்பர் நியூசிலை சொல்லுறாங்களாம். அந்த நம்பருக்குத் தெரியப்படுத்தச் சொல்லி. நீ என்னடா எண்டால்…” உலக விளப்பம் தெரிந்ததால் கூறினார் மாயவன். “ரீச்சர் இப்ப வீட்டிலை நிக்குறதாலை, அவவும் இப்ப வேலையொண்டுக்கும் கூப்பிடுறதில்லை. அல்லது உள்ளுக்குள்ளாலை போய் ஏதாவது செய்து கொடுத்தால் அஞ்சு பத்துத் தருவா”

“அரசாங்கமும் என்ன செய்யிறது. எத்தனைக்கோ தப்பிப் பிழைச்ச மக்களும் இதுக்கு வீரம் பேச முடியாமல் இருக்குதுகள்” பெருமூச்சுடன் தொடர்ந்தார் மாயவன். “முந்தித் தமிழருக்குத்தான் மாறி மாறி உயிர்ப்பறிப்பு. ஆனால் இண்டைக்குக் கண்ணுக்குத் தெரியாத ஒரு கிருமி உலகத்தையே புரட்டிப் போட்டிட்டுது” மாயவன் கூறி முடிக்கவில்லை. “கையுக்கையே உலகம் வந்திட்டுதெண்டு இந்தக் காலத்துப் பெடியள், கையப் பொத்தி, விரிச்சு, ஊதி ஊதி, அபிநயம் செய்தாங்கள். இப்ப எங்கை உந்த மூஞ்சையளைத் தொங்கப்போடப் போகினம்” பக்கத்துவீட்டுப் பரமசிவம் நையாண்டியாகக் கூறிய வண்ணம் மாயவனுக்கு அருகில் இருந்த பலகைக் குந்தில் அமர்ந்துகொண்டார். “கவனம் பரமு, சும்மா அவசரத்துக்கு எண்டு மண் மூட்டை அடிச்சு, மேலை பலகை போட்டிருக்கு. பலகையும் உக்கின பலகை. எதுக்கும் கொஞ்சம் அவதானமாய் இருந்துகொள். கையை சோப் போட்டு அடிக்கடி கழுவுறனி தானே?. தும்மல் வந்தா தும்மியிடாதை. மீறி வந்தால் தோளிலை போட்டிருக்கிற துவாயைப் பொத்திக் கொண்டு தும்மு. எதுக்கும் கொஞ்சம் தள்ளியும் இருந்து கொள்” வார்த்தைகளை அடுக்கிக் கொண்டு போனவரை “ அண்ணை என்னண்ணை இப்பிடிப் பயப்படுறியள். எங்கடை பக்கம் ஒருத்தருக்கும் இல்லைத்தானே .”

“தம்பி பரமு அப்பிடிச் சொல்லாதை கண்டியோ. உங்கை பக்கத்து வளவிலை, ஆரோ பாஸ்டற்றை போதனைக்குப் போனதுகளாம். அதுகள் தாங்கள் போகயில்லையெண்டு பொய் சொல்லிக் கொண்டிருக்குதுகளாம், பிஎச்ஐ, ஜிஎஸ்ஸெல்லாம் வந்து விசாரிச்சும் போகல்லையெண்டு சொல்லுதுகளாம்” பதட்டத்துடன் கூறினார் மாயவன்.

“நானும் அறிஞ்சனான். கைக்குட்டையோடை தான் திரியுறன். பழைய துணியிலை பவளம் கையாலை தைச்சுத் தந்தவள். இப்ப வீடு வழிய திரியவும் ஒரு மாதிரி இருக்கு. நாங்கள் போறதைச் சிலதுகள் விரும்பாதுகள். இஞ்சை வரவும் யோசிச்சுக் கொண்டு வந்தனான்.” தயங்கித் தயங்கிக் கூறிய பரமசிவம், குந்தில் வைத்த பலகை தாங்கிறதோ என்று அடிக்கடி பரிசோதித்துக் கொண்டிருந்தார்.

“நீ பயப்பிடாமல் இரு. பலகை முறியாது. என்ன, இஞ்சையும் சின்னஞ்சிறிசுகள் இருக்குதுகள். நான் இண்டைக்கோ நாளைக்கோ எண்டு இருக்கிறன். அப்பிடிப்பட்ட நானே வெளியிலை திரியுறதில்லை.

“நீங்கள் சொல்லுறது சரியண்ணை. மூச்சும் விடமுடியாமல் ஒருதற்றை அனுசரிப்பும் இல்லாமல் அப்பிடி ஏன் வில்லங்கத்துக்குச் சாவான். அது மாத்திரமில்லை அண்ணை, பிள்ளையளுக்கும் நாங்கள் தொற்றை ஏற்படுத்தியிடுவம். உங்கை எத்தனையோ நாடுகள் முதலிலேயே சரியாகக் கடைப்பிடிச்சு வீட்டிலை இருந்திருந்தால் இப்பிடிப் பெரிய அழிவுகள் ஏற்பட்டிருக்குமோ?” மாயவனின் வார்த்தைகளுக்குக் குறுக்கீடு செய்து தனது ஆதங்கத்தையும் கொட்டித் தீர்த்து முடித்துக் கொண்டார் பரமசிவம்.

“தாத்தா, தாத்தா உந்த விமானத்தையும் நிப்பாட்டியிருந்தால், பாஸ்டரும் இஞ்சை வந்திருக்கமாட்டார். யாழ்ப்பாணத்திலை ஒரு நோயாளியும் இனங் காணப்பட்டும் இருக்காயினமாம்”

பேத்தி ரஞ்சிதா தனது காதில் விழுந்த விடயங்களுடன், தான் ஆரம்பக்கல்வியில் இனங்காணல் என்ற சொற்பதத்தைத் தெரிந்து வைத்திருக்கிறேன் என்ற பெருமையிலும், திக்கித் திக்கித் தனது கருத்தை தன் மழலை மொழியில் கூறினாள். “உங்கடை பேத்தி சொல்லுறதும் சரிதான் அண்ணை, வெளிநாட்டுக்காரராலை தானை எங்கடை நாட்டுக்கே இந்தக் கொரோனா வந்தது. வில்லங்கத்தை விலை கொடுத்து, நாங்கள் தானே வாங்கினனாங்கள். பரமசிவம் பேத்தியின் கருத்தை ஆமோதித்து இவ்வாறு கூறினார். “ஆரிலையும் குறை கூறி, ஒண்டும் ஆகப் போறதில்லை. மேலை இருக்கிற ஒருத்தன் எப்படி எழுதினானோ அப்படித்தானை எல்லாம் நடக்கும்”.

“உண்மைதான் ஐயா இந்தியாவில டாக்டரும், ஒரு நடிகருமாம் பெயர்கூட ஏதோ சொன்னவை. கொரோனா விழிப்புணர்வு வீடியோவை நெற்றிலை போட்டு மூண்டு நாள் ஆகேல்லையாம். இருந்தாப்போல பெடியன் மாரடைப்பு வந்து செத்துப் போயிட்டுதாம். வயதும் ஏதோ முப்பத்தாறு தானாம்” தந்தை மாயவன் கூறியதை ஆமோதித்துத் தான் அறிந்த தகவலையும் முன்வைத்தாள் குந்தவை. “சரியண்ணை நானும் வந்து கனநேரமாகியிட்டுது தலையிலை தண்ணி வாக்காமல் உள்ளையும் விடாதுகள்” எழுந்து கொண்ட பரமசிவம், தனது கைக்குட்டையால் மூக்கை மறைத்துக் கட்டிய வண்ணம் புறப்படத் தயாரானார்.

“முந்தி செத்தவீடு, ஆஸ்பத்திரி, துடக்குவீடு இப்படிப்பட்ட இடங்களுக்குப் போய் வந்த பிறகு, முழுகுங்கோ என்று சொன்னால் எங்களை நையாண்டி செய்யுங்கள். இப்ப……….” கெக்கட்டமுட்டிச் சிரித்துக் கொண்டார் மாயவன். அவரது சிரிப்புக்கு பரமசிவத்தின் முகமூடியும் ஒரு காரணம் என்பது பரமசிவத்திற்கு விளங்கவில்லை. கண்ணுக்குக் கண்ணாடி, மூக்கை மறைத்துக் கைலேஞ்சி, கழுத்தை மறைத்துப் போர்த்திய துவாய், விண்வெளி வீரர்களைக் கொண்டு வந்தது. “நானும் உங்கடை காலத்து ஆள்தான். ஏதோ இந்தக் காலத்துப் பெடியளுக்குச் சொல்லுமாப்போலை சொல்லுறார். அவற்றை அறிவு அவ்வளவுதான்” “என்ன பரமு ஏதோ யோசிக்கிறாய் போலை” மாயவன் பரமசிவத்தைச் சுயநினைவிற்குக் கொண்டு வந்தார்.

“ஒண்டுமில்லையண்ணை” பரமசிவம் புறப்பட்ட பின்பு சாணம் கலந்த நீரை முற்றம், சுற்றுச்சூழல், பரமசிவம் இருந்த இடங்கள் எனச் சுற்றிச் சுற்றித் தெளித்தாள்.

“பிள்ளை மஞ்சளைக் கலந்து உள்ளை தெளி” மாயவன் உலகம் புரியாது கூறினார். “மஞ்சளுக்கு எங்கை ஐயா போறது? காசிருக்கிற சனங்கள் கிலோக் கணக்கிலை வாங்கிக்குவிக்க, கடையளிலை மஞ்சள் இருக்குமே? அதிலும் சில கடையிலை அதிகமாய்ச் சாமான் வாங்குறவைக்கு ஐம்பது கிராம் மஞ்சள் குடுத்தினம். ரண்டு கிலோ அரிசி, ரண்டு கிலோ மா, அரைக்கிலோ சீனி எண்டு, வாங்கிற எங்களுக்கு, எங்கை மஞ்சள் தரப்போகினம்?”

குந்தவையின் வார்த்தைகள் அவர்களின் வறுமைக் கோட்டைக் காட்டி நின்றது. இந்தக் கோதாரி விழுந்த கொரோனாவால் பாதிக்கப்படுவது தினக்கூலிகள் தானே! பக்கத்து ஊரிலை வெங்காயம் வைக்கப் போவது, வீட்டுக்கு வீடு வேலை செய்வது, நீத்துப்பெட்டி, திருகணை, பாய் என்று வீட்டில் இரவுப் பொழுதில் இளைப்பது இவையெல்லாம் நின்றால் குந்தவையால் என்ன செய்யமுடியும். கையில் இருந்த சிறிய சேமிப்பில் தான் உந்த அரிசி, மா, சீனி. குந்தவையின் கரங்கள் சாணியைத் தெளித்ததே தவிர மனம் சொல்ல முடியாத துயரங்களைச் சுமந்த வண்ணம் இருப்பதை மாயவனாலும் உணர முடிந்தது.

“சரி பிள்ளை மஞ்சள் இல்லாட்டில் என்ன! பத்தையுக்கை வேப்பந்துளிர் இருக்கும். எடுத்து அரைச்சு பிள்ளையளுக்குத் தேய்ச்சு நல்லாய்க் குளிக்கவார். அதுகள் வெளியிலை போறேல்லைத்தானே எண்டாலும்” மாயவன் கூறிக் கொண்டிருக்கையில் நாய் குரைக்கும் சத்தம். இரண்டு வாலிபர்கள் கைகளில் சிறிய பொதியுடன் வந்து கொண்டிருந்தார்கள். குந்தவை நாயைக் கலைத்தாள்.

“வாங்கோ தம்பியவை கொஞ்சம் எட்டத்திலை நிண்டு கதையைச் சொல்லுங்கோ” குந்தவைக்கு ஒரு மாதிரியாகப் போய்விட்டது. பக்கத்து அக்கத்து வீட்டுக்குப் போறதாலை அவளுக்கு விளங்கிவிட்டது.

“சமுத்திகாரருக்கு நிவாரணம் குடுக்கத்தான் இந்தக் கொரோனாப் பீதியிலும் அதுகள் திரியுதுகள். ஐயா என்னடா எண்டால்… தம்பியவை வாங்கோ ஐயா … தெரியாதே! கொரோனாவைப் பற்றிய செய்திகள் பலரும் பலவிதமாய்ச் சொல்லக் கொஞ்சம் பயப்பிடுறார்” வந்த இளைஞர்கள் அவற்றைப்

பரவாய்ப்படுத்தவில்லை. ஆனாலும் "இப்படிப்பட்ட விழிப்புணர்வு தான் அன்றி இப்ப தேவை. இந்தாங்கோ உங்களுக்குரிய நிவாரணப் பொதி, சமுர்த்திகாரருக்கு நாங்கள் தனிப்பட்ட முறையிலை குடுத்துக்கொண்டு வாறம்" சாணிக்கையுடன் நின்றதால் மாயவனின் அருகில் இருந்த பலகைக்குந்தில் வைத்துவிட்டுச் சென்றார்கள். குந்தவை கைகளை நன்றாகக் கழுவிவிட்டு வெறுமையாக இருந்த பிளாஸ்ரிக் போத்தல்களுக்குள், ரின்களுக்குள் பைக்கற்றுக்களை வெட்டி வெட்டிப் போட்டு விட்டு, அனைத்துப் பைகளையும் குப்பைக்குள் போட்டு எரித்துவிட்டு, மீண்டும் கைகளைக் கழுவித் துடைத்தவாறு, வந்தவளைக் கூர்ந்து பார்த்தார் மாயவன். குந்தவையின் முகத்தில் ஒரு பிரகாசம். மதியம் என்ன செய்வதென்று குழம்பித் தவித்தவளுக்கு இது பெரிய கொடை தானே. ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணம் எந்த மூலைக்குக் காணும்? நாட்கள் நகர்ந்தனவே தவிர, கேவி ஓடர் எடுத்த பாடில்லை. நாட்கள் வாரங்களாகி, மாதமாகும் நிலை வந்துவிட்டது. மீன்காரனின் ஹோண் சத்தம் குந்தவையை விழிக்கச் செய்தது. "அப்ப நேரம் பத்தைத்தாண்டி இருக்கவேணும்" உறக்கம் வராது புரண்டு புரண்டு படுத்தது நினைவுக்கு வந்ததே தவிர, உறக்கம் கண்களைத் தழுவியது எப்போது என்று நினைவிலில்லை. "சரி எழுந்து தான் என்ன செய்வது?" பிளாஸ்ரிக் டப்பாவெல்லாம் வெறுமையாக அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் கிடந்தன.

இந்தப் பிஞ்சுகளுக்கு என்னத்தை குடுக்கிறது? தந்தை நடப்பதும் இருப்பதும், படுப்பதுமாக, உறக்கம் இல்லாது இரவிரவாகத் தவித்தது, மனதைச் சல்லடை ஆக்கிக் கொண்டிருந்தது. வெறும் நீரை மாத்திரம் ஐயா பருகிவிட்டு……… குந்தவையின் விழிகளிலிருந்து கண்ணீர் சரமாரியாகப் பொழிந்தது. மெதுமெதுவாகப் பிள்ளைகள் அருண்டுவிடாமல் எழுந்து கொண்டாள். வாசலில் பலாமரத்தையே வைத்த கண் வாங்காமல் ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார் மாயவன். குந்தவையைப் பார்த்தவர்

"பிள்ளை இந்தப் பலாவுக்குக் கூட ஈரமில்லை. நிழலை மாத்திரம் தந்தால் போதுமென்றிருக்குது"

மாயவன் சொன்ன அர்த்தத்தைப் புரிந்து கொண்டாள் குந்தவை. வழமையாக இந்தக்காலத்தில் சிறியதொரு வருமானத்தை ஈட்டித் தந்த பலா இப்போது தான் பிஞ்சுகளைச் சுமந்த வண்ணம் நின்றிருந்தது.

"ஐயா பொலிஸ் என்னைப் பிடிச்சு இருத்தினாலும் பரவாயில்லை ரீச்சர் வீட்டை ஒருக்கால் போட்டுவாறன். இனி மானம் மரியாதை எண்டு பார்த்துக் கொண்டு இருக்கேலாது. ரீச்சரைச் சந்திக்க முடியல்லையோ எங்கையாவது திரிஞ்சு அலரிக்கொட்டையோடையாவது வாறன். இந்தப் பாலர்களும் நீங்களும் பசிக் கொடுமையிலை படுறபாட்டை என்னாலை பார்க்க முடியாது" நாதழுதழுக்க உடைந்த குரலில் கூறிய குந்தவை கடகடவென வெளியேறிவிட்டாள். மாயவனுக்குக் காலைக் கடனைக்கூட கழிக்க முடியாத அளவிற்கு கரங்கள் நடுங்கத் தொடங்கின. பிரம்பை ஊன்றி நடக்க முற்பட்டும் முடியவில்லை. வயிறு நிறைய உண்டால் தானே காலைக்கடன் கழிக்கிற தேவையும் இருக்கும். மாயவன் சமாளித்தவாறு மீண்டும் அமர்ந்துகொண்டார். 'என்னையும் கடவுள் வைச்சு இழுத்து, என்ரை பிள்ளைக்குப் பாரமாக்கியிட்டானே. இது தனிச்சிடும் எண்டுதானே இந்த உயிரை வைச்சுக் கொண்டு இருக்கிறன். இந்தக் கொரோனா கூட என்னைக் கொண்டு போகாதாம்' மனதிற்குள் பொறுப்பற்ற வார்த்தைகள் படபட என அடித்தாலும், 'கொரோனா தன்னை மட்டும் கொல்லாதே…….. தன்னைச் சார்ந்தவையையும் கொன்றுவிடுமே' தேவையற்ற சிந்தனைகள், பேரப்பிள்ளைகளின் மெலிந்த தோற்றம், குந்தவையின் குழி தோண்டிய கண்கள் மாயவனின் விழிகளை ஈரமாக்கின. இடை இடையே கிழிந்து தைத்த சாரத்தால் விழிநீரை ஒற்றிக் கொண்டார்.

'ஆண்டவா! பிள்ளையள் எழும்பக் கூடாது. எழும்பிப் பசிக்குதெண்டு கேட்டால்…….'

மாயவனுக்குத் தலையெல்லாம் சுற்றி மயக்கம் வருமாப்போல் இருந்தது. நிமிடங்கள் ஓடி மணித்தியாலம், ஆகவில்லை. படலை திறக்கும் சத்தம். மாயவனின் கண் பார்வையிலும் சிறிது மங்கல் அந்த மங்கிய ஒளியில் குந்தவை தலையில் ஒரு பொதியும் கைளில் சில பொதிகளுமாக வந்து கொண்டிருந்தாள் குந்தவை. அலரி விதையுடன்தான் வருவாள் என்று முடிவுகட்டி விட்ட மாயவனுக்குத் தலையில் பொதியைப் பார்த்ததும் சப்த நாடிகளும் ஒடுங்கிவிட்ட நிலை. பார்வை மங்கிய நிலையிலும் குந்தவையின் உதட்டோரங்களில் வெளி வந்த புன்முறுவல் மாயவனுக்கு நன்றாகத் தெரிந்தது. சுமந்து வந்தவற்றை உள்ளே வைத்து விட்டு

வெளியே வந்தவளை ஆச்சரியத்துடன் நோக்கினார் மாயவன்.''ஐயா அவ ரீச்சரில்லையப்பா.. சாமி. நான் எதுவும் சொல்லவுமில்லை . கேட்கவுமில்லை ஐயா. ஏதாவது வேலை செய்து தரலாம் எண்டு தான் வந்தனான் ரீச்சர்'' எண்டு சொன்னன். அவ

''குந்தவை நீங்கள் என்ன பாடுபடுறியளோ எண்டு நாளாந்தம் இவருக்கிட்டக் கதைப்பன். வந்தும் உங்கடை நிலை அறியேலாது. நான் மா மூடை, அரிசி மூடை எண்டு வாங்க,

'என்ன ரீச்சர் ரண்டு பேருக்கு மூடை மூடையாய் வாங்குறியள்' எண்டு ஒரு ரீச்சர் கண்ட இடத்திலை கேட்டவா. நான் அதுக்கு ஆருக்காவது உதவும் தானே, எல்லாரும் வசதியாய் எந்த நேரமும் கையிலை காசை வைச்சுக் கொண்டோ இருக்குங்கள் எண்டு கூறினனான்'' எண்டாப் பிறகு உள்ளை போய் ஐந்து கிலோ மாப்பை, புழுங்கல் அரிசி, சீனி, தேயிலை, அரைச்ச உப்பு பைக்கற், தூள் சாமான், தானும் கூட வாங்கி வைக்க இல்லை எண்டிட்டு, தூளுக்கெண்டு ஆயிரம் ரூபா காசும் தந்தா ஐயா'' குந்தவை உணர்ச்சி மிதப்பில் கூறக்கூற மாயவனுக்கு உடம்பெல்லாம் சில்லிடத் தொடங்கியது.

'' அது மாத்திரமில்லை ஐயா: சாமானுகள் முடிய வா. சாமானுகள் தன்னட்டையும் முடிஞ்சால். காசாய்த் தாறன் எண்டா'' மாயவன் தன் கையைக்காட்டி சளசளத்த தோலிலை

''கிள்ளிவிடு குந்தவை'' என்றார். குந்தவை சிரித்தவாறு கிள்ளிவிட்டு

''எல்லாமே நிஜம் தான் ஐயா இப்படிப்பட்ட புண்ணிய வாட்டியள் இருப்பதால்தான், இந்த கொரோனாத் தொற்றிலும் அங்கை இஞ்சையெண்டு உயிர் தப்பிக் கொண்டிருக்குதுகள்''

''சரி சரி, பிள்ளையள் அருளக்கிடையிலை ஏதாவது செய் பிள்ளை. அந்த ரீச்சர் ஆயுசுக்கும் நிம்மதியாய் வாழ வேணும்.''

கூறிய மாயவன் தனது சுருங்கிப்போயிருந்த வயிற்றைத் தடவிப் பார்த்தார். வயிறு நிரம்பிய ஒரு உணர்வு உடலிலும் உள்ளத்திலும் தெரிந்தது.

உலகின் முதற் சிறுகதைத் தொகுதி The sketch book. இது 1819 ஆம் ஆண்டு அமெரிக்காவில் வெளியானது.

சிறுகதை தோன்றிய முதல் இந்திய மொழி வங்காளம்

## மொழியியல்

உலக மொழிகளை எல்லாம் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பார்த்து மொழி இயல் என்கின்ற புதிய மொழியியல் விஞ்ஞானத்தை உருவாக்கி இருக்கிறார்கள்.

மொழியியல் விஞ்ஞானிகள் ஒரு மொழி முழுமை பெற்றுச் செயல்படுவதற்கு முப்பத்து மூன்று ஓவியங்கள் வேண்டும் என்று நிரூபித்திருக்கிறார்கள். ஓவியங்களை PHONEME போனீம் என்று மொழியியல் விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்.


இவர்கள் இப்போ கண்டு பிடித்திருப்பதை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே தொல்காப்பியத்தை எழுதிய ஆசிரியர் கண்டு பிடித்திருக்கிறார்.

தமிழின் முப்பத்து மூன்று எழுத்துகளும் தனித்துவமான ஓவியங்களைக் கொண்டுள்ளன . அதாவது போனீமைக் கொண்டுள்ளன என தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது.

## தொல்காப்பியம்

இயற்கைப் பிரளயத்தில் கடலால் கொள்ளப்பட்ட பழம் தமிழ் நாட்டில் இருந்து பலர் எஞ்சி இருந்த தமிழ் நிலப்பகுதிக்குத் தப்பி வந்தனர். அப்படித் தப்பி வந்தவர்களில் பாண்டிய மன்னன் சிவனும் இருந்தார். குமரிக் கண்டத்தை ஆண்டு வந்த சிவன் என்ற பாண்டிய மன்னன் மக்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பதற்காக எஞ்சி இருந்த அறிஞர் பெருமக்களைக் கொண்டு ஒரு சங்கம் அமைத்தார். அந்தச் சங்கத்தின் தலைவராகத் தாமே இருந்தார். அவரால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்ச் சங்கத்தின் தமிழ்த் துறைத் தலைவருக்கு அகத்தியர் என்று பெயர் சூட்டினார். அகத்தியர் பழந்தமிழ் மக்களின் வரலாற்று முறைகளையும் நாகரிக வளத்தையும் அவர்கள் பேசிய தமிழ் மொழியின் சிறப்பையும் எடுத்துக் காட்டும் இலக்கிய நயம் நிரம்பிய இலக்கண நூல் ஒன்றை இயற்றினார். அதற்குத் தொல்காப்பியம் என்று பெயரிட்டார்.

**- டாக்டர் நா. மகாலிங்கம் -**




இக்கதை 2015 ஆம் ஆண்டு எழுதப்பட்டு கிழக்குமாகாண மட்டத்தில் முதியோர் தினத்திற்கான சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கதை. முதன் முதல் சிறுகதை மஞ்சரியில் பிரசுரமாகிறது.
மு. தயாளன்

'காலமை அஞ்சு மணிக்கு மேல படுக்கக் கூடாது.' அப்பு எழுபது வருசத்துக்கு முந்திச் சொன்னது முகத்தில் அறைந்த வார்த்தைகளாக என்னை எழுப்பியது. காத்தால எழும்புவது முடியாத காரியமென்றாலும் அந்த அப்புவின் வார்த்தைகள் எப்படியாவது என்னை மீண்டும் படுக்கவிடாது. தாலாட்டும். அதட்டும். எரிந்து விழும். அந்த வார்த்தைகள்.... தான் இன்று என் முதுமைக்கு ஊன்று கோலாக என்னை நடமாட வைக்கின்றது. இந்த ரகசியம் என் எட்டுப் பிள்ளைகளுக்கும் தெரியாது. ஏன்.. இருபது வருசத்துக்கு முந்திக் காலமான என் மனைவிக்கும் தெரியாது. அப்புவின் வார்த்தைகள் எப்படிப்பட்டவைகளாக இருந்தாலும் பணிதல் என்பது இன்றும் என்னோடு வாழுகின்றது. அந்தக் காலத்தில் அப்பு ஏன் என்னை ஏசுகின்றார் என்பது புரியாது விழித்த நாட்களும் உண்டு. அவரின் ஏச்சுக்கு மறு பேச்சுப் பேசாது பணிந்து அவரின் சொல்படி நடந்து பழகிய பழக்கம் தான் இன்றும் என்னோடு இருக்கின்றது. ''பணிதல்'' என்பது தோற்றுப் போதல், இயலாமை, கோழைத்தனம் என்று பலர் கருதலாம். நான் அதை அப்படிக் கருதவில்லை. பணிதல் என்பது பதுங்குதல், அறிதல், அநுபவங்களைப் பெறல். இப்படித்தான் இன்னும் நான் நினைத்திருக்கின்றேன். இந்த வயதில் நான் நினைத்தது சரியென்பது சத்தியமான அனுபவ உண்மை.

'அறிதல் இல்லாதவன் மனிதன் இல்ல மோனை. மனிசனாக வாழ அறிதல் முக்கியம் மோனை' அப்பு அடிக்கடி **'அறிதல்'** என்ற வார்த்தையை உச்சரிக்கும் போது இளமையில் எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வரும். அந்த ஆத்திரத்தை அடக்க அடக்க அறிதலின் உண்மைத் தன்மை விளங்கத் தொடங்கியது. அறிதலை எனது பிள்ளைகளுக்கு என் அப்புவின் தாரக மந்திரத்தைப் போதிக்க விரும்பி, விரும்பி நான் விழுந்தெழுந்தது தான் மிச்சம். அறிதல் என்பதை அவர்கள் இன்னும் அறியாதிருக்கிறார்களே என்பதுதான் கவலை. மங்கிய என் கண்களுக்குள் ஜன்னல் கம்பிகளுக்குள்ளால் அடுத்த வீட்டு வெளிச்சம் தென்பைத் தருகின்றது. கட்டிலினை விட்டு எழும்ப முயலுகின்றேன். முதுகு வலி, நாரிப்பிடிபபு சதை வீக்கம், தசைப் பிடிப்பு இப்படிச் சொல்ல முடியாத அளவு..... நோய் உடம்பென்று சுருக்கமாகச் சொல்வார்களே.... அப்படித்தான் இன்று என் உடம்பு. அசைந்து கால்களை நீட்டிக்

கைகளை மெத்தையில் பதித்து... முயன்று முயன்று பார்க்கின்றேன். உடம்பினை நிமிர்த்துவது ....என் உடம்பு இத்தனை பாரம் கொண்டதா? உடம்பின் மீது பொய்க் கோபம் வந்தது. என் ஆத்மா இந்த உடம்போடு எத்தனை காலம் தான் வாழும்? நாட்களை எண்ணி விடும் அளவுக்குத் தானே!!! பிறகேன் என் உடம்போடு நான் கோபப்படவேண்டும். பொய்க் கோபமும் சமாதானம் ஆகின்றது. பத்து நிமிடத்தின் பிறகே நிலத்தில் எழுந்து நிற்க முடிகின்றது. மூன்று நாட்கள் தும்புத்தடி பிடித்து. மண்கள் கால்களில் குத்துகின்றன. மண் குத்திக் கால்கள் வலிப்பதா? உண்மைதான். வலிக்கின்றது தான். கேள்வியும் பதிலும் என்னுடையவை. வேறு யார் இருக்கிறார்கள் என் அருகில்?? எத்தனை எத்தனை பேர் என்னருகில் இருந்தார்கள். இப்போது..... எனக்கென்று ஒரு பழைய அறை. சொல்ல மறந்து போனன். நான் முதல் முதல் கட்டிய வீட்டின்ர ஏகபோக சொந்தக்காரன். நான் இப்போது. பழைய கட்டில், பழைய மெத்தை,பழைய போர்வை, பழைய நுளம்பு வலை, நான் பாவித்த பழைய பாத்திரங்கள், பழைய அலமாரி மேசை... எல்லாமே பழைய மனிசனுக்குப் பழையதுதானே..?? நாளாந்தம் என்னிடம் எழும் இந்தக் கேள்விகளைப் போலப் பல கேள்விகள் எழும். யார் விடை சொல்வார்கள்? விடை இல்லாக் கேள்விகளோடு வினாக்களை நாளாந்தம் தொடுத்தும்.... தொடுத்தும்.. விம்மி அழுதும்..... அழுதும்.. கிழடுகளின் கண்ணீர் யாருக்கும் விளங்காது. நான் முணு முணுத்து என்ன பயன்? யாருக்குப் புரியப் போகின்றது? என்ர பிள்ளைகளுக்குப் புரியாதது மற்றவைக்கு எங்க புரிய போகுது??? அறிதல் இல்லா வாழ்வினில் கிடைக்காத ஒன்றுக்காக உழைக்கின்ற இந்த மனித வர்க்கத்தைப் பார்க்கும்போது ....என் அழுகையும் சிரிப்பாகின்றது. அறிதலை அறிந்திருந்தும் அதற்கேற்ப வாழ்ந்திருந்தால் நான் இந்தத் தனிமையில் வாடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்குமா? பிள்ளை பாசம், மனைவியின் அழுகையில் ஏற்பட்ட ஈர்ப்பு, எல்லாமே என் அப்புவிடம் இருந்து பெற்ற அறிதல் என்ற வரத்தை எப்படித் தகர்த்தன? எல்லாமே மாயமாகத் தெரிகின்றது. மனிதத்தின் பாசவலையென்ற மாயையில் அறிதலை இழந்தது இப்போது எத்தனை வேதனையானது என்பது புரிகின்றது. பணிந்து போதலில் ஏற்படும் சுகம், எவ்வளவு மேலானது என்பது இப்போது புரிகின்றது . சிவன் கோயில் மணி அடித்துப் பத்து நிமிடத்திற்கு மேலாகப் போகின்றது. என் உடம்பிலும் கடிகார முட்களா?? கழிவறை என்னை அழைக்கின்றது. குந்தி இருக்க முடியாது குனிந்து வயிற்றை எக்குகின்றேன். வேதனை அடி வயிற்றிலும் குதத்திலும். மலம் எரிவோடு கழிகிறது. சிறுநீர் சொல்லவே முடியாத வேதனையோடு என்னை விட்டுப் பிரிகின்றது. என் உத்தரவு இல்லாமல் கண்களிலிருந்து கண்ணீர்....... என் மரண வேதனை என் மக்களுக்குத் தெரியாது. அவர்கள் அவர்களுக்காகவே வாழப் பழகிக் கொண்டார்கள். கடைசி மகன் வீட்டில் வேலைக்காரி போல இருந்த மனைவியும் போய்க் கனகாலம். நான் நானாக வாழப் பழகிப் பார்க்கின்றேன். பிறகேன் மற்றவர் மேல் குறை சொல்ல.....பல் தீட்டி முகம் கழுவி முற்றத்துச் செவ்வரத்தையைப் பறித்து வந்து சுவாமிப் படத்திற்கு முன்னால் வைத்து வணங்கி, தேநீர் வைத்துத் தனியாக இருந்து சுவைத்து, இருமி... முற்றத்தில் துப்பி, தும்புத் தடியையும் விளக்கு மாற்றையும்....பிடித்து, காலைச் சாப்பாட்டுக்கு வீதியை நோக்கி ... நடந்து... உடைந்திருந்த கதிரையொன்றில் அமர்ந்திருந்து... நாளாந்தம்... இதே காலை டயறிதான். அறிதல் என்பதன் அர்த்தம் என்ன? பணிதல், பதுங்குதல், அனுபவங்களைப் பெறல்..... இவை மட்டும் அல்ல..... ஒவ்வொருவரையும் உரைத்துப் பார்த்து அவர்களுடைய நடை, உடை, பாவனைகளில் இருந்து அறிந்து சொல்லுதலும் அறிதலைக் குறிக்குமா? மனிதரை அறிதல் என்பது இலகுவான காரியமா? உடல் முழுக்க விடமுள்ளவர்கள் அல்லவா? அவர்களை அறிந்து கொள்ளல் முடிகின்ற காரியமா? முடியுமென்றால் முயன்றால் முடியாத காரியங்களும் உண்டா? அறிதல் என்பது அவ்வளவு முக்கிய மானதென்பது....மகன் வீட்டுக் காலைச் சாப்பாட்டுக்காகத் தெருவழியே கண்கள் பயணிக்கின்றன. நுளம்பொன்று வெறும் உடம்பைப் பதம் பார்க்கின்றது. இடுப்பில் இருந்து வழுகும் சாரத்தை இறுக்கமாக்கிக் கொள்கின்றேன். பசி உடம்புக்குத் தென்பாக இருக்கின்றது. நிமிர்ந்து இருக்க முயற்சி செய்கின்றேன்.

**“அறிதல் என்பது ஒவ்வொருவரினதும் மன உணர்வு. இவ் உணர்வின் வழி நீண்டபயணம் செய்யாவிடின் புரிதல் என்பதும் கேள்விக் குறிதான்!”**

எழுத்துக்களுக்கெல்லாம் ‘ அ ‘ என்ற எழுத்துதான் முதல் எழுத்து எனச் சொல்லப்பட்டாலும் அதற்கும் முதல் எழுத்தாக இருப்பது ஆய்த எழுத்தாகும்

# ஊன்று கோல்



நடராசா கண்ணதாஸ்

முருகண்டிப் பிள்ளையாரப்பா இண்டைக்கு பிள்ளையின்ர ஏ.எல் றிசல்ட் வரப்போகுது எப்பிடியாவது அவள் பாஸ்பண்ணிப் போடணும். அவள் கம்பசுக்கு அனுப்பி பெரிய உத்தியோகம் பார்க்க வச்சிடனும் அப்பத்தான் இது நாள் வரைக்கும் நாங்க கும்பிட்டதுக்குப் பலனே கிடைச்சமாதிரி இருக்கும். எங்களக் கைவிட்டிராத அப்பா... எங்களுக்கு உன்ன விட்டா வேறு யாருமே இல்லயப்பா..." வீட்டு அறையில் இருந்த பிள்ளையார் படத்தைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டபடி முணுமுணுத்தார் கதிரேசு. "என்னப்பா செய்யுறியள் படத்தறைக்குள்ள இருந்து... உந்த மனுசன் இப்பிடித்தான் எங்க வெளிக்கிடுறது எண்டாலும் படத்தறையில நிண்டு சாமி கும்பிட்டுத் தான் வெளிக்கிடும். நேரமெல்லேப்பா போகுது அவளின்ர ஏ.எல் றிசல்ற் பாக்கணுமெல்லோ... கெதியா வெளிக்கிடுங்கப்பா..." நச்சரித்தாள் மனைவி அன்னம்மா. "ஓமடியப்பா வெளிக்கிடுறன்... விடமாட்ட நீ... இனி நான்போகும்வரைக்கும் உன்ர இரைச்சல் தான்..." படத்தறையில் இருந்து வந்தபடியே அன்னம்மாவைப் பார்த்துக் கூறினார் கதிரேசு. "அப்பிடியில்லயப்பா... பத்து வருச கடுந் தவத்திற்குப் பின்னர் கிடைச்ச முத்துதானேயப்பா எங்கட தமிழ்ச்செல்வி. அவள் எப்பிடியெல்லாம் வாழவேண்டும் எண்டு நானும், நீங்களும் காணாத கனவுகளல்ல. அவளின்ர வாழ்கையில இதுவோர் முக்கிய சோதனையப்பா. அவளின்ர மட்டுமில்ல நிறையப்பேரின்ர வாழ்க்கையே இந்தச் சோதனையால சுத்த சூனியமாகிப் போயிருக்கப்பா..." மூச்சு விடாமல் கூறி முடித்தாள் அன்னம்மா. "சரி... சரி... நீ சொல்லுறதும் சரியாத்தான் இருக்குது... அது சரி இவள் புள்ள எங்க போயிற்றாள்? காலமேயில இருந்து அவளக் காணேல்ல..." மனைவியைப் பார்த்து வினவினார் கதிரேசு. "அவள் படிச்ச இங்கிலிஸ் கிளாசும் இண்டையோட முடியுதாம். ஏதோ எக்ஸ்சாம் எண்டு சொல்லிச் சாப்பிடவும் இல்ல. தேத்தண்ணியக் குடிச்சிட்டு போயிட்டாள். தன்ர இன்டெக்ஸ் நம்பர் தந்திட்டுப் போனவள். அப்பாட்ட குடுத்துச் சந்தியில இருக்கிற நெற்கபேயில கொடுத்து றிசல்ற் சீற்றை வாங்கிக் கொண்டு வரச்சொன்னவள்..." சம்பவத்தை விளித்தபடியே கதிரேசுவின் கையில் இன்டெக்ஸ் நம்பரைத் திணித்தாள் அன்னம்மா. இன்டெக்ஸ் நம்பரைப் பெற்றுக் கொண்டு வீட்டை விட்டுத் தனது ஊன்றுகோலுடன் வெளியேறினார் கதிரேசு. ஒருவாறு சந்தியிலுள்ள நெற்கபேயை அடைந்து விட்டார் கதிரேசு. "என்ன அண்ண கனநாளைக்குப் பிறகு இஞ்சாலப் பக்கம்..." நெற்கபே வைத்திருக்கும் வாலிபன் விசாரிக்க "ஓமடா தம்பி இஞ்சாலபக்கம் வாறதுக்கு இப்ப ஒரு அலுவலும் வாறேல்ல... அதோட என்ர இந்த ஏலாத காலோட கனதூரத்துக்கு நடக்கவும் முடியாம இருக்குதடா தம்பி. இப்ப இவள் மகளின்ர ஏ.எல் றிசல்ற்ற பார்த்திட்டு போவமெண்டு தான் வந்தனான்..." தான் வந்ததன் நோக்கத்தை கூறினார் கதிரேசு. "ஆ... அப்படியா... நல்ல விசயம் தங்கைச்சியின்ர இன்டெக்ஸ் நம்பர தாங்க அண்ண. முகத்தில ஏதோ பயந்தெரியுற மாதிரி இருக்குது..." அந்த வாலிபன் கேட்க. "பின்ன ... சோதின எழுதினது என்ர மகள். ஆனா... பயம் முழுக்க எங்களுக்குத்தான். ஆ... இந்தாரும் இன்டெக்ஸ் நம்பர்" கூறியபடி இன்டெக்ஸ் நம்பரை நீட்டினார் கதிரேசு. "அதுக்கேன் அண்ண நீங்க பயப்பிடவேணும். உங்கட மகளோட தான் என்ர தங்கைச்சியும் படிக்கிறாள். அவள் அடிக்கடி உங்கட மகளின்ர பெருமைகளைத் தான் கூறுவாள். அவ வகுப்பில

பயங்கர கெட்டிக்காரியாம் அண்ண…” மகளின் பெருமைகளை அந்த வாலிபன் கூறிக்கொண்டிருக்கவும் மனதிற்குள் “ஓம் கணேசாய நம… ஓம் கணேசாய நம” என்ற கணபதி மந்திரத்தை சொல்லிக் கொண்டிருந்தார் கதிரேசு “பிறகென்ன உங்கட மகளுக்கு மூன்று பாடங்களிலும் ஏ தரச்சித்தி கிடைச்சிருக்கண்ண… அதோட டிஸ்ரிக் லெவல்ல மூன்றாம் இடமும்.. கெட்டிக்காரி தான் அண்ண உங்கட மகள். ஊரிலயும் உங்கட மகளைப் பற்றி ஒருத்தரும் இதுவரைக்கும் தப்பா கதைச்சது கூட இல்லயண்ண. படிப்பும் தன்ர வேலையும் எண்டு இருந்ததாலதான் உங்கட மகள் நல்ல றிசல்ர பெற்றிருக்கிறா…” கூறி முடித்தான் நெற்கபே வாலிபன். “எங்கட வளர்ப்பு அப்பிடித் தம்பி கஸ்ரத்தையே சொல்லிச் சொல்லி வளர்த்ததால என்ர பிள்ளைக்கும் சமூகத்தில தானும் முன்னுக்கு வரவேணும் எண்டுற வைராக்கியம் இருக்குதடா தம்பி… சரி… சரி… எவ்வளவு காசடா தம்பி…” வாலிபனிடம் காசை நீட்டினார் கதிரேசு. “ஐயோ அண்ண காசொண்டும் வேண்டாமண்ண… தங்கச்சி இப்பிடி நல்ல றிசல்ற் எடுத்து எங்கட ஊருக்கே பெருமை சேர்த்திருக்கிறா… அவாக்கு என்ர வாழ்த்துக்களை சொல்லி விடுங்கண்ண… அது போதும் எனக்கு” என்று கூறினான் நெற்கபே வாலிபன். “அப்ப… சரியடா தம்பி நான் போயிற்று வாறன்” கூறியவாறே விடைபெற்றுச் சென்றார் கதிரேசு. ஒருவாறாக வீட்டு வாசலை அடைந்து விட்டார். வீட்டு வாசலிலேயே தாயும், மகளும் பதற்றத்துடன் காணப்பட்டார்கள். “என்னப்பா றிசல்ற்” மகள் தமிழ்ச்செல்வி தந்தையைப் பார்த்துக் கேட்க, “நீ கெட்டிக்காரி புள்ள… என்ர கனவு எல்லாத்தையும் …” கதிரேசு சொல்லி முடிப்பதற்குள் “உங்கட கனவுகள விடுங்கப்பா… புள்ளேட றிசல்ற் என்ன?” ஒருவித பதற்றத்துடன் குறுக்கிட்டாள் மனைவி அன்னம்மா. “ஏனப்பா அவசரப்படுற… மூன்று பாடங்களிலயும் ஏ எடுத்திருக்கிறாள் எங்கட புள்ள. அதோட மாவட்ட மட்டத்திலயும் மூன்றாமிடத்தைப் பெற்றிருக்கிறாள். எங்கட புள்ள சும்மா புள்ளயா… கெட்டிக்கார புள்ளயாத்தான் வளர்த்திருக்கிறம்…” கதிரேசு கூறிக்கொண்டிருக்கும் போது “களைப்பாயிருக்கிறியள் இந்தாங்கப்பா தண்ணி… இதைக் குடிச்சிட்டு அந்தக் கதிரையில கொஞ்ச நேரம் இருங்கப்பா…” தந்தையிடம் தண்ணீர் கொடுத்தவாறு கூறினாள் தமிழ்ச்செல்வி. “ஓம் புள்ள களைப்பாத்தானம்மா இருக்கு… தா… புள்ள தண்ணியக் குடிப்பம்” தண்ணீர் அருந்தியவாறு கதிரையில் அமர்ந்தார் கதிரேசு. கதிரையின் இருபக்கங்களிலும் மகள் தமிழ்செல்வியும், மனைவி அன்னம்மாவும் அமர்ந்திருந்தனர். “என்னங் கொஞ்சக் காலத்தில என்ர மகளும் கம்பஸ் முடிச்சிடுவாள். பிறகு அவளுக்கும் நல்ல ஒரு அரசாங்க வேலை கிடைச்சிடும் எங்கட கடன்கள் எல்லாம் ஒரு முடிவுக்கு வந்திரும்…” கதிரேசு சொல்லி முடிப்பதற்குள் “நான் கம்பசுக்கு போகலயப்பா…” தமிழ்ச் செல்வி கூறி முடித்தாள். தமிழ்ச்செல்வியின் வார்த்தையை சற்றும் எதிர்பார்க்காத தந்தையும், தாயும் ஒரு கணம் திகைத்துத்தான் போயிருந்தார்கள். “என்னடி சொல்லுற… ஏன் நீ கம்பசுக்கு போகமாட்டன் எண்டிறாய்…” தாய் வினவ, “இப்ப கம்பசில என்ன நடக்குதெண்டு தெரியும்தானே உங்களுக்கு. ராக்கிங் என்ற பெயரில எங்கள சாகடிச்சே போடுவாங்கள். இவ்வளவு காலமும் மானம் மரியாதையோட இருந்திட்டு அதை எல்லாத்தையும் இழக்க வேணுமாம்மா… அதுதான் எனக்கு அங்க போக விருப்பமில்ல…” தன்நியாயத்தைக் கூறினாள் தமிழ்ச்செல்வி. “ஒரு சிலர் செய்யுற தப்புக்கு ஒட்டு மொத்த எல்லாரையும் தப்புச்சொல்லக் கூடாதம்மா… அங்க படிச்ச எத்தனையோ பேர் இப்ப நல்ல பதவிகளில இருக்கினமம்மா… நீ மனசக் குழப்பாம கம்பஸ் போற வழியப்பாரு…” கதிரேசு கூறினார். “எனக்கு முதல்ல படிச்ச அண்ணாக்கள், அக்காக்கள் எல்லாரும் தாங்கள் ஐஞ்சு வருசத்துக்கு முன்னால கம்பஸ் படிப்பை முடிச்சிட்டம், ஏழு வருசத்துக்கு முன்னால முடிச்சிட்டம். ஆனா இதுவரைக்கும் வேலை இல்லாப் பட்டதாரிகளாய்த் தான் திரியிறம் எண்டு சொல்லி ஆர்ப்பாட்டங்கள் செஞ்சு கொண்டிருக்கிறத நீங்களும் தானே கண்டிருக்கிறீங்க… இந்தக் காலத்தில கம்பசுக்கு போய் படிப்பை முடிச்சிட்டு வெளியால வாறதுக்குள்ள எங்கயாவது தனியார் கம்பனியில வேலை செஞ்சு உழைச்சிடலாமப்பா கம்பசுக்கு போகச் சொல்லி என்னைக் கட்டாயப் படுத்தாதீங்கப்பா…” அழுதவாறு கூறினாள் தமிழ்ச்செல்வி. “உன்ன வச்சு உழைக்கோணுமெண்டா… அப்பவே உன்ன ஏ.எலுக்கு அனுப்பாம எங்கையாவது கடையில கேட்டு விட்டிருப்பமே… என்ன புள்ள கதைக்கிற…” கோபத்துடன் கூறினாள் அன்னம்மா. “இஞ்ச பாரு புள்ள… இறுதிச் சண்டையில என்ர ஒரு கால் போனபோது கூட வலிக்கேல்ல. ஆனா இப்ப நீ

கதைக்கிறதக் கேட்டா மனசே வலிக்குதம்மா... ஏன் இப்பிடி கதைக்கிற... நீ நல்ல பிள்ள... ஆனா உன்ர மனச ஆரோ குழப்பிப்போட்டீனம் போல இருக்குது. குழம்பாம இரு... நீ என்ன சொன்னாலும் கம்பசுக்குப் போய்தான் ஆகணும். இந்த விசயத்தில நான் விடமாட்டன். உன்ர முடிவ நீ மாத்திறது உனக்கு நல்லது. சரி... சரி... நானும் உன்ர அம்மாவும் முருகண்டிப் பிள்ளையாரிட்டப் போயிற்று வாறம். பிறகு நேர்த்தி செய்யேக்க உன்னையும் கூட்டிக் கொண்டு போறம். ஏதாவது செஞ்சு சாப்பிடு... அன்னம்மா நீ வெளிக்கிடு..." என்று அதிகார தொனிப்புடன் கூறியவாறு கதிரையிலிருந்து எழும்பிய கதிரேசு கால் தடுமாறிக் கீழே விழப்போன போது தமிழ்ச்செல்வி எட்டிப் பிடித்தவாறே "ஏனப்பா... ஊன்று கோலைப்பிடிச்சுக் கொண்டு எழும்பியிருக்கலாமே..." என்றாள். "எனக்கு ஊன்று கோலாக என்மகள் இருக்கும் போது எனக்கெதற்கம்மா வேறொரு ஊன்றுகோல்" என்றார் கதிரேசு தமிழ்ச்செல்வியைப் பார்த்து. தமிழ்ச்செல்வி மறுமொழி எதுவும் பேசவில்லை. கதிரேசுவும், மனைவி அன்னம்மாவும் முருகண்டிப் பிள்ளையாரை வழிபடுவதற்காகச் சென்று விட்டார்கள். சூரியனும் அன்றைய நாளைப் பூர்த்தி செய்வதற்காக மெல்ல மெல்ல மறையத் தொடங்கும் வேளையிலேதான் கதிரேசுவும், அன்னம்மாவும் தமது வீட்டு வெளிக்கேற்றை வந்தடைந்தனர். "இஞ்சரப்பா வளவுக்குள்ள மாடுகள் பூக்கன்றுகளைத் தின்னுது... உவள் தமிழ்ச் செல்வி வீட்டுக்குள்ள இருந்து என்ன செய்யுறாள்..." கோபத்துடன் கூறியபடி அன்னம்மா மாடுகளைத் துரத்த, கதிரேசுவும் தன்னால் முடிஞ்சளவுக்கு மாடுகளை துரத்தினார். "இஞ்சரப்பா மாடுகளை ஒரு மாதிரி துரத்திப் போட்டம் கேற்றைக் கட்டிப் போட்டு வாங்கோ நான் உள்ள போறன்... தமிழ்ச்செல்வி நித்திரையோ என்னவோ தெரியாது..." கூறியபடி வீட்டினுள் அன்னம்மா நுழையவும், கதிரேசு வீட்டுக் கேற்றை அடையவும் நேரம் சரியாக இருந்தது."என்ர... ஐயோ இஞ்ச ஓடிவாங்கப்பா..." மனைவி அன்னம்மா பதறியடிச்சுக் கத்தினாள். மனைவியின் குரலைக் கேட்ட கதிரேசு "என்னடி... என்னடி..." என அழைத்தவாறு தனது ஏலாத காலுடனும் ஓடி வந்தார். வந்தவர் தான் அப்பிடியே ஒரு கணம் சிலையாக நின்றார். ஆம்! தமிழ்ச்செல்வி தூக்கிலே தொங்கித் தனது உயிரை மாய்த்து விட்டாள். கதிரேசுவும், அன்னம்மாவும் எழுப்பிய அழுகுரல் சத்தம் அடுத்த நொடியே ஊர் மக்களை இவர்களது வீட்டினுள் வர வைத்தது. "கதிரேசண்ண... இஞ்ச வாங்க ஒருக்கா..." சண்முகம் அழைக்கத் தட்டுத் தடுமாறி எழுந்து கீழே விழுந்தார் கதிரேசு. "என்ன அண்ண... ஊன்று கோலைப் பிடிச்சுக் கொண்டு எழும்பியிருக்கலாமே அண்ண..." சண்முகம் கேட்க "எனக்கு ஊன்று கோலாய் இருக்க வேண்டிய என்ர புள்ளயே என்ன விட்டு போயிற்றுது... பிறகு எனக்கெதுக்கு வேறொரு ஊன்று கோல்..." வாய்விட்டு அழுதார் கதிரேசு. "சரி... சரி... அழாதேங்கண்ண... நடந்தது நடந்து போய்ச்சு... பொலிசுக்கு அறிவிச்சிருக்கு, அவையளோட கோட்சில இருந்தும் வருவீனம். வந்தாப் பிறகு தான் பொடியைத் தருவினம் எங்களட்ட..." சண்முகம் கூறிக்கொண்டிருக்க, "எடி... மல்லிகா கதிரேசற்ற மகள் ஏன் செத்ததெண்டு உனக்கு தெரியுமா...? அவள் ஆரையோ லவ் பண்ணினவளாம்... அந்த விசயம் வீட்டில தெரியவரத்தான் தொங்கிட்டாளாம்..." சுமதி கூற "அது மட்டுமில்லயக்கா... உவள் ஏ.எல் சோதனையிலும் பெயிலாம். அதுவும் வீட்டில பெரிய பூதாகரமா வெடிச்சிருக்கு... பெட்ட பாத்திச்சு இனி இருந்து பிரியோசனம் இல்ல எண்டு தூக்கில தொங்கீற்று..." மல்லிகா கூற அதை சுமதியும் ஆமோதித்தாள். "எடிப்பாவிகளே என்ர மகள் ஏன் செத்ததெண்டு தெரியாமல் என்னென்னமோ கதைக்கிறீங்களேடி... உங்களையெல்லாம் என்ன செய்யிறது" காதில் விழுந்த கேலிப்பேச்சுக்களுக்கு பதில் சொல்ல வேணும் போலத் தோன்றியது கதிரேசுவுக்கு, ஆனாலும் கேடு கெட்ட உலகம் இது. கேவலமாகத்தான் பேசும். என்ர ஒரே மகளே இப்ப என்னை விட்டிட்டு போயிற்றுது... இனி நான் இதுகளுக்குப் பதில் சொல்லித்தான் என்ன? பதில் சொல்லாமல் விட்டால் தான் என்ன? எல்லாமே கையைவிட்டுப் போயிற்று என எண்ணியவரின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக நிலத்தில் சிந்தியது.

## ஆதிசிவனும் பாரதியும்

குமரி நாடு என்று புகழ்பெற்று விளங்கிய பழந்தமிழ் நாட்டை ஆண்டு வந்த பாண்டிய மன்னர்கள் வரிசையில் முதன்முதலில் ஆண்ட பாண்டிய மன்னன் சிவனைத்தான் மகாகவி பாரதியார் ஆதிசிவன் என்று குறிப்பிடுகின்றார்

**டாக்டர் நா. மகாலிங்கம்**

# அது புத்தனின் சிசுவல்ல

**பிரமிளா பிரதீபன்**




தூக்கத்தில் வாயுளறிக் கொண்டிருப்பவர்களின் கால் பெருவிரலுக்கு அடுத்ததாய் இருக்கும் இரண்டாவது விரலை இழுத்துப் பிடித்துக் கொண்டால் அதிகமாக உளறி வைப்பார்களாமே! அந்தக் கதையை நம்பித்தான் மாயாவின் பெருவிரலை இறுக்கமாய்ப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தான் நீலமேகம்.

அந்தப் பின்னிரவுப் பொழுதின் மெல்லிய நிலா வெளிச்சம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ள ஏதுவாக மாறியிருந்தது. பட்டென விழித்துக்கொண்ட அவள் ‘என்ன..?’ என்று அதட்டினாள்.

‘இல்ல நீ வாயுளர்ன்ன’ தடுமாறியபடி இப்போது அவன் உளறினான். ‘ச்சே’ என்றபடி மீண்டும் திரும்பிப்படுத்துத் தூங்கிப் போனாள் அவள். நீலமேகத்திற்குப் பயங்கரப் பதட்டமாயிருந்தது. தவறியேனும் அவள் சந்தேகித்து ஏனென்று கேட்டிருந்தால் என்ன சொல்லியிருக்க முடியும்..? அந்த முட்டாள் தனமான யோசனையை நம்பியிருக்கக்கூடாது. நிச்சயமாய் நம்பியிருக்கவே கூடாது. நிலை கொள்ளாமல் அறையின் இரு புறமும் அங்கு மிங்குமாய் அவளைப் பார்த்தவாறே நடந்து கொண்டிருந்தான். அப்போது தான் அவனால் ஒன்றைக் கவனிக்க முடியுமாய் இருந்தது. உறங்கும் பொழுதுகளில் கூட ஏதோ ஒரு ஆசனத்தைச் செய்வதையொத்தே அவள் தன் உடலை ஆக்கிக் கொள்கிறாள். சற்றுமுன் பாலாசன நிலையில் இருந்தவள் திடீரெனச் சவாசனத்திற்குத் திரும்பியிருந்தாள். கைகால்கள் அசைவற்று நேர் கோட்டு வடிவில் தளர்வாகக் கிடந்தன. முகம் விட்டத்தைப் பார்த்தபடியும், இமைகள் மூடியபடியுமாய். அவனால் சத்தியம் பண்ணிச் சொல்லமுடியும் அவள் மூச்சு விடுதலையும் மிகச்சரியான முறையிலேயே செய்து கொண்டிருப்பதாகவே இருக்கும். உன்னிப்பாக அவளின் வயிற்றசைவுகளை அவதானிக்க முயற்சித்தான். இருளுக்குள் அது சாத்தியமாகவில்லை. மெல்ல நகர்ந்து அவளருகில் சென்று சுட்டு விரலை மூக்குத் துவாரத்திற்கருகில் பிடித்தபடியாய்ப் பார்த்தான். நிதானமான சுவாசமது. வெளிமூச்சின் போது வயிறு உட்புறமாகவும் உள் மூச்சின் போதில் வயிறு வெளிப்புறமாகவும் அசைகிறது. அதிலும் நீண்ட நேரமெடுத்த ஆழ்ந்த சுவாசம். சரியாக நடேசன் ஐயா கற்பிக்கும் மூச்சு பயிற்சிகளின் சுவாசத்தைப் போல…ஏனென்று தெரியாத ஆத்திர மேலிடல் அவன் சுயத்தைக்

குழப்பியது. ஒளித்து வைத்திருந்த சிகரட் பக்கட்டில் ஒன்றை வெளியே இழுத்துப் புகைக்க ஆசைப்பட்டான். எனினும் இன்னும் சிறிது நேரத்தில் பிராணாயாமம் செய்ய வேண்டுமென்பதால் அச்சிந்தனையைத் தவிர்த்தபடியே மீண்டும் அறைக்குள்ளாகவே நடந்து கொண்டிருந்தான். முதலாவது யோகத்தீட்சையின் போதில், மாயாவைப் பார்த்த அந்தக் கணத்திலேயே நீலமேகம் முடிவு செய்திருந்தான். இவள் எனக்கானவள் என்று… அதற்கான காய்களையும் தனக்கேற்றாற் போல் நகர்த்தி ஒரு வருடத்திற்குக் குறையாத இல்லற வாழ்விலும் அநேகமாய் வெற்றியடைந்திருக்கிறான். ஆனால் அதனை முழுதாகக் கொண்டாடிக் களிக்க முடியாமல் ஏதோ ஒன்று அவனைத் தடுத்துக் கொண்டேயிருந்தது. எப்போதுமாய் அவனைக் குழப்பமடையச் செய்யும் அந்த ஒன்று, அவளின் அதிதீவிர யோக ஈடுபாடாகவோ அல்லது தியான நிலையில் அவள் உச்சம் பெற்றவள் என்பதாகவோ அப்படியும் இல்லையென்றால் குருஜியின் உத்தரவின் பெயரால் மாத்திரமே அவள் தன்னை மணந்து கொண்டாள் என்பதாகவோ இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்தான். ஆனால் அதையெல்லாம் மிஞ்சிய ஒரு இரகசியம் அவளிடம் நிச்சயமாய் இருக்க வேண்டுமென்றும் அது நடேசன் ஐயாவிற்கும் தெரிந்திருக்கிறதென்பதையும் நீலமேகம் ஊகித்து வைத்திருந்தான். 'நான் பொறாமைப்படுகிறேனோ!' என்றும் தனக்குத் தானே நீலமேகம் அடிக்கடி கேட்டுக்கொள்கிறான். எனினும் இது பொறாமையைத் தாண்டிய வேறொரு உணர்வு என்பதே நிஜமாக இருக்கவேண்டும். தீட்சை நிலையின் பிறிதொரு கட்டத்தில் கண்களுக்குள் இருக்கும் பிராண சக்தியை எங்ஙனம் பரிசோதிப்பதென்று கற்பிக்கக் கதிர்காமத்திற்கு அருகிலுள்ள காடொன்றின் ஒற்றையடிப் பாதை வழியாக அழைத்துச் சென்றிருந்தார் குருஜீ. அப்போதுதான் மழை பெய்து ஓய்ந்திருக்கக்கூடிய மாலைப்பொழுதாக அது இருந்தது. சுத்தமான காற்றுச் சூழத் தனியொரு வெளியாகவும், அவர்கள் இருபது பேர் வரையில் தனித்து நின்று வானத்தை நோக்கத் தகுந்த ஓரிடமாகவும் தெரிவுசெய்து அங்கே அவர்களை நிற்கச் சொன்னார். அவரின் கட்டளைப்படி எல்லோரும் கண்களை மூடி ஒருசில ஆழ் சுவாசங்களைத் தனித்தனியே உள்ளிழுத்து வெளிவிட்டுக் கொண்டார்கள்.

சிறுநேர இடைவெளிக்குப் பின் இமைகளை மெதுவாகத் திறந்து அந்தப் பச்சையம் சார் சூழலைக் கண்களுக்குள் நிரப்பினார்கள். வான் முகில்கள் கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்திருப்பதைக் காட்டி ஒரு கூட்டத்தைத் தெரிவு செய்யுமாறு குருஜீ கேட்டுக்கொண்டார். சற்றே சாதாரண அளவுடையதான ஒரு முகிற் கூட்டத்தை அவர்கள் தெரிவு செய்ததும் குருஜீயுடன் எல்லோருமாய் சேர்ந்தாற்போல அம்முகில் கூட்டத்தை இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு சில நொடிகளுக்குள் அம்முகில்கள் முற்றிலுமாய்க் காணாமல் போய் அவ்விடம் வெறுமையுடையதாய் ஆகிப்போயிருந்தது. கண்களுக்குள் இருக்கும் ப்ராணா சக்தி பற்றியதான சந்தேகம் அதற்குப் பிறகாக யாருக்குமே எழவில்லை. ஆனால் நீலமேகம் அதனைத் தனியே பரீட்சித்துக் கொள்ள வேண்டுமென அடிக்கடி முயற்சித்தான். முகில்கள் காணாமல் போகும் நிலைகண்டு ஆனந்தமடைந்தான். பெரிய முகிற்கூட்டங்களைத் தெரிவு செய்து நீண்ட நேரப் பார்வை ஸ்பரிசத்தால் அதனைக் கலைத்தான். தன் ப்ராணா சக்தி மீதான இறுமாப்பில் மிதக்கத் தொடங்கியிருந்தான். ஆனால் அத்தகைய அவனது அர்த்தமற்றதான நம்பிக்கைகள் யாவுமே அடுத்தடுத்து நடந்த எதிர்பாராத சில சம்பவங்களுக்குப் பிறகு சரியத் தொடங்கியிருந்தன. ஒரு ஏப்ரல் மாதக் காலைப்பொழுதது. இருவருமாய் மொட்டை மாடியில் சூரிய நமஸ்காரம் செய்து தளர்ந்து படுத்திருந்திருந்தார்கள்.

'ப்ராணா சக்தி டெஸ்ட் பண்ணுவோமா' என நீலமேகம் கேட்டான்

'அது ஒன்னும் விளையாட்டு இல்ல… நம்ம ப்ராணா சக்தியைக் காண்பிக்கக் குருஜீ யூஸ் பண்ணிய ஒரு யுக்தி'
'இருக்கட்டும் ஒரு தடவை பார்க்கலாமே'

அவன் விடுவதாயில்லை. இருவரும் தங்களதென இரு முகிற்கூட்டங்களைத் தெரிவு செய்து கொண்டார்கள். சொல்லப்போனால் அவளது அவன் தெரிவு செய்ததை விடவும் விசாலமானதாயிருந்தது. இடையிலொரு தடவை கண்களை விலத்தி அவளுடைய முகிற் கூட்டத்தைப் பார்த்த மாத்திரத்தே அவன் மிரண்டுப் போனான். இறுதியாய் ஒரே ஒரு துண்டு முகிலொன்று பார்த்திருக்கும்போதே கரைந்து கொண்டிருந்தது. அவனது முகிலில் சிறு அசைவுதானும் அப்போதில் ஏற்பட்டிருக்கவில்லை.

‘குட்… உனக்கு நிறையவே இருக்கிறது’ நீ பார்க்கலயா?’ அவனுடைய முகில் அப்படியே இருப்பதைப் பார்த்துக் கேட்டாள். ‘இல்ல உன்னை ஒப்சேவ் பண்ணிட்டிருந்தேன்’ எப்படியோ சமாளித்தான். ஆனால் ஏற்கவியலா இயலாமை அவனுக்குள் உருவாகி முடிந்திருந்தது. அதன் பிறகான எல்லா சந்தர்ப்பங்களிலும் நீலமேகம் அவளை விசித்திரமாய் அவதானிக்கத் தொடங்கியிருந்தான். தியானத்தின் போது விழிவெண்படலங்களை மாத்திரமே காட்டிடும் அவளது கண்களும், பிரம்மறி பிராணாயாமத்தின் போது அவளிடமிருந்து வெளியாகும் வண்டொன்றின் அப்படியேயான இரைச்சலும் கபாலபாத்தி பயிற்சியின் அசாத்தியமான எண்ணிக்கைகளும்… நாளுக்குநாள் அவர்களுக்கு இடையேயான விரிசலை மறைமுகமாய் அதிகப்படுத்தியபடியே இருந்தது. ஆனாலும் ஒவ்வொரு திங்கட்கிழமை அதிகாலைப் பொழுதுகளையும் அவன் மிக அதிகமாகவே விரும்பினான். பொதுவாகத் திங்கட்கிழமைகளின் போது மட்டுமே அவர்கள் நீலப்பந்து பிராணாயமா பயிற்சியில் ஈடுபடுவார்கள். நீலப்பந்து பிராணாயமா மிக முக்கியமான பயிற்சியொன்றாகையால் அது தீட்சையின் போது கற்பிக்கப்பட்ட அதே விதிமுறைகளுக்கமைவாகவே செய்யப்பட வேண்டுமென்பதும் அப்பயிற்சியின் இறுதியில் அடக்கமுடியாப் புணர்தலின் விருப்பம் உருவாகுமெனினும் அதனைக் கட்டுப்படுத்த வேண்டு மென்பதும் குருவின் கட்டளையாயிருந்தது. என்றாலும் நீலமேகம் வேண்டுமென்றே அதனை மீறினான். அவளையும் உடன்பட வைத்தான். அப்போதிலெல்லாம் இதுவென வகைப்படுத்திடவியலா உவகையொன்றைத் தனதாக்கிக்கொண்டு இயங்கத் தொடங்கும் நீலமேகத்தை அவள் மறுப்பதில்லையே தவிர எதையோ சிந்தித்தபடியே கண்மூடிக் கிடப்பாள். அன்றைய தினமும் திங்கட்கிழமையென்பதுவும் இன்னும் சற்று நேரத்தில் இருவரும் பிராணாயாமத்திற்குத் தயாராக வேண்டும் என்பதுவும் நீலமேகத்தின் தடுமாற்றத்தைக் கொஞ்சம் குறைப்பதாயிருந்தது. அவள் எழுந்து கொள்வதற்கு முன்பாகவே தயாராகி அவளுக்காகக் காத்திருந்தான். மாயா அவனில் சந்தேகப்பட்டிருக்கக்கூடும் என்பதற்கான எதுவித அறிகுறிகளும் அப்போதுவரைக்கும் தென்படவில்லை என்பது அவனுக்குக் கொஞ்சம் ஆறுதலாய் இருந்தது. நீலப்பந்து பிராணாயாம பயிற்சியும் அதன் பிறகான அவனின் திட்டமிட்ட கூடலும் வழமை போலவே தடங்கலின்றித் தொடர்ந்தன. அன்று சற்று அதிகமாகவே நீலமேகம் தன் ஆதிக்கத்தைக் காட்டத் தொடங்கியிருந்தான். அவளும் வழமையையொத்தே கண்கள் மூடிக் கிடந்தாள். மூடிய அவளின் கண்களின் வழியாய் அதிவேகமாய் கருமை படிந்த வெளியொன்று திறந்து கொண்டது. முதலில் விரும்பியே அவள் அதற்குள் பிரவேசிக்க எத்தனித்தாள். தன் நரம்புகளுக்குள் சுர்ரென்று பீறிடும் உணர்ச்சிக் கொந்தளிப்புகளை அப்படியே மூலாதாரச் சக்கரத்திற்குள் சுருக்கி அடக்கிவிடத் துடித்தாள். அங்கிருப்பதாய் எண்ணிக் கொண்டிருக்கும் அத்தாமரை மலர்கள் விரிவடைவதைக் கூர்ந்து அவதானித்தாள். தொடர்ச்சியாய் அவளது சிந்தனைகள் காரணங்களற்று அவ்விடத்தில் தடைப்படத் தொடங்கின.

எப்போதும் போல அத்தருணத்திலேயே எங்கிருந்தோ தோன்றியவனாய் அகிலன் அவளுக்குள் இருந்து கிளர்ந்தெழுந்து அருவமாய் அவள் மேனி படர்ந்து முழுமையாயத் தழுவத் தொடங்கியிருந்தான். ஆழ்ந்த உட்சுவாசத்தைப் பிடுங்கியெறிந்து அவளை ரம்மிய உலகொன்றிற்குள் இழுத்துச் சென்றான். மாயா இன்பமாய் மிதக்கத் தொடங்கினாள். இருவருமாய் அந்தரத்தில் ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். அவளது ஒவ்வொரு சிறு கலத்தையும் தன் ஸ்பரிசத்தால் அகிலன் பூக்கச் செய்தான். அதற்குப் பின்னராய் ஊசலாடும் அந்த இரு உடல்களும் சிலிர்த்து இரு சர்ப்பங்களாய் உருமாற்றமடைந்தன. அவை ஊர்ந்து மேலெழும்பி பிளவுபட்ட இரண்டு துண்டங்களாயத் தென்பட்டன. அந்தக் கணத்தில் சட்டென அவள் கண்விழித்து அகிலனை எப்படியேனும் பார்த்துவிட வேண்டுமென ஆர்வத்துடன் முயற்சித்தாள். பின் பயந்து வியர்த்து அந்நினைவிலிருந்து தப்பிக்க எண்ணினாள். ஆனால் நிஜத்தில் நீலமேகத்தின் திண்ம உடலே அவளுடலுடன் உராய்ந்தாற் போல தட்டுப்பட்டுக் கொண்டிருந்தது. அந்தத் தழுவலின் ஆக்ரோஸம் வழமையை விட அதிகரித்திருந்தது. அவள் நீலமேகத்தின் இறுக்கமான பிடிக்குள் இருந்து விடுபட முடியாமலும் அவனுக்குத்தான் மாபெரும் துரோகம் ஒன்றைச் செய்து கொண்டிருப்பதைக் காட்டிக் கொள்ள இயலாமலும் தவித்தபடி உணர்வுகளை இறுக்கமாக்கி வைத்திருந்தாள். அழக்கூடாதென்றும் அதிக பிடிவாதமாயிருந்தாள். அகிலனின் இந்த யாருமறியா அருவப்பிரவேசம்

கட்டாயமாயத் தவிர்க்கப்பட வேண்டிய தொன்றாயிருந்தாலும் அதனை மாயாவால் செய்யவியலாமலிருந்தது. இதுபற்றி எதுவொரு விடயத்தையும் நீலமேகத்திடம் பேசிக் கொள்ளவும் தயக்கமாக இருந்தது. அவளளவில் அகிலன் கிரியா யோகத்தின் அதிசய புத்திரன். பாபாஜியின் பாதங்களை மட்டுமல்லாமல் தன்னையும் தவமென விடாது பற்றிக் கொண்டிருப்பவன். முதலாவது யோக தீட்சையின் போது மாயாவின் எதிர்த் திசையில்தான் அகிலன் அமர்ந்திருந்தான். நடேசன் குருவின் அறிவுறுத்தல்ககளிற்கிணங்க எல்லோரும் கண்மூடி தியானித்துக் கொண்டும் தேவையேற்படும் போது குருவை அவதானித்துக் கொண்டும் இருந்தனர். அப்போது காரணமேயின்றி அகிலனும் மாயாவும் அடிக்கடி பார்த்துக் கொண்டார்கள். விழிகளின் அசாத்திய பாய்ச்சலால் இருவரது மனங்களையும் சந்திக்கவும் அனுமதித்தார்கள். அத்துடன் வடிவ மற்றதொரு சக்திக் கடத்தலையும் ஒருமித்து உணர்ந்தார்கள். என்றாலும் அதன் பிறகான எந்தவொரு சந்திப்பிலும் தங்களுக்குள்ளால் உருவாகி வளர்ந்து கொண்டிருக்கும் காதலைப் பற்றி அவர்கள் பேசத் துணியவே இல்லை. அப்படிப் பேச வேண்டுமென்று துணிந்த அந்த ஒரு உரையாடல் தான் அவர்களது இறுதி உரையாடலாகவும் மாறிப்போயிருந்தது. ‘நீ அபூர்வமான பெண்’ என்றான் அகிலன். ‘ஏன் அப்படி சொல்கிறாய்?’ என்றாள்‘தியானத்தின் படிகளில் திளைத்த வீரியம் உன் கண்களில் தெரிகிறது மாயா’.அவள் சிரித்தாள். ‘அதைத் தாண்டிய சிற்றின்ப உலகிற்கு நீ அழகாகவும் இருக்கிறாய் மாயா’ தொடர்ந்தும் சொன்னான். ‘என்னுடன் இருக்கச் சம்மதி உலகை வெல்லலாம்’

‘நானே விரும்பினாலும் அது சாத்தியமில்லை அகிலன்’ என்றாள். ‘ஏன் சாத்தியமில்லை. இருவருமாய் யோக பாதையின் உச்சம் காணலாம்’ ‘என் விருப்பைத் தாண்டிய வேறொரு கடமை எனக்கு இருக்கிறது’

‘சொல்… என்ன கடமை?’

‘சொன்னாலும் நீ நம்பப் போவதில்லை விடு’

‘உன்னில் முழு நம்பிக்கை உள்ளவன் நான். என்னவென்று சொல் மாயா’ சற்று தயக்கத்துடனேயே அவள் கூறினாள் ‘அது யோகம் எனக்களித்த வரம்…

என் கருவறை பரிசுத்தமானதென்றும் யோகத்திற்கு ஒரு சிசு உருவாக நான் கருவியாய் இருக்க வேண்டுமென்றும் அறிந்திருக்கிறேன்’

‘எப்படி அறிந்தாய்?’ அது இப்போதைக்கு வேண்டாம்’ ‘எனக்குத் தெரியாத இரகசியங்களும் உன்னிடம் இருக்கிறதா மாயா? அவனது பார்வை ஆழமாய் அவளை ஊடுருவியிருந்தது. அதன் பிறகாயும் அகிலன் சொன்னான். ‘மாயா நீயே என் சக்தி… நீ அற்புதமானவள்’

‘எப்படிச் சொல்கிறாய்’

‘என் மோனம் உன் வரவால் புத்துணர்ச்சி அடைகிறது. புதிதாயப் பிறந்து கொண்டிருக்கிறேன். என் சக்திகளின் எழுச்சிகளை அதிகமாக உணர்கிறேன்’

சிறிது மௌனம் காத்து அடுத்ததாய்க் கேட்டான்’ நாம் ஒருமுறை இணையலாம் வா’ மாயா அதற்குப் பதில் பேசாமல் நேருக்கு நேர் அவன் விழிகளை ஒருமுறை சந்தித்து மீண்டாள்.

‘தேவையெனின் இவ்வுலகின் பார்வைக்கு நாம் மணந்தும் கொள்ளலாம் மாயா’

‘இல்லைச் சாத்தியப்படாது அகிலன்’

‘என்ன சொல்கிறாய்?’

‘நிஜம். நான் பரிசுத்தமானவளாய் இருக்க வேண்டுமெனச் சொன்னேனே!’
‘அது என் குழந்தையாக இருந்துவிட்டுப் போகட்டுமே!’
‘அப்படி இருக்குமென்றால் வேண்டாமென மறுக்கவா போகிறேன் ! என்றாலும் அது எங்ஙனம் நடக்குமென இந்நொடி வரை நான் அறியவில்லை… அதற்காகச் செய்ய வேண்டியவை பற்றியும் குருஜியே வழிகாட்டுவதாய்ச் சொல்லியிருக்கிறார்’

‘யார்..? நடேசன் ஐயாவா?

‘ம்ம் … அவர் கட்டளைகளுக்காகவே காத்திருக்கிறேன்’

‘முட்டாளா நீ..!’

‘உளறாதே அகிலன்’

‘மாயா நிதானமாக யோசி இது சாத்தியமேயில்லை’

‘நீ குருஜீ பற்றி அறிய வாய்ப்பில்லை’

‘சொல் நீ என்ன அறிந்திருக்கிறாய்?’

'தியானத்தின் வழி பல அற்புத சக்திகளை பெற்றவர் அவர்'

'வேறு'

'தூய்மையானவர்'

'வேறு'

'வேறென்ன தெரிய வேண்டும் உனக்கு?'

'நீ பிதற்றுகிறாய் மாயா... பாலுணர்ச்சிக்கும் குண்டலினி சக்திக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதை நீ அறிவாய் தானே? அவர் உன்னைப் பயன்படுத்த எண்ணியிருக்கலாம்... அதற்கு தேவையான பெண் நிச்சயம் யோக வழியைப் பின்பற்ற வேண்டும்... அவள் தியானத்தில் உச்ச நிலை அடைய வேண்டும் ... கூடவே அவள் அழகாகவும் இருக்க வேண்டுமென அவர் விரும்பியதால் உன்னை அவர் தெரிவு செய்திருக்கலாம்.'

'எல்லாமே சரிதான்... நான் அவரை நம்புகிறேன் என்பதை விட இப்படியொரு சந்தர்ப்பத்தைத் தவறவிடக் கூடாதென்பதையே அதிகமாய் யோசிக்கிறேன்'

'நான் சொல்வதே நிஜமாயிருக்கும் மாயா'

'வேண்டாம் என்னை அதிகம் குழப்புகிறாய்... இதில் நீ தலையிடாதே'

'அப்படியே இருக்கட்டும் விடு... ஆனால் நம் காதல் !'

'நம் நோக்கம் யோக மோட்சமெனின் காதல் எதற்கு?'

'மாயா என்னை நம்பு... நீ அவரால் வசியப்பட்டிருக்கிறாய். உன் வலிமை எதுவென்பதை அறியாமல் சுயம் தொலைத்துத் திரிகிறாய்'

'என்னை இப்போது என்ன செய்யச் சொல்கிறாய்?' அவள் கத்திப் பேசினாள்.

'அந்தச் சதிகாரனிடமிருந்து வெளியே வா... குரு எனும் பதத்தின் புனிதம் கலைத்த துரோகியாகவே அவரை நான் காண்கிறேன். நன்றாக யோசித்துச் சொல் எப்போதேனும் அவர் உன்னை ஸ்பரிசித்ததுண்டா?'

'ஒரு தடவை அவரின் உள்ளங்கை மையத்தில் வெளியாகும் சக்திப் பாய்ச்சலைத் தொட்டுச் சிலிர்த்திருக்கிறேன்'

'நான் உன்னைக் காப்பாற்ற வேண்டும். நீ மொத்தமாக அவன் வசப்பட்டிருக்கிறாய்'

'நீ சொல்வது உண்மையாயிருந்தாலும் பரவாயில்லை... இத்தனை காலம் நம்பிய ஒன்றை மாற்றி யோசிக்க நான் விரும்பவில்லை. இங்கிருந்து போய்விடு அகிலன் எனக்குப் பைத்தியம் பிடிக்கிறது' தன்னிலை மறந்து சத்தமிட்டு ஆர்ப்பரித்தாளவள். கையிலிருந்த ஓசோவின் புத்தகத்தை வீசியெறிந்து விட்டுக் கோபமாக அங்கிருந்து சென்ற அகிலனை அதற்கு பிறகு மாயா சந்திக்கவே இல்லை. ஆனால் அவன் குருவுடன் சண்டை போட்டதுடன் இதனை அம்பலப்படுத்தப் போவதாயும் மிரட்டியிருக்கிறான் என்பது குருவின் மூலமாகவே பிறகு தெரியவந்தது.

'இரகசியம் பேணத் தெரியா முட்டாள் நீ' என்று குருஜீ ஆதங்கப்பட்டார்.

'அகிலன் மாபெரும் தவறிழைத்திருக்கிறான். தேவையின்றி என் வழியில் குறுக்கிட்டதால் அவனது யோக பாதையையே என்னால் தகர்த்தெறிய முடியும் ... அவனைத் தெருவில் அலைய வைக்கப் போகிறேன் பார்' என்று ஆவேசப்பட்டார்.

'நானே தண்டிக்கப்பட வேண்டியவள் அவனை ஒன்றும் செய்யாதீர்கள்' என்று கெஞ்சியழுதாள் மாயா. 'சற்றும் தகுதியற்றவளாய் போயிருக்கும் நீ என் வேள்விகளுக்குள் வரக்கூடாது... போய்விடு' என்று குருஜீ மாயாவை முற்றாக மறுத்தார். ஆனால் இதற்குப் பரிகாரமாய் 'நீ சிற்றின்ப வாழ்வில் உழன்று பின் மீள வேண்டும்' என்றார்.

'நான் சொல்பவனையே நீ மணம் முடிக்க தயாராயிருந்தால் அகிலனை மன்னித்து விடுகிறேன்' என ஒத்துக்கொண்டிருந்தார். இல்லற வாழ்வைத் துறந்து யோகத்தில் முழுவதுமாய் பயணிக்கும் தன் ஆழ்மனக் கனவை அகிலனுக்காக மாற்றிக் கொண்டாள் மாயா. யோசிக்கும் திராணியற்று குருவின் உத்தரவிற்கு அப்படியே இணங்கினாள். நீலமேகத்துடனான தனது வாழ்க்கையை அனுமதித்தாள். ஆனாலும் முழுதாக நீலமேகத்தை ஏற்க முடியாத தவிப்பை மறைக்க யோக மோட்சத்துக்கான பாதையைத் தேடி மேலும் அதிகமாய் தியானிக்கத் தொடங்கினாள். தியான நிலையின் பேரின்ப நிலையினை அனுபவிக்க ஆரம்பித்து ஆன்மாவிடம் தஞ்சித்துப் பறப்பதாய் உணரும் அக்கணங்களில் அகிலனின் வருகை மிகச் சாதாரணமாக நடந்து முடிவதை எண்ணி அகம் பூரித்துச் சிலிர்ப்படைவதையும், வலிந்து பறித்துத் தூர எறியப்பட்ட மலரொன்றைச் சூடிக்கொண்ட களிப்பைத்தான் அனுபவிப்பதையும் எங்கனம்

தவிர்ப்பதென்பது அவளுக்குத் தெரியாமலிருந்தது. அகிலனும் இதே பிரம்மமுகூர்த்த பொழுதுகளில் தியானிப்பதற்கான வாய்ப்புகள் உண்டென்றாலும் தியானத்தின் வழியால் இரு ஆன்மாக்கள் சந்திப்பதும் சந்தோசிப்பதும் மெய்யாகவே சாத்தியப்பாடானது தானா…? இதனை யாரிடம் கேட்டு தெளிவடைவதென மாயா குழம்பினாள். பின் எங்ஙனம் குறிப்பிட்ட நிலை தாண்டிய உணர்வுகளுடன் அவனால் சங்கமிக்க முடிகிறது..? இது யதார்த்தமானதாய்த் தோன்றவில்லையே…! அப்படியே இது உண்மையெனில் குருஜீ இதனை அறிந்திருப்பாரா? அகிலனைத் தண்டித்து விடுவாரா? அல்லது தன்னைப் புனிதம் கெட்டவள் என்று சபிப்பாரா? எதற்குமே பதில் தெரியாதவளாய், தியானத்தின முன்பின்னான உறக்க நிலைகளில் மாயா அவஸ்த்தையுற்றாள். இறுதியில் குருஜீயிடமே இதுபற்றிப் பேசுவதெனவும் தீர்மானித்துக் கொண்டாள்.

## 2

அன்றைய வகுப்புத் தொடங்குவதற்கு முன்பாகவே மாயா வந்து அமர்ந்து கொாண்டிருந்தாள். தியானத்திலிருந்து மீண்ட நடேசன் குரு 'நானே உன்னை அழைக்க நினைச்சேன்' என்றார்.

'உங்கட்ட கொஞ்சம் பேசணும் குருஜீ'

'நீ என்ன பேசப் போறன்னு தெரியும் மாயா… எல்லாமே சரியாதான் நடக்குது..'

'இல்ல குருஜீ நீங்க நினைக்கிறமாதிரி எதுவுமே சரியா நடக்கல'

'இந்த மாச பௌர்ணமி தினம்.. பிரம்மமுகூர்த்த பொழுதின் ஒருகணம் அந்தக் கருவுக்கான நேரமாக இருக்கலாம் மாயா'

'என்னால அத நம்ப முடியல குருஜீ… என்ன மன்னிச்சிடுங்க. அந்தப் புனிதம் என்னட்ட இப்போ எப்படி இருக்க முடியும்? நான் இன்னொருத்தரோட மனைவி'

'அது பற்றிய கவலை உனக்கு வேணாம்'

'ஆனா அகிலன்…' அவள் நிறுத்திக் கொண்டாள். குருஜியின் முகம் சட்டென மாறியது. 'அவனுடன் தொடர்பில் இருக்கிறாயா?' இந்தத் திடீர் ஆவேசத்தை மாயா எதிர்பார்க்கவில்லை.

மாயா இப்போது பயந்தவளாய்த் தோன்றினாள்.

குருஜீ கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டார். தன் கோபத்தைத் தணிக்க முயல்வதைக் காட்டிக் கொள்வதாய் இருந்ததந்த அசைவுகள். சற்று நேரம் தாமதித்துக் கண்கள் திறந்த அவர் தன்னிலை மறந்து கோபத்தின் உச்சம் தொட்டிருந்தார். அதற்குள் நாலைந்து பேர் வகுப்பிற்குள் வந்து விட்டிருந்தனர். நீலமேகமும் வந்திருந்தான். குருஜீ சாதாரண நிலைக்குத் தன்னை மாற்றி எப்பொழுதும் போல முதல் பதினைந்து நிமிட வகுப்பைக் கலந்துரையாடலுக்குள் மூழ்க வைத்தார். அன்று, கௌதம புத்தர் சித்தார்த்தனாய் இல்லறம் துறந்த உணர்வு பற்றிய வாதங்கள் சூடுபிடித்தன.

'சித்தார்த்தன் புத்தராக மாறிய பின் அவருக்காகவே பரிசுத்த வாழ்வொன்றை யசோதரா ஏற்றுக் கொண்டிருந்தாள். ஆகவேதான் அவளது அத்தனை எண்ணக் குமுறலையும் போக்கிக் கொள்வதற்காய் தன் பாதத்தை ஸ்பரிசித்து அழுதிடும் பெரும் வாய்ப்பைப் புத்தர் அவளுக்கு அளித்தார்'

தொடர்ச்சியாய் யசோதராவின் புனிதம் தொடர்பாக குருஜீ பேசிக்கொண்டேயிருந்தார். இடைக்கிடை மாயாவையும் அவதானித்தார். மாயா தன்னையறியாமல் கண்களை மூடிக்கொண்டு யசோதராவின் உணர்ச்சிக் கொந்தளிப்புகளைத் தனதாக மாற்றி யோசிக்கத் தொடங்கியிருந்தாள். பிறந்த குழந்தையுடன் ஆசையாய்க் கணவனை எதிர் பார்த்திருந்த அல்லது கணவனின் அருகாமைக்குத் தவித்திருந்தவளிடம் சொல்லிக் கொள்ளாமல் ஒருவன் வெளியேறித் துறவு கொள்கிறான். தனக்காக வாழ்வை இடையில் துறந்த அற்புதப் பெண்ணென அவளைக் கொண்டாடுகிறான். அவளது மனக்குமுறல் தீரட்டுமென்பதற்காக ஒரேயொரு தடவை அவனது பாதங்களைத் தொடுவதை வாய்ப்பாய் அளித்துப் பெண்ணுக்குச் சரிசம உரிமை கொடுத்ததாய்ப் பாராட்டையும் பெறுகிறான். யசோதரா விரும்பித்தான் கௌதமனை ஏற்றாளா… அல்லது புத்தன் எனும் உத்தமனுக்குச் சக்தியாகும் புனிதம் உன்னிடம் மட்டுமே உண்டென்று நம்பவைத்ததால் அவள் அச்சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டாளா…? ஆனால் யசோதராவிற்குக் குற்றவுணர்ச்சி என்றொன்று இருந்திருக்க வாய்ப்பில்லையே…! நடுவில் நீலமேகம் என்ன பாவம் செய்தான்? அவனேன் ஏமாற்றப்பட வேண்டும்? அவனுக்கான பதிலை யார் தந்து விட முடியும்? அதையும் விதியென்பதாய்க் கூறித் தப்பித்துவிடுதல் நியாயம்தானா? அப்போது குருஜீ கூறினார் …'யசோதரா என்பவள் சக்தி. சக்தியும் சிவமும் என்றாவதே உலகம். ஆகப் பிறவிகள் தோறும்

யசோதராவே புத்தனின் ஆத்மாவிற்குத் துணையாக வேண்டும் என்ற வரத்தையும் பெற்றுக் கொள்கிறாள்' மாயா கோபம் மேலோங்கச் சூழல் மறந்து அவரது பேச்சை இடைமறித்தாள். 'இல்லை… பிறவிகள் தோறும் சக்தியாக வேண்டுமென்ற வரத்தை யசோதரா விரும்பியேற்றிருக்க மாட்டாள். அவளது அனுமதியின்றி அந்த வரத்தை அளித்த கடவுள் பெரும் துரோகியாகவே இருக்க வேண்டும்'

'புரியாமல் பேசாதே மாயா. கடவுள் எப்படித் துரோகியாக முடியும்? அது அப்படித்தான் ஆகவேண்டுமென்பது அவளது விதி' 'அதுதான் விதியாக இருக்குமானால் அவளால் எப்படிக் காதல் வசப்பட்டிருக்க முடியும்? இல்லையேல் யாரோ கைகாட்டிய ஒருவனை மணந்து எப்படி இல்லறம் என்ற பெயரில் பெருந்துரோகம் ஒன்றைச் செய்ய முடியும்? நான் எதற்காகச் சம்பந்தமேயில்லாத நீலமேகத்திற்குத் துரோகியாக வேண்டும்?' அவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பது புரியாமல் எல்லோரும் மாறி மாறி இருவரையும் பார்த்தார்கள். நீலமேகம் அதிர்ச்சியடைந்தவனாய் அமர்ந்திருந்தான். 'யசோதரா பயங்கரமாக ஏமாற்றப்பட்டிருக்கிறாள் குருஜீ. உண்மையறிந்து வெளியேறத் தைரியமற்ற ஒரு பெண்ணாய் அந்த யசோதரா வேண்டுமென்றால் இருந்திருக்கலாம் ஆனால் நான் மாயா'…. மாயா இன்னும் சொன்னாள். 'என் அனுமதியின்றி எனக்கு விருப்பமற்ற வரத்தை அளிப்பவர் கடவுளாகவே இருந்தாலும் அவர் தண்டிக்கப்பட வேண்டியவர். பல கேள்விகளுக்கு அனைவர் மத்தியிலும் பதில் தர வேண்டியவர். 'நிதானமிழந்து பேசுகிறாய்…மாயா' தன் குரலுயர்த்திப் பேசி அவளது தொடர்ச்சியான வாதாடலை நிறுத்த முயன்றார் குருஜீ. 'இல்லை இப்பொழுதுதான் நிதானமாகப் பேசத் தொடங்கியிருக்கிறேன்… காலமெல்லாம் ஒருவனுக்குத் துரோகியாவதை என்னால் ஏற்க முடியவில்லை. நீலமேகத்திற்கான பதிலை நீங்கள் மட்டுமே தரமுடியும். மேலும் ஒவ்வொரு தியானத்திலும்…. ஒவ்வொரு புணர்ச்சியின் போதும் என் அனுமதி இல்லாமலேயே அகிலன் எனக்குள் வந்து போகிறான் என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்ளவும் வேண்டும்.' முற்றிலும் சூழ்நிலை மறந்து கோபம் தெறிக்கச் சத்தமாகக் கத்தினாள் அவள். 'இழிகுலத்து நாயே உன் புத்தியைக் காட்டி விட்டாய் … உன்னைச் சரிசமமாக மதித்து என் ஸ்பரிசத்தைப் பெறத் தகுதியாக்கினால் கண்ட நாயோடெல்லாம் புணர்கிறேன் என்று என்னிடமே சொல்கிறாயா? வகுப்பில் இருந்த எல்லோரும் புரிந்தும் புரியாமலுமாய் பார்த்துக் கொண்டிருந்தார்கள். குருவின் இந்தப் புதிய முகம் அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது. மாயாவும் அதியுச்ச கோப நிலையிலேயே பேசினாள்.

'தகுதி என்பது வெறும் உயர்குல பிறப்பால் மட்டுமே அமைவதாய் எண்ணிக் கொண்டிருக்கும் மகாகுருவே நீங்கள் எதிர்பார்த்ததைப் போலவே யசோதராவின் கருவறை மிகப்புனிதமானதுதான். அவளுக்கும் ஒரு ராகுலன் பிறக்கத்தான் போகிறான் ஆனால் அவன் நிச்சயமாய் புத்தனது சிசுவாய் இருக்கமாட்டான்' மாயா வகுப்பிலிருந்து வேகமாக வெளியேறினாள்.

## 'எழுத்து எனப்படுப'

உயிர் எழுத்து பதினைந்து மெய் எழுத்து பதினெட்டு ஆக முப்பத்து மூன்று எழுத்துக்களையும் எழுத்துக்கள் என்று சொல்லவேண்டும் என்பதை **'எழுத்து எனப்படுப'** என்ற இலக்கணச் சொற்றொடர் விளக்குகின்றது.


உயிர் எழுத்தையும் மெய் எழுத்துக்களையும் சேர்த்து உருவாக்கப்பட்ட உயிர் மெய் எழுத்துகள் கூட்டு எழுத்துகள் எனப்படும். அவை தனி எழுத்துகள் இல்லை. தனி எழுத்துக்களையும் கூட்டு எழுத்துகளையும் சேர்த்து எண்ணி எழுத்துக்களின் எண்ணிக்கையைச் சொல்வது இரட்டை எண்ணிக்கை. அதாவது எண்ணியதையே திரும்பவும் எண்ணுவது தவறாகும்.

இப்போது முதல் மூன்று சூக்கும எழுத்துக்களை நீக்கிவிட்டு பன்னிரண்டு உயிர் எழுத்துக்களையும் பதினெட்டு மெய்யெழுத்துக்களையும் கூட்டுவதற்குப் பதிலாக பெருக்கி 216 உயிர் மெய் எழுத்துக்கள் என்று சொல்கிறார்கள்.அவை தனி எழுத்துக்கள் அல்ல. இப்படிப்பட்ட தவறு ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் ' **எழுத்தெனப் படுப'** என்று எழுத்தைப்பற்றி இலக்கணம் சொல்லும் நூல் மரபின் முதல் செய்யுள் தொடங்குகின்றது.

**– தொல்காப்பியம் –**

# கட்டுச் சோறு

க. செந்தூரன்



வானம் பஞ்சுக் குவியல் போன்ற வெள்ளை மேகங்களின் திட்டுக்களால் வெளிறியிருந்தது. நீல வர்ணமும் தன் பங்கிற்கு வீதியுலா வந்து கொண்டிருந்தது. இலட்சியமில்லாமல் ஆங்காங்கே சில பறவைக் கூட்டங்கள் சுவாரஸ்யமின்றித் தலைகளை நிலை குத்தியனவாய் அந்தரத்தில் அலைந்தபடியே உலாவித்திரிந்தன. எனது கடிகாரம் காலை ஒன்பது  மணியென்பதை ஒப்புவித்துக் கொண்டிருந்தது.

“அம்மா, தாயே..தம்பீ இன்னும் நான் காலைச் சாப்பாடு கூடச் சாப்பிடேல ஏதாச்சும் தான தர்மம் பண்ணுங்க… ஈக்கள் மொய்த்த கரிய தேகமும் அடர்த்தியான தலைமுடியுமாக வற்றிப் போன தொண்டையால் குரல் எழுப்பிப் பிச்சை கேட்டார் அந்தப் பிச்சைக்காரர். என்னோடு நின்றவர்களும் நானும் ஏக நேரத்தில் திரும்பிப் பார்த்தோம். வலது கையை முன்னால் நீட்டியவாறே அலங்கோலமாய்ப் போர்த்திருந்த சாறம் அரையிலிருந்து கழன்றது கூடத் தெரியாமல் இரு கால்களையும் நீட்டிப் பரத்திக் கொண்டு என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார். பல நாட்களாகத் தண்ணியோ எண்ணையோ படாமலும் பல நூற்றாண்டுகளாய்ச் சீப்பே அறியாத பரட்டைத் தலையும் சந்தான குரவர்களின் சாயலிலே நீண்ட வெண்தாடியும் இடையிடையே துருவேறிய செப்புக் கம்பி போன்ற பழுத்த நிற நீள முடியுமாக இருந்தார். அருவருப்பான பிச்சைக்காரர் என்று எண்ணிக் கொண்டே இரண்டு அடிகள் முன்னோக்கி நகர்ந்து சென்றேன்.

“தம்பி.., உன்னத்தான் ..ஏதாச்சும் சாப்பாடு வாங்கித் தா ” விலகிப் போனாலும் வெடுக்கென்று கேட்டார்  சங்கடமாகிப் போனேன். குற்றவாளிக் கூண்டில் நிற்கும் திருடன் போல என் சிறிய கண்களைப் பெரிதாய் உருட்டியவாறே மேலும் இரண்டு பாத நடையால் முன் நகர்ந்தேன் நாகரிகம் தெரிந்தவர் போலப் பிறகு என்னை அழைக்கவில்லை. பாவம் இப்படி எத்தனை பேரிடம் கெஞ்சிக் கேட்டு ஏமாந்தாரோ யாரறிவார். சிறிது நேரம் கழித்து மெது மெதுவாகத் தலையைத் திருப்பி அவரைப் பார்த்தேன். இப்போது அவர் என்னைப் பார்க்கவில்லை. சற்று நிம்மதிப் பெருமூச்செறிந்தவனாக உடலை வளைக்காது தலையை இரு புறமுமாகச் சுற்றிப் பார்த்தேன். அங்கே அவர் மட்டுமல்ல மனநலம் குன்றிய

ஒருவர் வீதியில் போய் வருபவர்களை வெறித்துப் பார்த்தபடி அரசியல் தலைவர்களையும் ஆமிக்காரர்களையும் திட்டித் தீர்த்துக் கொண்டு இரப்பவராகவும் இன்னும் சற்றுத் தள்ளி நெடுஞ்சாண் கிடையாக மார்பைக் குறுக்கறுத்துச் சுற்றியிருந்த மாராப்பு சகிதம் வயதான ஒரு பெண் மணியுமாய் கண் அயர்ந்து கொண்டிருந்தாள். நாட்டில் இப்படிப் பல முதியவர்கள் முறிந்து விழுந்த கிழட்டுக் கொப்புகள் போல வீதிகளிலும் தெருவோரங்களிலும் பஸ் ஸ்ராண்ட்களிலும் மூத்திர நெடில் மூக்கைத் துழைக்க வீழ்ந்து கிடக்கிறார்கள் என்ற உண்மை இலேசாக வலித்தது ஆனாலும் பசித்தவனுக்குப் பத்து ரூபா கூடக் கொடுக்காத உனக்கு எதுக்குப் பரிவும் பாசமும் என்று என்னை நானே திட்டியவனாகப் பேருந்திற்காக ஏங்கிக்கொண்டிருந்தேன். பரந்தனிலிருந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குப் போகுமளவிற்கான பஸ் கட்டணத்தோடு பொருந்திப் போகும் பணத்தோடு பஸ்ஸிற்காகக் காத்திருக்கிறேன். நான் ஒன்றும் கருமியல்ல அப்பாவின் வைத்தியச் செலவுகளைத் தனியொருவனாகக் கவனிப்பதால் இப்போதெல்லாம் இதுபோன்ற ஈவிரக்கங்களை விட்டொழித்து விட்டேன். அவ்வளவுதான். இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று தனியார் பேருந்தை முந்தி அசுர வேகத்தில் என் மானத்தைக் காக்க விரைந்து வந்து சடுதியாகத் தடுப்பைப் பிரயோகித்தது. முண்டியடித்து ஏற முற்பட்டேன்.

“பொறுங்க, முதல்ல ஆக்கள் எறங்கட்டும் ” கண்டக்டர் குரல் வைத்தார். கண்டக்டரின் மொழி வாடையை மோப்பம் பிடித்தவனாய் அப்போதுதான் உணர்ந்தேன் அது யாழ்ப்பாணம் - திருகோணமலை பஸ் என்று. தமிழ் வாத்தியாராக இருப்பதாலோ என்னவோ பிரதேச மொழி நடை என்னோடு கொஞ்சம் ஒட்டிவிடும். இரண்டு, மூன்று பேர் புட்போர்ட் படிகளால் இறங்கினர். ஒருவன் மட்டும் மூட்டை முடிச்சுக்களோடு புதிதாக நிவாரணம் வாங்கி வருபவன் போல ஆடி அசைந்து இறங்கினான். அவனும் இறங்கி முடித்ததுதான் தாமதம் ஆசனத்தைப் பிடிக்க வேண்டுமே என்ற பேரார்வத்தால் மிதிபலகையில் காற்பாதங்களின் கணநேர உரசல்கள் கூடப்படாதவாறு முண்டியடித்து ஜன்னலோர ஆசனமொன்றைப் பிடித்துக்கொண்டேன். யாழ்ப்பாணம் போகும் மட்டும் சீட் இருக்கிறதே என்ற அற்ப ஆசையை அடி மனத்தில் நட்டவனாகச் சீட்டில் இருந்தவுடனேயே கண்ணாடியின் நாதாங்கியை அழுத்தி இழுத்துக் காற்றை வரவழைத்தேன். எங்கோ சென்று கொண்டிருந்த தென்றல் காற்று என் நிலையை உணர்ந்து வழிந்து வந்து என்மேல் மோதியது. இப்போது தலையைத் திருப்பி வெளியே பார்க்கிறேன். அந்தப் பிச்சைக்காரர் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒரு செத்த பார்வையை அவரிடம் பதித்து விட்டுக் குற்ற உணர்ச்சிக்காரனாய் மறுபக்கம் திரும்பினேன். நிறுத்தி வைத்திருந்த இளையராஜா பாடல் இசைக்கத் தொடங்கியது. என் நினைவுகளோ கொஞ்சம் அப்பாவின் பக்கமாய் சிந்திக்கத் தொடங்கியது. இன்றோடு அப்பாவை யாழ்ப்பாணத்துப் பெரியாஸ்பத்திரியில் சேர்த்து இருபது நாட்களாகிறது. எந்த முன்னேற்றமும் இருப்பதாகத் தெரியவில்லை. இத்தனை வருடங்களாகத் தன்னையும் தன் மகனையும் சுமந்த நன்றி மறவாத அம்மாவும் நானுமாக மாறி மாறி அப்பாவைக் கவனித்து வந்தோம். இன்று வேலை நாள் லீவு என்பதால் அம்மாவை வீட்டிற்கு அனுப்பிவிட்டு அப்பாவை நான் பார்த்துக் கொள்ளலாம் என்று பஸ் ஏறிவிட்டேன். சலரோகக்காரர்களுக்கென்று தனியாக ஒதுக்கப்பட்ட வார்ட்டில் அப்பாவோடு பல நோயாளர்களும் நானுமாக இருந்தோம். இரத்தத்தில் சீனியின் அளவு குறையவேயில்லை. அதனால் அப்பாவிற்கு உணவென்பது இப்போது தூரமாகிப் போனது. வெறும் உப்புக் கரைசல் கலந்த எலுமிச்சைப் பழச்சாறே உணவாகிப் போனது. சில வேளைகளில் “ஐயா, பசிக்குது சாப்பாடு தாறியாடா” செல்லமாகக் கேட்பார். என்னை ஐயா என்று தான் கூப்பிடுவார். தன் தந்தையைப் போல நான் இருப்பதாகக் கூறி அடிக்கடி ஆனந்தப்பட்டுப் பெருமை கொள்வார்.

“அப்பா, உங்களுக்குச் சோறு குடுக்க வேண்டாமாம் அதோட இப்ப நீங்க முன்னப் போல சாப்பாட்டத் தொண்டையில வச்சு விழுங்குறீங்க இல்ல அதால தான் நான் உங்களுக்கு நீராகாரமாத் தாறன் குடியுங்க என்ன ” ...கலங்கிய என் கண்களை உள்ளங் கையின் மேட்டுப் பகுதியால் துடைத்தபடி அப்பாவின் மஞ்சள் படிந்திருந்த மார்பை வருடிக் கொடுத்துக் கொண்டே கூறினேன். “ஐயா, டொக்டர் அப்பிடியா சொன்னவர் அவையள்.. அப்பிடிச் சொன்னா சரியாத்தான் இருக்கும் ”

“நீ தாறதத் தா, நான் குடிக்கிறன் எனக்கு ஒண்டும் நடக்காது நீ அழாத ” நான் பிறகு சாப்பிடுறன்.

தலையை மட்டும் அசைத்துக் கிடந்தார். பிள்ளைகள் அழுவதை விரும்பாத அப்பாக்களின் மனம் அப்பட்டமாய் எனக்கு விளங்கியது. காலையில் பெரிய டொக்டரின் பார்வை நேரம்

“கூட நிக்கிற ஆக்கள் வெளியில போய் வாங்குகளில இருங்கோ பெரிய ஐயா பார்க்க வாறநேரம்” நடுத்தர வயதுடைய பெண் தாதி ஒருத்தி உரத்துக் குரல் கொடுத்தார். நானும் என்னைப் போன்று பராமரிப்பாளர்களாக நிற்பவர்களும் வெளிக் கதிரைகளிற் போய்க் குந்திக்கொண்டோம்.

“நேர்ஸம்மா, எனக்கு இன்னும் ஊசி போடல... அப்பா உரத்துக் கத்திய அந்த தாதியிடம் சொல்லிக் கொண்டிருப்பது என் காதுகளுக்குக் கேட்டது. “ஓம் ஐயா, இப்ப பெரிய டொக்டர் வருவார் அவர் வந்து உங்களப் பார்த்த பிறகுதான் ஊசி போடுவம்” அத்தனை வலிமையாகவும் உரமாகவும் வார்ட் முழுக்கக் கேட்கக் கத்திய தாதியம்மா அப்பாவிடம் உறைந்து போய்க் கூறிய வார்த்தைகளால் மெய்சிலிர்த்துப் போனேன். தாதியர்களின் மனநிலை இந்த உலகில் யார்க்கு வாய்க்கும் ? எப்படித் தொனியை மாற்றியே மருந்தாகுகின்றார்கள். எல்லாம் அனுபவம் தானே. அனுபவத்தைப் போல அசகாயசூரன் எங்குள்ளான். தாதியர்கள் பெருமையை வியந்து கொண்டே நடப்பவற்றை அவதானித்துக் கொண்டிருந்தேன்.

நேரம் ஒன்பதைத் தொடுவதற்குக் கெந்திக் கெந்தி விரைந்துகொண்டிருந்தது. பெரிய டொக்டர் சில வைத்திய மாணவர்கள் புடைசூழ ஒரு போர்த் தளபதி போல பேராண்மையோடு நடந்து வந்தார். அனேகமாக ஆங்கிலத்திலேயே தன்னோடு இருந்தவர்களிடம் உரையாடினார். ஆனால் நோயாளிகளிடம் மிகவும் வாஞ்சையாகத் தமிழிற் பேசினார். பெரிய டொக்டரின் தமிழைக் கூர்ந்து கவனித்த நான், “ யாழ்ப்பாணத் தமிழ் டொக்டர் தான் ” அப்ப அப்பாவை நல்லாக் கவனிப்பார் என்று மனதிற்குள் நம்பிக்கொண்டேன். வார்ட்டில் எல்லா நோயாளிகளையும் பெரிய டொக்டர் பார்ப்பதில்லை. அந்தந்த வார்ட்டுக்குப் பொறுப்பான டொக்டர்களுக்குச் சிக்கலான நோயாளியாக வெளிப்படுபவரை பெரிய டொக்டருக்கு தெரிந்து கொடுப்பர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட எளிதில் நோயின் தன்மைகளைக் கண்டறிய முடியாத சிக்கலான நோயாளர்களைத் தான் அவரும் கையாளுவார் என்பது எனக்கு இப்போதுதான் புரிந்தது. அப்பாவைக் கடந்து சென்றால் அப்பாவின் நோய் சிறியது அப்பாவோடு மினக்கெட்டால் அப்பாவுக்கு சிக்கலான நோய் என்று என்னுள் ஒரு கணக்கைப் போட்டு வைத்தேன். அப்பாவுக்குச் சிக்கலான வியாதியாக இருந்துவிடக்கூடாது அப்பாவை அவர் கடந்து சென்றுவிட வேண்டும் என்றும் மனம் விரும்பியது.

“எட்டாம் ஐந்தாம் நம்பர் கட்டிலைப் பாருங்க” வார்ட்டுக்குப் பொறுப்பான அந்தக் குண்டு வெள்ளை டொக்டர் ஆங்கிலத்தில் கூறிக்கொண்டே மருத்துவக் குறிப்புக்களை எழுதி வைத்திருந்த பைலை நீட்டினார்.

“ ஐயா, ஒருக்கா எழும்பிக் குந்தியிருங்க ” அப்பாவைப் பார்த்து பெரிய டொக்டர் கூறினார். அப்பா இரண்டு கைகளையும் நீச்சலடிப்பவர் நீரை வலிப்பது போல அசைத்து மெத்தையில் ஊன்றிக் கொண்டு எழ முயன்றார். பாவம் அவரால் முடியவில்லை.

“சரி படுங்க ”

“டொக்டர், நான் வீட்ட போகலாந்தானே ?” அப்பா பெரிய டொக்டரைக் கேட்டார்.

“ போகலாம் போகலாம். இவரோட நிக்கிறது யார்?” பெரிய டொக்டர் அழகுத் தமிழில் கேட்டார்.

கூட இருந்த பெரிய டொக்டரின் பரிவாரங்களில் ஆண் தாதி ஒருவர்,

“ அஞ்சாம் நம்பர்க் கட்டில் ஐயாவோட நிக்கிற மகன் வாங்க” கூப்பிட்டதுதான் தாமதம் விரைந்து சென்றேன்.

“அப்பாவில மாற்றங்கள் ஏதாவது தெரியுதா உங்களுக்கு..?”

“ ஓம் டொக்டர் ”

“என்னென்ன மாற்றங்கள் தெரியுது” மறுமுறை கேட்டார்.

“கொஞ்சம் வாய் பிசத்துறார். சாப்பாடு கேட்கிறார் ஆனால் கொடுத்தால் தொண்டைக்குள் வச்சிருந்து துப்புறார் ” நான் உணர்ந்தவற்றை ஒப்புவித்தேன். டொக்டர், அப்பாவை அசைத்துப் பார்த்தும் அப்பாவின் கழுத்தைத் தன் பெருவிரலாலும் சுட்டு விரலாலும் அழுத்தியும் பார்த்தார். அப்பாவோ..,

“ எனக்கு ஒண்டுமில்ல டொக்டர் ” என்றார். பெரிய டொக்டரும் பரிவாரங்களுமாகச் சிரித்தனர். எனக்கும் சிரிக்க வேண்டும் போலிருந்தது அப்பாவின் நிலையால் சிரிப்பை விழுங்கி விக்கித்தேன்.

“டொக்டர் நான் வீட்ட போகலாம் தானே ” அப்பா மீண்டும் கேட்டார்.

“போகலாம் போகலாம் ” சொல்லிக் கொண்டே மற்றைய டொக்டர்களிடம் இங்கிலீஸில் நிறையச் சொன்னார். எனக்கோ எதுவும் புரியவில்லை ஒரு பரம பக்தன் கீழிறங்கி வந்த இறைவனைப் பார்த்துக் கொண்டிருப்பது போலக் கையெடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

“ மிஸ், அப்பாவுக்குச் சலரோகம் தானே நோய்? பிறகு ஏன் மூக்குக்குள்ளால ரியூப் போடுறீங்க ” பயத்தோடும் பதட்டத்தோடும் கேட்டேன்.

“உணவுக் கால்வாய் அடைபட்டிருக்கு இனி நீராகாரம்தான் கொடுக்க வேணும்” சுருங்கக் கூறிவிட்டு நேர்ஸ் அப்பாவின் வயதொத்த மற்றுமொரு நோயாளியைக் கவனிக்கச் சென்றுவிட்டார். முதியவர்களைப் பராமரிப்பது இளையவர்களுக்கு ஒன்றும் கடினமல்ல. முதியவர்கள் நோயாளிகளானால் குழந்தையாகி விடுகின்றனர் என்ற உண்மையைப் புரிந்து கொண்டால் போதும். இந்த உலகத்தில் மூதாளர் பேணலகங்களே இருக்காது என நம்பியவனாக அப்பாவுக்குப் பணிவிடைகள் செய்யலானேன். இரண்டு நாட்கள் சென்றது பெரிய டொக்டர் மீண்டும் வந்தார்

“அப்பாவை வீட்டில் கொண்டு போய்க் கவனியுங்கள் ” என்றார். மறுபேச்சோ பதிலோ உசாவலோ இருக்கவில்லை. ஒருவாறாக வீட்டிற்கு வந்து சேர்ந்தோம். வைத்தியசாலையை விடவும் நன்றாக இப்போது அப்பாவை நானும் அம்மாவுமாகக் கவனித்தோம்.

“ஐயா, பசிக்குது கொஞ்சச் சோறு தா..” இரண்டு மூன்று தடவைகள் கேட்டார்.

“அப்பா, உங்களுக்குப் பெரிய டொக்டர் சொன்னவரல்லவா? சோறு வேணாம் எண்டு..

“ஓ..”

“அச்சாப் பிள்ளையெல்லா சோறு வேணாம் என்ன ?” வருத்தம் சுகமானதும் நாங்க அம்மாட்டச் சொல்லி நல்ல குத்தரிசி சமைச்சு ஆறு கறியோட ரசமும் வச்சுக் குடிப்பம் என்ன..! சொல்லிக்கொண்டே மூக்கின் வழியாகப் பொருத்தப்பட்ட குழாயினுள் உப்புக் கரைசலோடு கலந்த எலுமிச்சைச் சாறைப் பருக்கினேன். என் கண்களால் நீர் வழிந்தோடுவதைப் போலவே குழாயினாலும் எலுமிச்சைச் சாறு கீழிறங்கிக் கொண்டிருந்தது. நேரம் பின்னிரவு ஒருமணியைத் தாண்டியிருக்கும் அப்பா கேவி இழுத்துப் பெரு மூச்சொன்றை விட்டது கேட்டது.

“தம்பி, எழும்பி அப்பாவை ஒருக்காப் பார் ” .. அப்பாவின் கண்கள் இரண்டும் கண்குழிக்குள் சொருகிக் கிடந்தன. நெஞ்சைத் தொட்டுப் பார்த்தேன் சூடு இருப்பதாக உணர்ந்தேன் ஆனாலும் குளிர்வதாகவேபட்டது.

“தம்பீ..., அப்பாவ ஆசுப்பத்திரிக்குக் கொண்டு போவமடா.. ஐயோ..! அம்மா குழறத் தொடங்கினார். அதற்குள் நான் அவசரமாக அழைத்த அம்புலன்ஸ்சும் வந்துவிட்டது.

“வாத்தியார், உங்கட அப்பா இறந்திட்டார்” ஒரு வாக்கியத்தில் அம்புலன்ஸ் சாரதி சொன்னார். காவியமொன்றின் கடைசிப் பக்கத்தை யாரோ ஆவேசத்துடன் கிழித்து எறிந்ததாக உணர்ந்தேன். அழுகை வர மறுத்தது.

“ஐயா, பசிக்குது கொஞ்சச் சோறு தா..” இந்த வார்த்தைகள் என் காதுகளில் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டேயிருந்தது. விடிந்ததும் தெரியவில்லை. ஆட்கள் வீட்டிற் குவிந்ததும் தெரியவில்லை.

“வாய்க்கரிசி போடுற ஆக்கள் போடுங்க” பிணத்தைத் தூக்கப் போறம். சடங்குகளைத் தலைமையேற்று நடாத்திக் கொண்டிருக்கும் கிழவர் கூறினார். உழைத்து உழைத்து உணவு போட்டவருக்கு ஒரு பிடி சோற்றை ஊட்டி விட முடியலயே என்ற எண்ணம் தலையெடுத்தபோது என் வாய் என்னை அறியாமலேயே அகல விரிந்து குழறத் தொடங்கியது. ஊனாலும் உணவாலும் தழைத்த உடம்பு ஒரு கொள்ளி விறகால் எரிந்து வெந்து கொண்டிருந்தது.

“திரும்பிப் பார்க்காமல் போ ” சுடலைக் கருமமாற்றுபவன் சொன்ன போதுதான் தெரிந்தது இனி அப்பாவைக் காணமுடியாது என்று. வீடே வெறிச்சோடிக் கிடந்தது. உறவுகளும் ஒவ்வொருவராய் இழவு விழுந்த வீட்டிலிருந்து அகல்வராயினர். நித்திரையோடும் நினைவுகளோடும் இரண்டு நாட்கள் கழிந்தது. கொஞ்சம் கொஞ்சமாகப் பழைய நிலைக்குத் திரும்பத் தொடங்கினேன். அப்பாவின் மரணத்தோடு எடுத்த விடுப்புக்களை மனதிற்குள் எண்ணியவனாக பள்ளிக்கூடத்திற்குப் புறப்படத் தயாரானேன். பரந்தனிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் போகும் ஆனையிறவுப் பேருந்திற்காகக் காத்திருக்கிறேன். “ தம்பீ.. இன்னும் இரவுச் சாப்பாடோ காலம்பிறச் சாப்பாடோ சாப்பிடேல... ஏதும் இருந்தால் தாங்க” அதே பிச்சைக்காரரின் குரல் ஆனால் இந்த முறை என் அருகில். என்னைக் கூர்ந்து பார்த்தார் ஜீன்ஸ் பொக்கட்டுக்குள் கையை

விட்டு விரல்களுக்குள் அகப்பட்ட பத்து ரூபாக் குற்றி ஒன்றினைக் கொடுத்துவிட்டுப் பஸ்ஸில் ஏறினேன். முன்பு பார்ப்பதற்கே அருவருப்பாய் இருந்த அந்தப் பிச்சைக்காரரை இப்போது பார்க்க அருவருக்கவில்லை. வயதான அப்பாவை இன்னும் கொஞ்ச நாட்கள் வைத்துப் பார்க்க முடியவில்லையே என்ற வருத்தமும் தந்தையரை இப்படி வீதியில் விட்டிருக்கும் பிள்ளைகளைப் பற்றியும் சிந்திக்கத் தொடங்கியது. "தம்பி, இண்டைக்கு அப்பாட பிறந்த நாள் யாருக்காவது உணவு சமைச்சுக் கொடுத்தால் புண்ணியமாம் அப்பாவே சாப்பிட்டதாக உணரலாமாம் நீ, ரோட்டில இருக்கிற யாராச்சும் ரெண்டு மூண்டு பிச்சைக்காரங்களுக்குக் குடுத்திட்டு வாறியா?" அம்மா கண்களில் கண்ணீரின் ஈரம் பனிக்கும் படியாகக் கேட்டார். எனக்கு உடனே அந்தப் பிச்சைக்காரரின் நினைவு வந்தது.

" தாங்க தாங்க..பரந்தன் பஸ் ஸ்டாண்ட்ல ஒரு பிச்சைக்கார ஐயா இருக்கிறார். அவர் என்னைப் பார்க்கும் போதெல்லாம் சாப்பாடு கேக்கிறவர் இண்டைக்கு ஒரு பெரிய கட்டுச் சோற்றுப் பார்சலக் குடுத்து ஆளக் குஸிப் படுத்துவம். வேகமாகக் கட்டுங்க பார்சல" மூன்று கட்டுச்சோற்றுப் பார்சலைக் கட்டிக்கொண்டு விரைந்தேன். பஸ் ஸ்ராண்ட்டில் அந்த மன நோயாளிப் பிச்சைக்காரரும் மூதாட்டியுமாகப் படுத்திருந்தனர். என் கண்கள் முதலில் அந்தப் பிச்சைக்கார ஐயாவைத்தான் தேடியது. அவர் அங்கு இல்லை. மற்றைய இருவரையும் எழுப்பிக் கட்டுச் சோற்றுப் பார்சலை ஒவ்வொன்றாகக் கொடுத்தேன். கும்பிட்டு வாங்கிக் கொண்டார்கள். உணவின் அருமையை இப்போதெல்லாம் நன்றாக உணரத்தொடங்கி விட்டேன். "மற்ற ஐயா எங்க? மனநோயாளியைக் கேட்டேன் கழுவாத கையால் ஒரு பிடி சோற்றை விழுங்கிக் கொண்டே … "அவரா ? அவர் நேற்று இரவு செத்துப் போய்ட்டார் " சொல்லிக் கொண்டே இன்னுமொரு பிடி சோற்றை வாயினுள்ளே தள்ளினார். ஒரு கணம் உடைந்து தகித்தேன். கொண்டு வந்த கட்டுச்சோற்றை இறுகப் பிடித்தேன். இந்தக் கட்டுச் சோற்றை அவரிடம் கொடுக்கும் நேரத்தில் என் நீண்ட நாள் சுமையொன்று இறங்கிவிடுமே என எதிர்பார்ப்போடு வந்தேனே.. முகக்குறி "சரி ஐயா, நல்லாச் சாப்பிடுங்க" கூறிவிட்டு சைக்கிளைத் திருப்பிக்கொண்டு வருகிறேன் என்ன அதிசயம் அந்தப் பிச்சைக்காரர் அழுக்கு மூட்டையொன்றை முதுகில் சுமந்தவாறு என் எதிரில் வந்தார். சொற்களில் அடைபடாத உதடுகளில் இன்னமும் இத்தனை காலமாக ஒட்டாத சிரிப்பும் மகிழ்வும் மனதெங்கிலும் நிரம்பி வழிந்தது.

"ஐயா, உங்களப் பாக்கத்தான் வந்தனான். இந்தாங்க சாப்பாடு எங்கட அப்பாக்கு இண்டைக்குப் பிறந்த நாள் இப்ப அவர் உயிரோட இல்ல. இந்தாங்க வடிவாச் சாப்பிடுங்க" என்றேன். கைகளை நீட்டினார்.

"அது சரி ஐயா, நீங்க ராத்திரிச் செத்துப் போய்ட்டீங்க எண்டு உங்களோட இருக்கிற மற்றவர் சொன்னாரே..

"அட அவனா ! அவன் பைத்தியக்காரன் தம்பி இதோட என்னை எத்தின பேரிட்டச் சாவடிச்சிட்டான்" சொல்லிக் கொண்டே என்னைக் கடந்தார். வழமையான தன் இருப்பிடத்தில் சம்மாணங் கட்டிக்கொண்டு கட்டுச் சோற்றைப் பிரித்து ஒரு வாய் சோற்றை அவசர அவசரமாக விழுங்கினார். அப்பாவின் வாய்க்குழிக்குள்ளால் இறங்காத உணவு இறங்குவதாக நினைத்துக் கொண்டே சைக்கிளை மிதித்தேன். ஆகாயத்திலிருந்து அப்பா அனைத்தையும் பார்த்துக் கொண்டிருப்பதாக ஆழ்மனது சொல்லிக் கொண்டிருந்தது.

## தமிழ் எழுத்துகள்

தமிழ் எழுத்துகள் மொத்தம் முப்பத்து மூன்று. உயிர் எழுத்துகள் பதினைந்து மெய் எழுத்துகள் பதினெட்டு. ஆக முப்பத்து மூன்று எழுத்துகள். மனிதன் பேசுவதற்கு இலக்கணம் வகுத்திருப்பதால் மனித உடல் அமைப்பைப் போலவே தொல்காப்பிய இலக்கணமும் அமைந்துள்ளது. மனித உறுப்புகள் இயங்குவதற்கு முள்ளந்தண்டும் அதற்குப் பாதுகாப்பாக இருக்கும் முதுகெலும்பும் மிகமிக முக்கியமானவை. அந்த முதுகு எலும்பும் முப்பத்து மூன்று எலும்புகளால் ஆக்கப்பட்டு இருக்கிறது. அதுபோல தமிழ் எழுத்துக்களையும் முப்பத்து மூன்றாக அமைத்திருக்கிறார்கள்.

**- தொல்காப்பியம் -**

# அகம்

நக்கீரன் மகள்



கதிரவன் கார்மேகத்துக்குள் மறைந்து பூமிக்கு இருளைப் பூசிவிட்டிருந்தான். அந்த அறையெங்கும் மயான அமைதி. கண்கள் மூடியபடிபடி கட்டிலில் கால்களை நீட்டிப் படுத்திருக்கிறாள் சுவாதி. அவளருகே ஒரு கறுத்த உருவம் வந்து அபாயச் சங்கு ஊதுவதைக் கண்டு திடுக்கிட்டாள். பயத்தோடு இமைகளைத் திறந்து அரைக்கண்ணால் பார்க்கிறாள். அங்கே ஒரு கறுத்த உருவமும் இல்லை .

“ ஐயோ... இதென்ன என்னைச் சுத்தி வெள்ளை உருவங்கள். யார் இவையள் என் மூக்கில ஏதோ வைச்சிருக்கினம். அப்ப ...நான் செத்துப் போட்டனோ? ...இல்ல நான் சாகக்கூடாது... என்ர பிள்ளையளும் சுமனும் எங்க” என்று தனக்குள் பதறுகிறாள் சுவாதி அவளுக்கு உடலெல்லாம் புண்ணாக வலிக்கிறது. உடல் நடுங்கி நாதளதளக்கிறது அழுகை தொண்டைவரை வந்து அடைக்கிறது. கண்களை விழித்துப் பார்க்கிறாள்.

“ swathy har du det bedre ” சுவாதி இப்ப கொஞ்சம் பரவாயில்லையா? என டெனிஸ் மொழியில் அன்பான குரலில் அந்த வெள்ளை உருவத்தில் ஒன்று பேசுகிறது. விழிகளில் இருந்து நீர் வடிகிறது. இப்போ கொஞ்சம் கொஞ்சமாக நினைவுக்கு வருகிறது. மேல்வீட்டுக்காரிதான் கறுத்த உருவமாக கனவில் வந்தாளென நினைக்கிறாள் சுவாதி. அன்று இரவு எட்டு மணி. மகள் இசாவை அணைத்தபடி அவளுக்குக் கதை சொல்லித் தூங்க வைத்துக் கொண்டிருந்தாள் சுவாதி. இசா உறங்கிக் கொண்டிருந்தாள். மேல்வீட்டில் இருந்து ஒரே சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. “ஐயோ இதுகளின்ர சத்தம் பிள்ளையை எழுப்பப் போகுது” என்று தனக்குள் புறுபுறுத்தாள் சுவாதி. டென்மார்க்கில் ஒகூஸ் நகரில் உள்ள இரண்டுமாடிக் கட்டடத்தின் ஒரு கீழ் வீட்டில் சுவாதி வாழ்கிறாள். சுவாதி வீட்டில் அவளுடைய கணவன் சுமனும் மூன்று வயது இசாவும் ஒரு வயது யுவனுமாக நால்வர் வாழ்கின்றனர். சுமன் வங்கியிலும் சுவாதி கடையிலும் வேலை செய்கின்றனர். மேல்வீட்டில் இருந்த டெனிஸ்கார வயோதிபர்களை சுவாதிக்கு மிகவும் பிடிக்கும். அவர்கள் வயோதிபர் பராமரிப்பு நிலையம் சென்றதால் மூன்று மாதத்திற்கு முன்னர் வேறு ஒரு குடும்பம் மேல்வீட்டுக்கு வந்தது. அவர்கள் வேற்று நாட்டவர் என்று அவர்களுடைய தோற்றம் காட்டியது. எந்த நாட்டவர் என்பதை சுவாதி அறிந்திருக்கவில்லை. தாயும் மூன்று பிள்ளைகளுமாக நால்வர். அவர்கள் வீட்டில் எந்த நேரமும் சத்தம் கேட்கும் அதுவும் புரியாத மொழியாகவே கேட்கும். அவர்களின் சாப்பாட்டு மணத்தால் அடிக்கடி சுவாதிக்கு வாந்தி வருவது போலிருக்கும். கொரோனாத் தொற்றுப் பற்றி அறிந்ததும் சுவாதியும் சுமனும் எங்கேயும் போகவில்லை. சுவாதி பிள்ளைகளுடன் வீட்டுக்கு முன்னால் உள்ள மரநிழலில் மட்டுமே நடப்பாள். அவளின் கடையும் பூட்டி இருந்தது. சுமன் வீட்டிலிருந்து வேலை செய்தான். தனது வங்கி

நண்பன் ஒருவனை மட்டும் இடையிடையே சந்தித்தான். மேல்வீட்டார் அடிக்கடி வெளியே போவதும் வருவதுமாக இருப்பார்கள். அவர்களால் தங்களுக்கும் கொரோனா வந்துவிடும் என்று படியால் ஏறி வந்ததும் பல தடவை கைகளைக் கழுவுவாள் சுவாதி. கொரோனோ உள்ளிருப்புக்கு முன்னர் மேல்வீட்டுக்காரர் ஒரு கிழமை விடுமுறைக்கும் எங்கேயோ போய் வந்தனர். சுவாதிக்கு ஏற்கனவே இரண்டு நாளாக இருந்த தொண்டை நோவும் கூடியுள்ளதாக உணர்ந்தாள். இசா நன்றாகத் தூங்கியதும் வரவேற்பறைக்கு வந்தாள் சுவாதி. மகன் யுவனை மடியில் வைத்துக்கொண்டு தொலைக்காட்சியில் மூழ்கிப்போயிருந்த தன் கணவன் சுமனிடம் "இதுகளுக்கு நித்திரை இல்லையே ஒரே சத்தமப்பா ஏன் இதுகள் எங்களுக்கு மேல வந்ததுகள் கெதியா நாங்கள் தனிவீட்டுக்குப் போகவேணும்" என்றாள் சுவாதி. "ம் ...சின்னப்பிள்ளையள் கூட இருந்தால் சத்தம் இருக்குந்தான சுவாதி.. யுவன் நித்திரைக்குப் போட்டார் ..தொட்டிலுக்க படுக்க வையுங்கோ" என்று மகனை மனைவியிடம் கொடுத்தான் சுமன். மகனைப் படுக்கவைத்த பின் இஞ்சித் தேநீர் போட்டபடியே "இஞ்சயப்பா மேலே இருக்கிறதுகள் வின்டர் லீவுக்கு எங்கேயோ போய் வந்தவை இத்தாலி எண்டுதான் நினைக்கிறன்" என்றாள் சுவாதி "இருக்கலாம் ஆருக்குத் தெரியும்" என்றான் சுமன். சுவாதியை மேலே கதைக்கவிடாமல் இருமல் குழப்பியது. இருமலை நிறுத்தக் கொஞ்சம் சுடுநீரைக் குடித்தாள். தேநீரைச் சுமனிடம் நீட்டி " இந்தாங்கோ ரீ குடியுங்கோ" என்று கூறி கணவன் அருகில் இருந்து தொலைக்காட்சியைப் பார்த்தாள் சுவாதி. அவள் கண்கள் மட்டும் தொலைக்காட்சியைப் பார்த்தது மனக்காட்சியில் கொரோனாவும் மேல்வீட்டுக்காரியின் கறுத்த உருவமுந்தான் தெரிந்தது. உலக மகாயுத்தங்களைப் போல உயிர்களைக் குடித்துக் கொண்டிருக்கும் இந்தக் கொரோனாவிடம் இருந்து எல்லாரும் பொறுப்பாக இருந்தால்தான் தப்பலாம். ஆனால் இந்த மேல்வீட்டுக்காரி போன்றவர்களால் எல்லோருக்கும் ஆபத்து என நினைத்தவாறே தூங்கப் போனாள். சிறிது நேரத்தில் சுமனின் குறட்டைச் சத்தம் கேட்டது. இரவிரவாக இருமல் அதிகமாகியதால் சுவாதியால் தூங்கமுடியவில்லை. எழும்பிப் பலமுறை தண்ணீர் குடித்தாள். தொண்டைக்குள்ளும் நெஞ்சுக்குள்ளும் ஏதோ செய்வதாக உணர்ந்தாள்.

" கொரோனாவா .....இருக்காது .. இது சும்மா இருமல்" என்று தன்னை ஆறுதல் செய்தாள் மறுநிமிடம் கொரோனா அவளைக் கொலை மிரட்டல் செய்வதாகவும் உணர்ந்தாள். தனது இருமல் சத்தம் சுமனின் நித்திரையைக் குழப்பும் என வரவேற்பறைக்குப் போனாள். உடம்பெல்லாம் எரிவதாக உணர்ந்தாள். இருமலும் தொடர்ந்தது.

"என்னப்பா ஏலாமல் இருக்கா? இப்பிடி இருமுறீங்கள் வீட்டை இருமல் மருந்து இல்லயா?" என்று கேட்டபடி சுமனும் எழுந்து அவளிடம் வந்தான். இல்லை எனத் தலையை ஆட்டினாள்

"விடியக் கொஸ்பிட்டலுக்குப் போன் எடுப்பம்" என்றான் சுமன். நெஞ்சுக்குள் கொஞ்சம் நோகுதெனப் பனடோல் குடித்துவிட்டு மீண்டும் தூங்க முயற்சித்தாள் சுவாதி. போர்வைக்குள் சுருண்டு போயுள்ள சுவாதியைம் பார்த்துக் கொண்டிருந்த சுமன் அவளைத் தொட்டுப் பார்த்தான். அவள் உடம்பு நெருப்பாகக் கொதித்தது. மூச்சுவிடவும் கஸ்ரப்பட்டாள். அவனுக்குள் ஏதோ செய்தது. உடனே அவன் விரல்கள் அம்புலன்சின் இலக்கங்களை அழுத்தின.

"நான் ...அங்க போகேல்ல பயமாக் கிடக்கு என்ர பிள்ளைய...ள்.. பாவம் யுவன் பாலுக்கு அழுவான்" என்று அனுங்கியபடி சொன்னாள் சுவாதி. சுமன் அவளுக்கு ஆறுதல் சொன்னபடி இருக்க அம்புலன்ஸ் வரும் சத்தம் கேட்டது. அம்புலன்சில் வந்தவர்கள் சுவாதியைப் பரிசோதித்தனர். அவளுக்குக் கொரோனாவுக்கான அறிகுறிகள் இருப்பதாகச் சுவாதி 14 நாளைக்குள் எங்கே போனாள் யாரைச் சந்தித்தாள் என்று விசாரித்தனர். எங்கேயும் போகவில்லை என்றும் மேல்வீட்டில் இருந்தே தொற்றியிருக்கலாம் என்று சுமன் கூறினான். சுவாதிக்கு மேல்வீட்டுக்காரி மீது கோபம் வந்தது. அம்புலன்சில் சுவாதியை அழைத்துச் செல்லப் போகிறோம் என்று அவர்கள் கூறியதும் வந்த அழுகையை அடக்கியபடி " பிள்ளையள்... கவனம் கணவனுக்குப் புரியும்படி கண்ணால் சொன்னாள். சுமனுக்குப் பயமாக இருந்தாலும் காட்டிக்கொள்ளாமல் "கெதியா வருத்தம் மாறி வருவியள் பயப்பிடாதேங்கோ" என்றான். வீட்டின் மகிழ்வைப் பறித்துக் கொண்டு அம்புலன்ஸ் வைத்தியசாலைக்கு விரைந்தது. சுவாதிக்குப் பயமும் நோயும் கூட வைத்தியசாலைக்குப் போகும் வழியிலேயே மயங்கிவிட்டாள். செயற்கைச் சுவாசத்தோடு மருந்துகளும் ஏற்றப்பட்டு இயங்கிக் கொண்டிருந்த அவள் உயிர் இப்போதுதான்

தன்னுயிரானவர்களை நினைத்து ஏங்கும் நிலைக்கு வந்துள்ளது. சுவாதி இல்லாத வீடு மகிழ்ச்சியிழந்து கிடந்தது. அவர்களின் அடுக்கு மாடிக்கு முன்னால் உள்ள மரநிழலில் மட்டுமே குழந்தைகளோடு நடந்தாள். வேறு எங்கும் வெளியில் போகாதவளுக்கு எப்படி வந்ததென்ற கேள்விக்குச் சுவாதி சொன்னது சரியாக இருக்குமோ என்று சுமனுக்கும் எண்ணத் தோன்றியது. ஒவ்வொரு நாளும் பிள்ளைகளை வெளியில் கூட்டிக்கொண்டு போகும் போது கதவுக் கைப்பிடிகளில் இருந்த கிருமி தொற்றியிருக்க வாய்ப்புண்டு என்பது அவன் எண்ணம். சுமன் வைத்தியசாலைக்கு அழைப்பு எடுத்து அவளுடைய நலத்தை விசாரித்தான். மூச்சுவிடச் சிரமப்பட்ட சுவாதியுடன் அவனால் அலைபேசியில் பேசமுடியவில்லை. பிள்ளைகளின் வேலைகளைப் பார்த்துப் பார்த்துச் செய்யும் சுவாதியின் மனம் நோயிலும் வீட்டையே சுற்றி வந்தது. மேல்வீட்டுக்காரியைத் தன் எமனாக உணர்ந்தாள். என்னைக் கொல்லவே மேல்வீட்டுக்கு வந்தாளோ என்று சுவாதி நினைத்தாள். சுவாதிக்கு உடல்வலிக்கும் போதெல்லாம் மனதிற்குள் மேல்வீட்டுக்காரியைத்தான் திட்டுவாள். சுவாதி வீடு அவளின்றிக் காடாக இருந்தது. இரண்டு கிழமை இரு வருடம்போல் கழிந்தது. தாயைக் காணாத குழந்தை யுவன் விடாமல் அழுது கொண்டிருந்தான். மகள் இசாவும் தொடர்ந்து இருமினாள். இசாவை அணைத்து அவளைத் தொட்டுப் பார்த்தான் சுமன். அவள் உடம்பு சூடாக இருந்ததால் பதறிப்போனான். “கடவுளே இசாக்கும் கொரோனாவோ?” எனப் பயந்தவன் செய்வதறியாது அதிர்ந்து போனான். சுமனுக்கு எல்லாமே இருட்டாகத் தெரிந்தது. உடனே வைத்தியசாலையைத் தொடர்புகொள்ள அவர்கள் பரிசோதனைப் பிரிவிற்கு வரும்படி கூறினார்கள். அவனுக்கு மகன் யுவனைக் கூட்டிப்போக விருப்பமில்லை. ஆனாலும் என்ன செய்ய முடியும் என்று மகனுக்கும் உடுப்பைப் போட்டான். மகனுடைய வேலைகளைச் சுவாதியே செய்வதால் மகன் யுவனும் அடம்பிடித்துக் கத்துவது சுமனுக்குக் காது வெடித்துவிடும் போலிருந்தது. திடீரென அழைப்புமணி அடித்தது. யுவனும் உடனே அமைதியானான் “ஆரது இந்த நேரத்தில எங்கட சத்தத்தில தங்களுக்கு டிஸ்ரொப் எண்டு சொல்ல வந்திருக்கினம் போல” என்று கதவைத் திறந்தான் “வணக்கம் நான் யூலியா மேல்வீட்டில் இருக்கிறேன்” என்று புன்னகையுடன் டெனிஸ் மொழியில் சொன்னாள் மேல்வீட்டுக்காரி “வணக்கம். சத்தம் போட்டதற்கு மன்னிக்கவும். குழந்தைகளுக்கு உடல்நலமில்லை அதுதான் அழுகிறார்கள்” என்றான் டெனிஸ் மொழியில் சுமன் “நான் அதற்காக வரவில்லை. உன் வீட்டுக்கு அம்புலன்ஸ் வந்து உன் மனைவியை அழைத்துப் போனதைப் பார்த்தேன். உனது குழந்தை அழும் சத்தமும் கேட்டு உனக்கு உதவலாம் என்றே வந்தேன்” என்றாள் யூலியா

“ஐயோ இவளாலதான் கொரோனா வந்தது எண்டு சுவாதி சொன்னவா இங்க பிள்ளைகளை விட்டால் நான் செத்தன்” என்று தனக்குள் எண்ணினான்

“இல்லை வேண்டாம் கேட்டதற்கு நன்றி” என்றான் சுமன். யூலியா தொடர்ந்து “என்னிடமும் குழந்தைகள் இருக்கிறார்கள் எங்களுக்குக் கொரோனா இல்லை அண்மையில் பரிசோதித்தோம்....பயப்படாதே” என்று சொன்னாள்.

“நாங்கள் வெளியில் இப்ப போகவேண்டும் கேட்டதற்கு நன்றி “ என்று விட்டுக் கதவைப்பூட்டினான். கதவைப் பூட்டிவிட்டு யூலியாவின் உதவும் மனதை நினைத்து நெகிழ்ந்தான் சுமன். இசாவுக்கு கொரோனா இல்லை ஆனால் நுரையீரலில் ஏதோ தொற்று இருப்பதாகத் தெரிவித்தனர். காய்ச்சல் அதிகமாக இருப்பதால் வைத்தியசாலையில் இருக்கவேண்டும். மகன் யுவனை அங்கே வைத்திருக்க அனுமதி இல்லை. இசாவை நாங்கள் பார்க்கிறோம் எனத் தாதியர் அவனை வீட்டுக்குப் போகச் சொன்னார்கள். ஆனால் இசா அப்பா போவதற்கு அனுமதிக்கவில்லை. சுவாதியில்லாமல் எதுவுமே இயங்க மறுப்பதாக நினைத்தான் சுமன். தமிழர்கள் அருகிலும் இல்லை. தூரத்தில் உள்ள நண்பர்களை உதவி கேட்டாலும் சுவாதிக்குக் கொரோனா என்பது தெரிந்துவிடும் வீட்டில் கொரோனா இருப்பதால் உதவி செய்யவும் பயப்படுவார்கள். இசாவுக்கு மருந்து கொடுத்து நித்திரையாக்கியதும் வீட்டுக்குப் போனான். சுவாதிக்கு ஓரளவு சுகம் என்று குறுஞ்செய்தி எழுதியிருந்தாள். அது பெருமகிழ்ச்சியைத் தந்தது, ஆனால் இசா விடயத்தை அவளுக்குச் சொல்லாமல் எல்லாரும் நலமென்று பதில் அனுப்பினான். மகனோடு சிறிது நேரம் தூங்கியவனை வைத்தியசாலையில் இருந்து வந்த அழைப்புக் குழப்பியது. இசா அப்பா, அம்மாவைத் தேடி அழுவதாகச் சொன்னார்கள். இந்த நேரத்தில் யுவனை என்ன செய்வதெனச் சிந்தித்தான். மேல்வீட்டில் இந்த நேரத்திலும் ஒரே

சத்தமாக இருந்தது. படிகளில் ஏறி மேலே போனான் கதவைத்தட்டி மகளுக்கு நலமில்லை அதனால் வைத்தியசாலைக்குப் போகவேண்டும். மகன் யுவனைப் பார்க்கமுடியுமா என யூலியாவிடம் சுமன் கேட்டான். அவள் புன்னகை பூத்த முகத்தோடு ஏற்றுக் கொண்டாள். தூக்கத்தில் இருந்த மகனைக் கொடுத்து அவனது பொருட்களையும் கொடுத்தான். இத்தனை அன்புள்ள ஒருத்தி மீது இல்லாத பழியைப் போட்டதை நினைத்துக் கவலையடைந்தான் சுமன். கறுப்பு நிறத்தைக் குறைவாக எண்ணும் எமது பழக்கத்தை வெறுத்தான். ஒரு வாரத்தில் வீட்டுக்குள் கொஞ்சம் கொஞ்சமாக வெளிச்சம் வந்தது. இசாவும் ஓரளவு நலமாகி விட்டாள். குழந்தைகள் இருவரையும் மேல்வீட்டில் விட்டுவிட்டு கொரோனாவிலிருந்து விடுபட்ட சுவாதியை அழைத்துவர வைத்தியசாலைக்குத் தனது காரில் பயணமானான். சுவாதி நலமாகி வீடு வருவது மகிழ்வைத் தந்த அதேநேரம் யூலியா விடயத்தை அவளுக்குச் சொல்வதை நினைத்துப் பயந்தான். சுவாதி உடல் மெலிந்து சோர்ந்து காணப்பட்டாலும் மறுபிறவி எடுத்தவளாய்க் கொரோனாவை வென்ற மகிழ்வோடு இருந்தாள். மீண்டும் அவளைக் கண்டதும் சுமனுக்குள் புத்துணர்ச்சி பிறந்தது. வைத்தியசாலையில் அவளுக்குத் தொற்று இல்லை என்று உறுதி செய்தாலும் சுவாதி பின் இருக்கையில்தான் ஏறி இருந்தாள்.

''பிள்ளையள் எங்க நிற்கினம்'' என்று கேட்டவளுக்கு

''பொறுங்கோ சொல்றன்'' என்றவாறே காரை ஓட்டினான். சுமன் சொன்னதும் சுவாதி பயந்துபோய் ''பிள்ளையள் சுகமா இருக்கினம் என்றுதானே சொன்னீங்கள்?'' கேட்டாள் சுவாதி ''ஓம் ...சுகமாக இருக்கினம் அவையளை ... அங்க... மேல்வீட்டில விட்டனான்'' என்றான் சுமன் பயந்தபடி மேல்வீடு என்றதும் சுவாதி முகம் சிவந்து மாறியது.

''என்ன... லூசா உங்களுக்கு நானே அவளால செத்துப் பிழைச்சு வந்திருக்கிறன். பிள்ளையளையும் சாக்கொல்லப் போறியளோ?'' என்றாள் கோபத்துடன் கத்தினாள் சுவாதி. ''சுவாதி இப்படிக் கத்தாமல் முதல் நான் சொல்றதைக் கேளும்'' என்று காரை பக்கத்தில் உள்ள பாக்கிங்கில் நிறுத்தினான். காரில் இருந்து இறங்கி ஒன்றும் விடாமல் நடந்தவற்றைச் சொன்னான் சுமன். ஒரு கிழமையாக இசாவுக்கு உடல்நலமில்லை. யுவனை யூலியா பராமரிக்காவிட்டால் எவ்வளவு கஸ்ரப்பட்டிருப்பான் என்பதையும் எடுத்துக் கூறினான். எல்லா இனத்திலும் நல்லவரும் கெட்டவரும் இருப்பார்கள் என்பதைப் பக்குவமாகச் சொன்னான். சுவாதிக்கு எல்லாம் ஒரு கனவு போல் இருந்தது. மேல்வீட்டுக்காரி ஒரு பெரிய நிறுவனத்தில் அதிகாரி என்றும் ஒரு கார் விபத்தில் வைத்தியரான தன் கணவரை இழந்ததால் வீடு மாறி அவர்கள் இங்கே வந்ததையும் சொன்னான். மேல்வீட்டுக் குழந்தைகள் இன்னும் தந்தையின் இழப்பிலிருந்து மீளவில்லை என்றும் அதனால்தான் இரவில் தூக்கமின்றி எழுந்திருப்பதுண்டு என்பதையும் சுவாதி அறிந்தாள். சுமனுடைய நண்பன் ஒருவன் மூலந்தான் சுமனுக்குக் கொரோனா தொற்றி சுமன் நோய் காவியாக சுவாதிக்குக் கொரோனா வந்தது என்ற விடயத்தையும் அறிந்தாள் சுவாதி. எல்லாவற்றையும் அறிந்தபின் அவள் மௌனமாகி மனதோடு பேசினாள். அவள் கொஞ்சம் புரிந்துகொண்டாள் என்பதை உணர்ந்து

'' ஏறுங்கோ வீட்ட போவம்'' எனக் காரை ஓட்டினான் சுமன். ஒருவரைப் புரியாமல் அவர்கள் இப்படித்தான் என்று நாங்களாகக் கற்பனை செய்வது எத்துணை தவறு என்று நினைத்தபடி பயணித்தாள் சுவாதி. காருக்குள் இருந்த வானொலி நிறவாதத்திற்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் பற்றிய செய்தியைச் சொல்லிக் கொண்டிருந்தது. ''அப்ப நானும் ஒரு நிறவாதிதான்'' சுவாதிக்குத் தன்னை நினைக்க அருவருப்பாக இருந்தது. நாங்களும் கறுப்பு ஆனால் எங்களை விடக் கறுப்பானவர்கள் எல்லோரும் கெட்டவர்கள் அல்லது வடிவில்லாதவர்கள் என்ற எண்ணம் காலங்காலமாக எம் இனத்திலுள்ள கூடாத குணங்களில் ஒன்று என்ற தெளிவு பிறந்தது. ஒரு மனிதரின் தோற்றத்தை வைத்து அகத்தை எடைபோட்ட முட்டாளெனத் தன்னை நினைத்து வெட்கப்பட்டாள். எங்களைக் கறுப்பர் என வெள்ளையர் ஒதுக்கியிருந்தால் எங்களால் இங்கே நிம்மதியாக இருந்திருக்க முடியுமா? மரணபயம் வந்ததும் தனது அறிவு வேலை செய்யவில்லையோ? என்ற கேள்விகளைச் சுவாதி தனக்குள் கேட்டபடி இருக்கக் கார் வீட்டுக்கு முன்னுள்ள பாக்கிங்கை வந்தடைந்தது. இவர்கள் காரால் இறங்க ஒரு பூங்கொத்துடன் இவ்வளவு நாளும் காலனாகத் தெரிந்த யூலியா கடவுளாக நின்று கொண்டிருந்தாள். சுவாதியின் இரு குழந்தைகளும் அவளுடன் மேல்வீட்டுக்காரியுடன் ஒட்டிக்கொண்டிருந்தனர். சூரியன் அழகாகச் சிரித்து வெளிச்சம் பரப்பினான்.

எங்கட புத்தகங்கள் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கதை

# அவள்

S. ஜெயந்தினி



*அன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணி.* அன்றோடு அவன் வெளி ஊருக்கு வேலைக்கு வந்து ஒரு மாதம் முடிகிறது. வங்கி வேலைகள் முடிந்ததும் மறு நாள் ஊருக்குப் போகும் குதூகலத்துடன் சில பொருட்களை வாங்குவதற்குக் கடையை வந்தடைகிறான் கவின். கடைக்குள் நுழையும் போது இட நெரிசலில் அவனைத் தவறுதலாக மோதியவள் நிமிர்ந்து மன்னிச்சிடுங்க என்றவாறே அதே வேகத்தில் கடந்து செல்கிறாள். கறுப்பு ஹ்.பாயா, பர்தா மட்டுமன்றி முகத்திரையும் போட்டு மொத்த அழகையும் மறைத்தவள் ஏனோ வாள் போன்ற கண்களைத் திரையிட மறந்து போனாள். அவள் கண்களின் அழகில் உறைந்து போனவன் வாங்க வந்த பொருட்களையும் மறந்து தன் விடுதிக்கு விரைகிறான். இளகிய அவன் மனதில் மலை போல் உறைந்துபோய் இருக்கும் பழைய நினைவுகளை உருகச் செய்து விட்டது அவள் கண்கள். ஆம் அந்தக் கண்களுக்கும் அவனுக்குமான பல வருட நினைவுகள் அவள் கண் முன்னே வந்து நின்றது.

அது 2006. அப்போது தான் ஜானு குடும்பம் கவினின் ஊருக்கு புதிதாகக் குடிவந்தார்கள். கவின் தரம் 10 படிக்கும் போது ஜானு 11 ல் படித்தாள். அந்த வயதில் ஒரு பெண் பிள்ளைக்கான அழகும் அறிவும் அடக்கமும் நிறைந்தவள் ஜானு. அவள் கண்களுக்குத் தனி அழகுண்டு. வாள் போன்ற நீண்ட அழகிய கண்கள். கவினும் ஜானுவும் ஒரே பாடசாலையில் படித்ததால் நல்ல நண்பர்கள் ஆகினர். அவர்கள் ஒன்றாகவே பாடசாலைக்குச் சென்று வந்தனர். ஊரே அவர்களை அக்கா தம்பி என எண்ணிக் கொண்டிருக்கையில் கவின் மட்டும் இனம் புரியாத ஒரு அன்பை அவளிடம் தேடித் தவித்தான். வருடங்கள் கடந்தன. ஜானு உயர்தர பெறுபேறுக்காய் காத்திருந்தாள். கவினிற்கோ இன்னமும் தன் காதலை ஜானுவிடம் கூறும் தைரியம் வரவில்லை. காலங்கள் செல்ல வெளிமாவட்ட பல்கலைக்கழகம் கிடைத்துச் சென்று விட்டாள் ஜானு. தன் காதலைச் சொல்வதற்காக ஜானுவின் விடுமுறை நாட்களுக்காய் காத்திருந்தான் கவின். ஜானுவிடம் காதலைச் சொல்ல விரையும் போதெல்லாம் தம்பி என்று சொல்லி மறுத்திடுவாளோ என்ற எண்ணம் அவன் கால்களுக்கு விலங்கு போட்டுவிட எட்டி நின்றே ரசித்துக் கொண்டிருந்தான். தீபாவளி விடு முறைக்கு வரும் ஜானுவிடம் எப்படியாவது தன் காதலைச் சொல்லிவிட உறுதியாக இருந்தான் கவின். ஆனால் ஜானு அந்த விடுமுறைக்கு மட்டுமல்ல இரண்டு மாதங்களாகவே வீட்டுக்கு வரவில்லை. நாட்கள் கடந்தன. ஜானுவின் அப்பாவிற்கு இடமாற்றம் கிடைத்து குடும்பமாக வெளியூர் சென்றுவிட்டனர். ஜானுவை அவனால் எந்த சமூகவலைத்தளத்திலும் காணமுடியவில்லை. அவனால் அவளை மறக்கவும் முடியவில்லை. இன்றோடு அவளைப் பிரிந்து எட்டு வருடங்கள் ஆகிவிட்டன. இன்னமும் கனத்த அவள் நினைவுகளுடன் அவள் வருவாளென காத்திருந்தவனுக்கு அந்தக் கண்கள் ஜானுவை நினைவூட்டின. கண்ணீர் நிறைந்த கண்களுடன் தன் விடுதியை வந்தடைந்தான். ஊருக்குப் போகும் எண்ணத்தைக் கைவிட்டு மறுநாள் காலை அலைந்து திரிந்து கடையில் பார்த்த அந்த முஸ்லிம் பெண்ணின் வீட்டு முகவரியையும் பா்.த்திமா என்ற அவள் பெயரையும் கண்டுபிடித்தான். என்னமோ அந்தக்

கண்களில் இருந்த ஈர்ப்பு அவனை மறுபடியும் பழைய வாழ்க்கைக்கு அழைத்தது. தினமும் காலையும் மாலையும் அவள் வீட்டுக்கு முன் காத்திருந்த அவனைச் சில தினங்கள் மெல்லிய புன்னகையில் கடந்து செல்கிறாள் பாஃத்திமா. அந்தப் புன்னகைகள் அவனுக்குப் புது உயிர் கொடுத்தன. முஸ்லிம் என்றால் என்ன, பரவாயில்லை, என்று எண்ணியவன் , ஜானுவின் கண்களில் தொலைத்த அதே காதலை பாஃத்திமா கண்களில் கண்டு மகிழ்ந்தான். மதத்தையும் தாண்டி அவன் காதல் அவனுக்கு புனிதமாய்த் தோன்றியது. எப்படியாவது தன் காதலை பாஃத்திமாவிடம் சொல்லிவிட வேண்டும், இந்தக் காதலையும் இழக்க முடியாது என எண்ணினான். மறுநாள் தன்னுள் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பாஃத்திமாவுக்கு பரிசுப்பொருள் வாங்க அங்காடி ஒன்றினுள் நுழைந்தான். அங்கே அவன் எதிரில் பாஃத்திமா. தன் எதிரில் பாஃத்திமாவை காட்டியது கடவுள்தான், பிள்ளையார் அப்பா, அல்லாவே நன்றி என்று மனதிற்குள் கூறி தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவள் முன்னே போய் நின்றான் கவின். குறுஞ்செய்தி சிணுங்கல் கேட்டுத் தன் தொலை பேசியைக் கையில் எடுத்தவள், தன் எதிரே நின்ற கவினை நிமிர்ந்து பார்த்து “எப்படி இருக்கிறாய் கவின் ?” என்று கேட்ட போது, எங்கிருந்தோ ஓடி வந்த மூன்று வயதே நிரம்பியிருக்கும் சிறுமியொருத்தி ”உம்மா, வாப்பா வரயாம், போலாமே” என மழலைக்குரலில் சொன்னாள். அந்தக் கணமே கவின் உறைந்து போய் நின்றான். மலைத்துப்போய் நின்றவனைப் பார்த்து “என்ன கவின் பதில் சொல்லாமல் பேயறைஞ்சது போல நிக்கிறாய்? என்னை ஞாபகம் இருக்கிறதா? நான் தான் ஜானு அக்கா” எனச் சொல்லியவாறு முகத்திரையை விலக்கினாள். ஏமாற்றமும் கலக்கமுமாக முழித்துப் பார்த்த கவினின் உதடுகள் அவனை அறியாமல் , ஜானு அக்கா என்றது. “உனக்குத் தெரியாதா கவின் , நான் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது இஃப்ரான் என்றவரைக் காதலித்தேன். வீட்டில மதம் மாறிக் கல்யாணம் செய்ய ஒத்துக்கல. அதுதான் படிப்பை முடிச்சிட்டுக் கல்யாணம் பண்ணிக்கிட்டம். இவ என் பொண்ணு பேரு ரிஹானா ” என்று ஒரு இடியை தூக்கிப் போட்டாள். அவன் கண்களில் சிவந்து முட்டி வழிந்த கண்ணீரைக் கைகளால் கட்டுப்படுத்த முடியாமல் மறு பக்கம் திரும்பினான் கவின்.

“என்னாச்சு கவின் , கண் ஏன் கலங்குது” என்று கேட்டவளுக்கு ”ஒண்ணுமில்லை கண்ணில தூசி. எனக்கு நேரமாகுது. உங்களைப் பார்த்ததிலை சந்தோசம். நான் வாரன்” என்றவாறு நிமிர்ந்து பார்க்க முடியாமல் விரைந்து நடந்தான். கண்களில் வழிந்த கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டு நடந்தவனுக்கு முன்னுக்கு சென்ற பஸ் வண்டியில் எழுதியிருந்த

## தாமரை இதழ்

‘தாமரை’ இதழ் 1959.ல் வெளிவந்தது. ‘தாமரை’ இதழ்தான் தமிழில் தத்துவார்த்த ஈடுபாடு மற்றும் சமூக அர்ப்பணிப்புக் கூறுகளோடு உருப்பெற்ற படைப்பாளிகளுக்குத் தளமாகச் செயல்பட்டது. தமிழ்ச்சிறுகதையின் வளமான இரண்டாம் தலைமுறை உருவாக்கத்தில் ‘தாமரை’க்கு முதலிடம் உண்டு. குறிப்பாக 1965ஆம் ஆண்டு தொடங்கி 1975ஆம் ஆண்டு வரையிலான காலச்சூழலில் ‘தாமரை’ பல எழுத்தாளர்களை உருவாக்கியது. “சிறுகதை படைப்பாளிகள் ரகுநாதன், ஜெயகாந்தன், ஆகியோர் சமூக கப்பணிக்குத் தத்துவார்த்த எழுத்தைக் காலவளர்ச்சியோடு கையில் எடுத்தனர்” என்று எஸ்.தோத்தாத்தரி மற்றும் வீ.அரசு ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். ‘தாமரை’ இதழ் புதியபடைப்பாளிகள் உருவாதற்குக் காரணமாக அமைந்தது எனலாம்.

“எல்லாம் நன்மைக்கே” என்ற வசனங்கள் அவன் காயப்பட்ட மனதிற்கு மருந்து போடுவதுபோல் இருந்தது. விரைந்து சென்று விடுதி வாசலை அடைந்தான். அப்போது தான் தொலைபேசி மணியும் அடித்தது. “அம்மா சொல்லுங்க அம்மா” என்றான். மறுமுனையில் சரஸ்வதி ”தம்பி மாமா வந்தாரு. அவர் பிள்ளை வைஸ்ணவியை உனக்குக் கட்டி வைக்க உன் விருப்பத்தைக் கேட்டு சொல்லச் சொன்னாரு” என்றாள். கடவுள் ஜானுவைக் காட்டியது நன்மைக்கே. இல்லையென்றால் இன்னமும் முதற்காதலைத் தேடி அலைந்து கொண்டே இருந்திருப்பேன் என நினைத்தவன், ஜானுவுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு “சரிம்மா. நான் வருகிற சனிக்கிழமை ஊருக்கு வருவேன். வைஸ்ணவியை எனக்கு விருப்பம் தான். வந்து கதைக்கிறன்னு மாமாக்குச் சொல்லுங்க” என்றான். சரஸ்வதியும் சந்தோசமாக அழைப்பைத் துண்டித்தாள். தோற்றுப்போன முதல் காதலும் நினைக்க இனிக்கிறது என மனதில் கூறிக்கொண்டான். அவன் உதடுகள் இலேசாகப் புன்னகைத்தன. இதமான காற்று வருட மெதுவாய் கண்களை மூடினான், விம்பமாய் மச்சாள் வைஸ்ணவி தோன்றினாள்

# தாயே நீ என் தெய்வம்

எங்கட புத்தகங்கள் நடாத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்ற கதை



அ. சிவரூபினி

குளத்தோரமாக வளைந்து நின்ற ஆலமர விருட்சத்தில் சாய்ந்தபடியே பூத்துக் குலுங்கிய தாமரைகளைக் கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த பாரதியின் நினைவு கடந்த கால த்திற்குள் சென்று கொண்டிருந்தது.
கணவனை இழந்த பெண்ணை இச் சமூகம் எப்படி வதைத்து எடுக்கின்றது? சுபநிகழ்ச்சியில் நிராகரித்தல், அப் பெண் காதுபட வசை பாடுதல், அவ மரியாதை செய்தல் எனப் பல நிந்தனைகளை அல்லவா அப்பெண் மீது செய்கின்றது இச்சமூகம். இதுவே கணவனை இழந்த பெண்ணிடம் காசு இருந்தால் அவளைக் கடவுள் போல் அல்லவா வணங்குவார்கள். இப்படி எண்ணிக் கொண்ட பாரதியின் நினைவு கடந்த கால வாழ்க்கையை மெல்ல மெல்ல நினைவு மீட்டத் தொடங்கியது.
பாரதியின் தாய் மீனாட்சி பாரதி சிறு வயதாக இருக்கும் போதே கணவனைப் பறி கொடுத்தவள். மீனாட்சிக்குக் கதிரவன் என்று ஒரு மகனும் உண்டு. அப்பம் சுட்டு விற்றல், வெள்ளாமை வெட்டும் வேலைக்குச் செல்லல் போன்ற கூலி வேலைக்குச் சென்று பிள்ளைகள் இருவரையும் கண்ணும் கருத்துமாய் வளர்த்து வந்தாள். பல துன்பங்களை எதிர் நோக்கிய மீனாட்சிக்கு ஒரு அறையுடன் கூடிய வீட்டுத்திட்ட உதவி கிடைத்தது. வீடு கட்டுவதற்கு அரசாங்கம் தந்த காசுக்கு மேலாக மீனாட்சி போட்டுக் கட்ட வேண்டிய தேவை வந்து விடவே கடன் என்று கேட்டால் மதிக்காத சொந்தம் மிதித்து விடும் என்று கருதி அதிகதிகமாக உடலை வருத்தி வேலை செய்யத் தொடங்கினாள். காட்டிற்குச் சென்று விறகு கொண்டு வந்து விற்றல், கீரை விற்றல், பூமாலை கட்டி விற்றல் போன்ற சிறு சிறு தொழில்களை அக்கம் பக்கத்து ஊருக்குச் சென்று செய்து வந்து ஒரு வழியாக வீட்டையும் கட்டி முடித்து விட்டாள். மண்ணெண்ணெய் விளக்கில் படித்துக் கொண்டிருந்த பிள்ளையைக் கண்டு கண் கலங்கி அடுத்த நாளே மின்சார சபைக்குச் சென்று மின்சார வசதியைப் பெற்றுக் கொண்டாள்.
இப்படியாகத் தனது பிள்ளைகளின் உயர்வுக்கு அயராது உழைத்து வந்தாள் மீனாட்சி. அரசாங்கம் மீனாட்சிக்கு உதவி செய்ய முன் வந்தபோதிலும்

ஊரில் உள்ள சில நயவஞ்சகர்கள் அதைத் தடுத்து வந்தனர். சில ஆண்டுகள் சென்றதும் பிள்ளைகள் இருவரும் வாலிப வயதுக்கு வந்து விட்டார்கள். கதிரவன் உழைப்பாலும், பாரதி கல்வியாலும் உயர்ந்து வெற்றி கண்டார்கள். அவர்களின் தாயை நிந்தனை செய்த மனிதர்கள் எல்லோரும் இப்போது எல்லாம் அத் தாயிடமே உதவி பெற்று வாழ்ந்து வந்தனர். தன் பிள்ளைகள் இருவருக்கும் திருமணம் செய்து வைக்க எண்ணினாள் மீனாட்சி. அதற்காகப் பல இடங்களிலும் இருந்து வந்த வரன்களில் சிறந்ததைத் தெரிவு செய்து காலப்போக்கில் இரு பிள்ளைகளுக்கும் திருமணமும் செய்து வைத்தாள். இந்த வீட்டிலே நான் இருக்கின்றேன் என்னைப் பற்றி நீங்கள் கவலை கொள்ள வேண்டாம் என்று மீனாட்சி சொல்லிய வார்த்தைகளை இரு பிள்ளைகளும் கேளாமல் இரண்டு மாதம் கதிரவன் வீட்டிலும், இரண்டு மாதம் பாரதியின் வீட்டிலும் இருக்குமாறு விடாப்பிடியாகக் கூறவே அவளும் சம்மதித்தாள். இங்கேதான் பெரிய தொரு சுனாமி போன்ற துயர் அவளை ஆட்கொள்ளக் காத்து கொண்டு இருக்கின்றது என அவள் கனவிலும் நினைத்திருக்க மாட்டாள். இரு வீட்டிலும் ஒரு வருடம் ஒரு குறையுமில்லாமல்தான் காலம் அவளைக் கடத்திச் சென்றது. இரண்டாவது வருடத்தில்தான் துயர்பிணி அவளைப் பற்றிக் கொண்டது.

ஒரு நாள் மீனாட்சி கோயிலுக்குச் சென்று வீட்டுக்குள் நுழைந்தபோது யாரோ அழும் குரல் கேட்கவே அவள் அவ்விடத்திலேயே பதறி ஓட முற்பட்டாள். ஆனால் அடுத்து வந்த வசைச் சொற்கள் அவளை மேலே செல்லவிடவில்லை.

"கதிர் இதோ பாரு... இந்த வீட்டுல உங்க அம்மா இருக்குறது எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கல. உங்க அம்மாவ உங்க தங்கச்சி வீட்டுலயே நிரந்தரமா இருக்கச் சொல்லுங்க." என்று விம்மிய குரலில் சொன்னாள் கதிரின் மனைவி அஞ்சனா.

"என்ன அஞ்சனா சொன்னா? நீயா இப்பிடி பேசுறது" என்றான் கதிர். "ஆம் கதிர் நான்தான் பேசுறன். உங்க அம்மாட நடத்தை எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கல"

"ஏன் எங்க அம்மா உனக்கு என்ன செய்தாங்க இப்போ"

"என்ன இனி செய்யனும். கருவாட்டுக் குழம்பு வச்சா மீன் குழம்பு வை. அவனுக்கு மீன் குழம்புதான் பிடிக்கும் என்றாங்க. சரி என்று மீன் குழம்பு வைச்சா

சீ... சீ.. சீ... இந்த மீன் ஏனம்மா வாங்கினாய்... இது அவனுக்கு பிடிக்காதே என்று சொல்றாங்க."

"அடி போடி பைத்தியக்காரி.
இதுக்குத்தானா இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டம்?" என்று சொல்லியவாறே அஞ்சனாவின் கன்னத்தில் கிள்ளப் போனவனைத் தட்டி விட்டு ஒரு அடி முன்னுக்கு வந்து அஞ்சனா பேசத் தொடங்கினாள்.

"கதிர் இது மட்டுமில்ல ... பக்கத்து வீட்டு மாமிக்கிட்ட சொல்றாங்க... எனக்கு ஒழுங்கா சமைக்கத் தெரியல.. பாத்திரம் கழுவத் தெரியல.. இப்பிடி அப்பிடி என்டு என்னன்னமோ சொல்றாங்க ... இதெல்லாம் சரி இல்ல ... அதான் சொல்றன் அவங்கள உங்க தங்கச்சி வீட்டுக்கு அனுப்பி வையுங்க என்று"

"அஞ்சனா ... இதெல்லாம் பெரிசா எடுக்காத... எங்க அம்மா என் மேல உள்ள கரிசனையால அப்பிடி நடந்து கொள்ளுறாங்களே தவிர மற்றும்படி ஒண்ணும் இல்ல இத இந்த இடத்திலயே மறந்து விடு"

"ஆமா... உங்க அப்பன் போகும் போதே உங்க அம்மாவும் போய் இருக்கனும்"

"என்னடி சொன்னாய்?" என்று கூறியபடி கை ஓங்கிய கதிரின் காதில் அம்மாவின் குரல் வந்து விழவே கண்களைத் துடைத்துக் கொண்டு "இதோ வந்துட்டன் அம்மா" என்று சொல்லிய வண்ணம் சென்றான் கதிர். இதுவரை நேரமும் பேசாமல் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த மீனாட்சி தன் மகன் கை ஓங்குகின்றான் என அறிந்ததும் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு முன் அறைக்கு விரைந்து வந்து சத்தம் போட்டுத் தன் மகனை அழைத்தாள்.

"கதிர் நான் பாரதி வீட்டுக்கு போயிற்று வரலாம் என்று நினைக்கிறன்பா"

"ஏன் அம்மா... அங்க இருந்து வந்து இன்னும் ஒரு கிழமை முடியல்ல... அதுக்குள்ள போகப்போறன் என்று நிக்கிறீங்க" என்றான் கதிர்.

"ஏனோ தெரியலப்பா... அவளப் பார்க்கனும் போல இருக்கு. நான் போய்ப் பாத்திட்டு வந்திறன்" என்று சொல்லிக் கொண்டே தன் அறைக்குள் சென்று துணி மூட்டையை எடுத்துக் கொண்டு வந்தாள் மீனாட்சி.

"சரிம்மா... வாங்க கொண்டு போய் விட்டுட்டு வந்துறன்"

"வேணாம்பா நான் பஸ்லயே போய்வாறன். கவனமா இருப்பா. உடம்ப பாத்துக்கோ. உங்க அப்பா என்னை ஒருநாளும் கை ஓங்கினது இல்லப்பா. நீயும் அப்பிடிதான் இருப்பாய் என்டு நினைக்கிறன்" என்று கூறிவிட்டு வாசலைக் கடந்து சென்றாள் மீனாட்சி.

இரு வாரம் கழித்துப் பாரதிக்குத் தொலைபேசி வழியாக அழைப்பு விடுத்த கதிர் அதிர்ச்சி அடைந்தவனாய் தரை மீது உட்கார்ந்தான். இதைக் கவனித்த அஞ்சனா அவனருகில் சென்று "என்னங்க என்ன ஆச்சு" எனக் கேட்டாள்.

"பாரதி வீட்டுக்கு அம்மா போகவே இல்லயாம்"

இதைக்கேட்ட அஞ்சனா மனதிற்குள் மகிழ்ந்து கொண்டு வெளியில் கவலை கொண்ட பெண் போல நடந்து கொண்டாள். கோயில், சந்தை என தெரிந்தவர் வீட்டில் பாரதியும், கதிரும் தேடி அலைந்தும் மீனாட்சி கிடைக்கவில்லை. ஒரு நாள் கதிர் வேலைக்குச் சென்று கொண்டிருக்கும் போது தன் பெயரை யாரோ உச்சரிப்பது போன்ற சத்தம் கேட்கவே சத்தம் வந்த திசையை நோக்கிப் புறப்பட்டான். வீதியோரமாகக் கிழிந்த சேலை உடுத்து, தலையை விரித்துப் போட்டுக் கையினை அங்கயும் இங்கயும் அசைத்த படி படுத்திருந்த உருவத்தை உற்று பார்த்ததும் கதிருக்கு என்ன செய்வது என்று தெரியாமல் அப்பெண்ணை கட்டி அணைத்துக் கொண்டு "அம்மா ... அம்மா" என்று கதறி அழுதான்.

"அம்மா" என்ற சத்தம் கேட்ட பாரதி கண்களில் வடிந்த நீரை துடைத்து கொண்டு திரும்பினாள். எதிரே தன் செல்ல மகன் சரவணன் நிற்பதைக் கண்டு அவனை அள்ளி அணைத்துக் கொண்டே தன் வீட்டுக்குள் நுழைந்தாள். கட்டிலில் கிடந்த தன் அன்னையை எழுப்பிக் குழந்தை போல் அரவணைத்து அவளுக்கு உணவு ஊட்டித் தன் அன்பு முழுவதையும் கொட்டிக் கொண்டிருந்தாள் பாரதி. "பெற்றோரை மறவாத பிள்ளைகளாக வாழ்வோம்."

> தமிழில் முதலில் தோன்றிய சிறுகதைத் தொகுதி மங்கையர்க்கரசியின் காதல். இதன் ஆசிரியர் வ.வே.சு ஐயர்.

# புதுமைப்பித்தனின் இறுதிக் கடிதம்

புதுமைப்பித்தன் தனது இறுதிக்காலத்தில் இலங்கை நண்பருக்கு எழுதிய கடிதம் இது ( பெரும்பாலும் அவர் எழுதிய கடைசிக் கடிதம் என்று கருதப்படுகின்றது )

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழகேசரியின் ஆசிரியராகவிருந்த இராஜ அரியரத்தினம் ( 1960 - 70 களில் "சிந்தாமணி " பத்திரிகையின் ஆசிரிய ராகவுமிருந்தார் ) , புதுமைப்பித்தனின் நண்பர்களில் ஒருவர். புதுமைப்பித்தன் தனக்கு ஆங்கிலத்தில் எழுதிய கடிதத்தின் மொழிபெயர்ப்பை , தான் எழுதிய புதுமைப்பித்தன் நினைவுக் கட்டுரையில் சேர்த்திருந்தார் இராஜ அரியரத்தினம் .

*" திருவனந்தபுரம்*

*17.6.48*

***எனது அருமை நண்ப ,***

***கடந்த இரண்டு வருடங்களாக எனக்குப் பொல்லாத காலம். நோய் என்னைப் படுக்கையிற் போட்டுவிட்டது. துரதிருஷ்டமான இந்த நோய் உடல்நிலை தளர்ந்திருந்த காலத்தில் என்னைப் பீடித்துக்கொண்டது. நான் அப்போது பாகவதரின் படத்துக்காகப் பூனா சென்றிருந்தேன். இப்போது எனது பண நிலை மகா மோசமாகிவிட்டது. நான் நோயினின்று குணமடைவதற்காக யாழ்ப்பாணத்து எழுத்தாளர்களும் வாசகர்களும் எனக்குப் பண உதவி செய்ய முடியுமா ? இதைப்பற்றிச் சிந்தித்து உடனே பதில் எழுதுக. அத்துடன் தயவுசெய்து ஈழகேசரியை இனி எனது புதிய விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.***

***தங்கள் நன்றியுள்ள***

***ஸி. விருத்தாசலம்***

தகவல் : அன்னை இட்ட தீ

# கூப்பரின் மாயக்கண்ணாடி....



பார்த்திமா சன்பறா

கூப்பருக்கு இப்போதெல்லாம் அந்த அறையை விட்டு வெளியேறவே விருப்பம் இல்லை. அவன் என்னதான் செய்கிறான் என்று அவனது தம்பி ஜிம்சன் கூப்பரை தவிர வேறு யாருக்கும் தெரியாது... இத்தனைக்கும் ஜிம்சன் பதின்மூன்று வயசு பையன் அவ்வளவு தான். அவனது பிரத்தியேக ஆய்வுகூடத்துக்கு ஜிம்சனை தவிர வேறு யாரும் நுழைவதும் இல்லை. வேளா வேலைக்கு சாப்பாடு ஸ்நாக்ஸ் என்று அத்த னையும் அவன்தான் எடுத்து செல்வான்.“இந்த பாத்திரத்தில் இருப்பது தான் நீ சொன்ன திரவமா?”என்று கேட்டுக் கொண்டே அதில் விரலை விட்டு பார்க்க முயற்சித்தான் ஜிம்சன்.“அடேய்... கொஞ்சம் சும்மா இருயேன். அதுல எல்லாம் கைவைக்க கூடாது .”என்று தடுத்தான் கிரிம்சன்.“அப்போ இது என்னன்னு சொல்லு.”

“இது தான் நான் தயாரித்த பாதரசம்...கேள்வி கேட்பதை நிறுத்திவிட்டு வா..வந்து எனக்கு உதவி செய் ”என்றான்.“அப்பாவோட பெக்டரியில் கண்ணாடி செய்றதுக்குப் பாவிக்கிறது தானே.. ஆனா அது சில்வர் கலர்ல இருக்குமே! இது தங்கம் போல் ஜொலிக்குது” என்று சந்தேகத்துடன் கேட்டான். “அது முகம் பார்க்கும் கண்ணாடி செய்வதற்கு... இது காலத்தை காட்டும் கண்ணாடி செய்வதற்கு.” என்றான் கிரிம்சன்.“ஓஹ் அப்போ இது வழியா நாம எல்லாக் காலங்களையும் பார்க்க முடியுமா?”

“முடியும். ஆனா அதுக்கு நீ கொஞ்சம் தொண தொண வென்று பேசாமல் இருந்தால் போதும்.” என்றான். வெளியில் ஜிம்சனை அம்மா கூப்பிடுவது கேட்டது. அவனும் அம்மாவைக் காத்திருக்க வைக்காமல் ஓடிச்சென்றான். தேவையான குறிப்புக்களை எல்லாம் ஒரு பழைய புத்தகத்தில் இருந்து பெற்றுக்கொண்ட கிரிம்சன் கண்ணாடியை உருவாக்குவதில் முழுமூச்சாகச் செயற்பட்டான். எப்படியோ அந்தக் காலத்தை காட்டும் கண்ணாடியைச் செய்து முடிக்க சரியாக இரண்டு வாரங்கள் பிடித்து கொண்டன. பச்சை தண்ணி கூடப் பல்லில் படாமல் சாப்பாடு தண்ணீர் இன்றி சோர்ந்து விழுந்தான் கிரிம்சன்.இதில் உள்ள சிக்கல் என்ன வென்றால் கூப்பரின் கண்ணாடி உருவாக்குவதில் ஒரு சின்னப் பிழை ஏற்பட்டாலும் மொத்த ஆராய்ச்சியும் வீணாகி விடுவதோடு மட்டுமன்றி காலங்களில் குழப்பம் ஏற்பட்டுப் பாரிய சிக்கல் ஏற்படும். எனவே தான் வழக்கமாக வரும் தம்பியைக் கூட உள்ளே வரவிடாமல் கதவைத் தாழிட்டுக் கொண்டு வேலை-களைப் பார்த்தான். இரண்டு வாரமாக உள்ளே இருந்து கொண்டு தான் உயிருடன் இருப்பதைத் தெரிவிக்க அடிக்கடி ஜிம்சனை கதவடியே கூப்பிட்டு ஏதாவதொரு புதிரைக் கேட்பான். ஜிம்சனும் அதி புத்திசாலி. அடுத்த மணி நேரத்தில் எப்படியாவது பதிலைக் கண்டுபிடித்து இன்னது தான் என்று சொல்லி அண்ணனிடம் பாராட்டைப் பெற்றுச் செல்வான். மயக்கத்தில் இருந்து கொஞ்ச நேரத்தில் தெளிந்து எழுந்தவன் கதவைத் திறந்து கொண்டு வந்து விழுந்தான். எதேச்சையாக அந்தப் பக்கமாக வந்த கூப்பரின் தாயார் “ஐயையோ கிரிம்சன்!!” என்று வந்து அவனைப் பதற்றத்துடன் ஆராய்ந்தார். உடனே கண்ணாடி பேக்டரிக்கு அழைப்பை ஏற்படுத்தி அவன் அப்பாவுக்குத் தகவலைச் சொல்லி அழைத்தாள். பாடசாலை விட்டு ஜிம்சன் வீட்டுக்கு வந்த போது அண்ணனை ஹாலில் காற்றோட்டமாகப் படுக்க வைத்து அவனைச் சுற்றி அப்பாவும் அம்மாவும் டாக்டர் அங்கிளும் நிற்பதைக் கண்டு அண்ணனுக்கு ஏதோ ஆயிற்று என்று பயந்து போய் புத்தகப்பையை வீசிவிட்டு அவ்விடத்துக்கு விரைந்தான். கூப்பருக்கு ட்ரிப்ஸ் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தது. சின்ன சின்ன டெஸ்ட்களை எல்லாம் முடித்து விட்டு டாக்டர் பேசினார். கிட்டத்தட்ட ரெண்டு


வாரமா சாப்பாடு தண்ணி ரெண்டுமே உடம்பில் செல்லல. இத்தனை நாளைக்கு உயிரோட இருந்ததே கடவுள் கருணை. இனி எல்லாம் சரியாயிடும் நல்லாப் பார்த்துக் கொள்ளுங்க." என்று விட்டுக் கிளம்பினார். முகமெல்லாம் உக்கிப் போய் ஒல்லியாக இருந்த அண்ணனின் தோற்றத்தைப் பார்க்கையில் மிகவும் கவலையாக இருந்தது ஜிம்சனுக்கு. மீண்டும் ஒருவாரம் கழித்து உடல் நலம் தேறிய பின்னர் மாடிக்குச் சென்று தன் ஆய்வு கூடத்துக்குள் நுழைய முயற்சித்த போதுதான் கதவை யாரோ வெளியில் பூட்டித் தாழிட்டு இருப்பது தெரிந்தது. அப்போது அங்கு வந்த ஜிம்சனிடம் , "விளையாடலாம் சாவியைக் கொடு ஜிம்சன்." என்றான். "நான் எடுக்கல..அம்மாதான் நீ மறுபடியும் உள்ளே போய்டுவே என்று சொல்லிச் சாவியை ஒளிச்சி வெச்சிருக்காங்க." என்றான். "டேய் உனக்கு சாக்லேட் வாங்கித் தரேன் ..அந்தச் சாவி எங்க இருக்குன்னு சொல்லேன்."என்றான். "சாக்லேட் எல்லாம் வேணாம்.. இந்த வாட்டி நானும் உன்கூட வருவேன்." என்று சொல்லி டீல் பேசினான். "சரி முதலில் போய் எடுத்து வா.."என்று கிரிம்சன் சொல்ல அவனும் அம்மா ஒளித்து வைத்த சாவியை எடுத்து கொண்டு வந்து கொடுத்தான் . உள்ளே இருவரும் சென்றனர். தங்க நிறத்தில் அந்தக் கண்ணாடி ஜொலித்தது. "வாவ்... நீங்க உண்மையிலேயே ஜீனியஸ் அண்ணா!..ஆமா இது எப்படி வேர்க் பண்ணும்?" "எனக்குக் கிடைத்த தகவல்கள் எல்லாத்தையும் வெச்சி இந்தக் காலக் கண்ணாடியை உருவாக்கி இருக்கேன். ஆனா இது எப்படி வேலை செய்யும் என்று பாக்க முன்னாடியே மயங்கி விழுந்துட்டேன். இதோ இந்தப் புத்தகத்தை எழுதினவர் செய்த தீவிர ஆராய்ச்சியின் முடிவு என்னன்னா நாம மட்டும் இந்தக் கண்ணாடியை உருவாக்கிட்டா நம்மலாள காலங்களைக் கடந்து பயணிக்க முடியும். நம்ம இறந்த காலத்தையும் நம்ம எதிர்காலத்தையும் நம்மலாள பார்க்க முடியும். ஆனா அவருக்கு இதை உருவாக்க கூடிய மெடிரியல்ஸ் எதுவும் அப்போ கிடைக்கவே இல்லை. அதனால் தான் அவரால இந்த எக்ஸ்பிரிமெண்டை பண்ண முடியல்ல." அப்போது வெளியே அம்மாவின் அழைப்பைக் கேட்டு இருவரும் ஆடிப்போயினர். சாவியை எடுத்துக் கொடுத்தமைக்காக ஜிம்சனுக்கும் மறுபடியும் அந்த அறைக்குள் சென்றதற்காக கிரிம்சனுக்கும் கண்டிப்பாக அம்மா ஏதாவது தண்டனை கொடுப்பாள். அந்தப் பயத்தில் இருவரும் அங்கும் இங்கும் ஒளிந்து கொள்ள முயற்சித்தனர். ரொம்பவும் வித்தியாசமாக இருந்தது . இந்த அறையில் நாட்காட்டியோ மணிக்கூடு ஒன்றோ இல்லை.அதனால் இவர்கள் வெளியே செல்ல முயன்றபோது தான் தெரிந்தது கதவை யாரோ வெளியில் இருந்து அடைத்துள்ளனர். "அது எப்படி அண்ணா நாம் உள்ளே தான் பூட்டினோம்... கதவை யாரோ வெளியே இருந்து பூட்டி இருக்காங்க." என்றான் . எதுவுமே புரியவில்லை. ஜிம்சனை ஜன்னல் வழியாக இறக்கிப் பக்கத்து அறைக்கு அனுப்பி அந்தப் பூட்டை உடைத்துக் கதவைத் திறந்தனர். அப்போது கீழே ஹாலில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒருத்தன் மேலே ஏதோ சத்தம் கேட்பதை உணர்ந்து அண்ணார்ந்து பார்க்கத் தூக்கி வாரிப்போட்டது. இருவருக்கும். பக் என்று ஒளிந்து கொண்டனர். "அண்ணா உன்னை மாதிரியே ஒருத்தன் நம்ம ஹாலில் இருக்கான்..." என்றான். இப்போது தான் கிரிம்சனுக்கும் எல்லாம் புரிந்தது. அங்கிருந்த நாட்காட்டியோ 20 வருடங்கள் எதிர்காலத்தைக் காட்டியது... ."நாம இப்போ 2040 ம் வருடத்தில் இருக்கோம் ஜிம்சன்... அது நானா தான் இருக்க வேண்டும்..20 வருடங்களுக்கு பிறகு நான் இப்படி தான் இருப்பேன் போல .."என்று சொல்லி கொண்டிருக்கும் போதே அந்த எதிர்கால மனிதன் இவர்களை நெருங்கி வந்துவிட்டான். அவன் வந்ததும் ஒரு கணம் மூவரும் பேச்சற்று போய் நிற்க அவனோ கிரிம்சனை கட்டி அணைத்தான். இவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. "எதுக்காக அண்ணன் அவனையே கட்டிப் பிடிக்கணும்?"என்று ஜிம்சன் அவனையே கேட்டு கொண்டான். "இங்கிருந்தா சிக்கல் ஆகிடும் வாங்க ரெண்டுபேரும்" என்று சொல்லி அவன் இருவரையும் அந்தக் கண்ணாடி அறைக்கே அழைத்து சென்றான். "நீங்க என்னோட அண்ணன் தானே ?" என்ற ஜிம்சனைப் பார்த்து அவன் சொன்னான். "இல்ல நீ தான் நான் .."என்றான். இருவருக்கும் மீண்டும் அதிர்ச்சி. "என்ன?" "அப்போ நீ முப்பத்தி மூணு வயசுல இருக்குற ஜிம்சன் ஆஹ்...நம்பவே முடியவில்லை.. அப்படியே என்னோட முகம் மாதிரியே இருக்கு."என்றான் கிரிம்சன். "ஆமா..அப்போ நீங்க தான் நான் என்றால் அண்ணன் எங்கே. அவரும் நாற்பத்து மூன்று வயசில் இருப்பாரோ. அவரையும் கூப்பிடுங்க."என்றான் ஜிம்சன். அதற்கு எதிர்கால ஜிம்சன் மௌனமாக இருந்தான். "என்னாச்சு. எனக்கேதாவது ஆயிடுச்சா?"என்று கேட்டான் கிரிம்சன்."

“அது வந்து ...நீங்க... உங்க முப்பதாவது வயதில் ஒரு விபத்தில் இறந்து போய்ட்டீங்க.” என்றான். அதைக் கேட்டு கிரிம்சனுக்கும் ஜிம்சன் ஜுனியருக்கும் பேரதிர்ச்சி. “இல்ல அப்படி நடக்கக் கூடாது.. வா அண்ணா இப்பவே நாம அந்தக் காலகட்டத்திற்குப் போய் அந்த விபத்தைத் தடுப்போம்.” என்றான். “அவசரப்படாதே ஜிம்சன்...நான் அப்படிப் பண்ணதால் தான் அந்த விபத்தே நடந்தது.”என்றான். “நீ என்ன சொல்றே என்ன பண்ணி அந்த விபத்து நடந்தது. எப்படி நான் இறந்தேன்?”என்றெல்லாம் கிரிம்சன் கேள்விகளை அடுக்கினான். “நல்லாக் கேளுங்க நாம இப்போ ஒரு காலச்சுழலில் மாட்டிக்கிட்டு இருக்கோம். முதல் தடவை அண்ணன் இந்த கண்ணாடியைக் கண்டு பிடிச்சப்போ இதே போல தான் நடந்தது.. நான் எதிர்காலத்துக்குப் போனேன் என்னையே பார்த்தேன். அண்ணன் இறந்துட்டான் என்று தெரிஞ்சதும் நானும் அண்ணனும் சேர்ந்து மறுபடியும் அந்தக் கண்ணாடியைச் சரி செய்து அதுவழியா போனோம்... ஆனா அந்த விபத்தே நாங்க ட்ராவல் பண்ணின போன போது ஏற்பட்ட மின்சாரம் தாக்கித் தான் அந்த இடத்தில் இருந்த கிரிம்சன் இறந்தார்..”என்றான். “அப்படின்னா அந்த ரெண்டாவது பயணம் நாங்க பண்ணல என்றால் கண்டிப்பாக அண்ணன் இப்போ உயிரோட இருந்திருப்பார் இல்லியா?”என்று கேட்டான் ஜிம்சன். ”சரியாச் சொன்னாய்... ஒரு விடயம் மட்டும் உண்மை ..காலத்தை அது பாட்டுக்கு விட்டுட்டா எல்லாமே சரியாவே போகும்.. ஒரு விடயத்தை நாம மாத்திட முயற்சி செய்தாலும் அது மொத்த வரலாற்றையே மாற்றிடும்..”என்றான். “இந்த வார்த்தைகளை இதற்கு முன்னாடியே நான் கேட்டு இருக்கேன் .” என்றான் கிரிம்சன். அதற்கு எதிர்கால ஜிம்சன் சிரித்து விட்டுச் “சொன்னதே நீங்க தானே.”என்றான். “சரி ..ரொம்ப நாள் கழிச்சு உங்களைப் பார்த்ததில் ரொம்பவும் சந்தோசம் அண்ணா. ஆனா நீங்க இப்போ உடனே கிளம்பி ஆகணும். ஏன்னா அம்மாவுக்கு இதெல்லாம் தெரியாம உங்க ரெண்டு பேரையும் தேடிட்டு அந்த கண்ணாடியைத் தெரியாம பாழாக்கிடுவாங்க… நான் சின்ன வயதில் பயணம் செஞ்சி மறுபடியும் போனபோது அதுதான் நடந்தது.” “அப்படின்னா அதுக்குள்ள நாங்க போகலைன்னா இங்கேயே மாட்டிக்குவோம். இல்லியா..?” என்று கிரிம்சன் கேட்டான். “ஆமா..நான் அண்ணன் இறந்த நாளில் இருந்து நீங்க வரும் நாளை எதிர் பார்த்துகிட்டே இருந்தேன். என்னோட இந்த வயதில் தான் நீங்க இறந்த காலத்தில் இருந்து வருவீர்கள் என்று தெரியும் ஆனா எந்த நாளென்று ஞாபகம் இல்லை... நான் உங்க கிட்ட இதெல்லாம் சொல்லுறதுக்கு இருபது வருடம் காத்திருந்தேன்.” என்றான். கீழே அவர்களின் அம்மாவும் அப்பாவும் சொப்பிங் முடித்து விட்டு வரும் சத்தம் கேட்டது. அங்கு எட்டிப் பார்த்த போது ஒரு சின்னக் குழந்தையும் அவர்களின் கையில் இருந்தது. அது பார்க்க அழகாகவும் இருந்தது. “அந்தக் குழந்தை யாரோடது?”என்று கேட்டான் ஜிம்சன். ”எல்லா விடயங்களையும் முன்கூட்டியே தெரிஞ்சிக்கிட்டா வாழ்க்கையில் சுவராசியமே இருக்காது... அவ பெயர் சாரா..அது மட்டும் உனக்கு தெரிஞ்சா போதும்.” என்று சொன்னான். வளர்ந்த ஜிம்சன். அவர்கள் அவசர அவசரமாக அந்தக் கண்ணாடியில் நுழைந்தனர். மீண்டும் சுழலில் சிக்கிக் கண்ணாடி வழியாக அதே அறையில் விழுந்தனர். அப்போது அந்த அறைக்குள் நுழைந்த அம்மா ரொம்பவும் கோபப்பட்டார். “ஜிம்சன் நீ என்ன காரியம் பண்ணி இருக்கே. எனக்கு தெரியாமச் சாவியை எடுத்து அண்ணன் கிட்ட கொடுத்து இருக்கே.. போன வாரம் அவன் எப்படி இருந்தான் தெரியும் தானே...”என்று கத்திக் கொண்டே கோபத்தில் அந்தக் கண்ணாடியை உடைக்கப்போக இருவரும் அம்மாவிடம் மண்டி போட்டு மன்னிப்புக் கேட்டனர்.. “இதை ஒன்னும் பண்ணிடாதீங்க மா...இனி நாங்க இந்த ரூம் பக்கமே வரமாட்டோம். ”என்று அவளைச் சமாதானம் செய்து அழைத்துச் சென்றனர். அம்மாவின் கட்டளைக்கு ஏற்ப அந்த ரூம் வெளியே தாளிடப்பட்டது. கடைசியாக அந்தக் கண்ணாடியை இருவரும் பார்த்து கொண்டனர். ஏனெனில் இனி இருபது வருடங்கள் கழித்து அவர்களே அந்த அறையின் பூட்டை உடைக்க வேண்டி இருக்கும் இல்லியா?

“காலத்தை அது பாட்டுக்கு விட்டுட்டா எல்லாமே சரியாவே போகும்.. ஒரு விடயத்தை நாம மாத்திட முயற்சி செய்தாலும் அது மொத்த வரலாற்றையே மாற்றிடும்.” என்று சொல்லித் தனது தம்பியின் தோளில்தட்டிக் கொடுத்தபடியே புறப்பட்டான்.

உலகின் முதற் சிறுகதை வாசிங்ரன் இர்வின் என்பரால் எழுதப்பட்டது. அதன் பெயர் ‘ ரிப் வான் விங்லே’ (Tip van winkle). இது வாசிங்ரனில் வெளியிடப்பட்டது.

# காலத்தின் கைமாறு




கணக்கு வாத்தியார் கமலநாதன் லண்டன் வந்து 15 ஆண்டுகள் ஓடிப்போய்விட்டது. செய்யும் தொழிலே தெய்வம் என்பதற்கு ஏற்பத் தாயகத்தில் கடமை கண்ணியம் கட்டுப்பாடு மாறாத சிறந்த ஆசிரியராக அவருடைய பணி சிறப்பானது. லண்டனில் பல மொழி கலாச்சாரம் குளிர் வெயில் என்ற வெளிநாட்டு வாழ்வில் அவருக்கு உடலழவிலும் பாரிய மாற்றம் தலை முடியும் குறைந்துவிட்டது. இருந்தும் அவரிடமிருந்த பிறருக்கு உதவும் நற் குணம் எள்ளவும் குறையவில்லை. திருமணபந்தத்தில் இணைந்த அவருக்கு 3 பிள்ளைகள் லண்டனில் பிறந்து வாழும் நிலையில் நாட்டில் இடம் பெற்ற கொடிய யுத்தத்தால் அவர்களை அழைத்துக் கொண்டு அவர்தம் அன்னை மண்ணைக் காட்டி மகிழ முடியவில்லை. இத்தனைக்கும் அவர் குடும்பத்தில் அவர் மட்டுமே வெளிநாட்டில் வாழ்கிறார். அவருடைய அண்ணன் கொழும்பில் வெள்ளவத்தையில் வீடு வாங்கித் தனது வேலையிலும் கொழும்புக்கு மாற்றலாகி வாழ்கின்றார். இப்போது இருண்டவானில் இருள் விலகி எம் தேசத்தில் ஒளிக்கீற்றுப் படருகின்ற நேரம். ஆசிரியரைக் குடும்பத்துடன் கொழும்புக்கு வருமாறு அண்ணன் அழைத்துக் கொண்டிருக்க 6 வார பாட-சாலை விடுமுறையில் ஆசிரியர் குடும்பத்துடன் கொழும்புக்குப் பயணமானார். கொழும்பு விமான நிலையத்தில் ஆசிரியரையும் குடும்பத்தினரையும் அன்பாக வரவேற்ற அவரின் அண்ணன் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றார். வழியெங்கும் பாரிய மாற்றங்கள். வீதிகள் வெளிநாட்டு வீதி போன்று காணப்படுகின்றன. கட்டடங்கள் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் என கொழும்பு மாநகரம் வெளிநாடு போன்ற தோற்றத்தில் மிளிர்வதை அவதானித்துக் கொண்டு செல்கிறார். அண்ணனின் வீட்டுக்கு வந்தாயிற்று . வாரமும் ஒன்று ஓடிப்போக அண்ணனின் வீட்டிற்குப் பக்கமாகவுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புப் புதிதாக கட்டப்பட்டு விற்பனைக்கு வருவது தெரியவந்தது. அதில் ஒரு மாடியை வாங்குமாறு அண்ணன் ஆசிரியரை வலியுறுத்தினார். ஆசிரியருக்கு உடனும் முடிவு சொல்ல முடியவில்லை மனைவியிடம் ஆலோசித்தார். "நாங்கள் வெளிநாட்டிலை பிடுங்கி நட்ட மரங்கள். குளிர்காலத்திலை வயசான நேரம் எங்களாலை அங்கை கஸ்டப்பட ஏலாது. அண்ணா சொல்லுறதும் சரிதான். எதுக்கும் ஒரு மாடியை வாங்கிவிட்டால் பிள்ளைகள் வர மறுத்தாலும் நாங்கள் இரண்டு பேரும் பிற்காலம் எங்கடை நாட்டிலை வந்திருக்கலாம்." என்று மனைவியும் ஆமோதித்தார்.

அங்கு ஒரு மாடி வாங்குவதென்றால் முற்பணம் 10 லட்சம் கட்டவேண்டும். பின் மாதம் மாதம் கட்டி வீட்டைச் சொந்தமாக்கலாம். இந்த நிபந்தனைப்படி பெயரைப் பதிவு செய்துவிட்டு வீடு திரும்பினார். வாரம் ஒன்று கடந்த நிலையில் அந்தக் காரியாலயத்திலிருந்து ஒரு நாள் அழைப்பு வந்தது.

" கமலநாதன் என்ற பெயருக்கு முற்பணம் கட்டப்பட்டு விட்டது. திறப்பைப் பெற்றுச் செல்லவும். என்று அவர் சொன்னதைக் கேட்டு ஆசிரியருக்கு ஒருவித திகைப்பு.

அண்ணனிடம் கேட்டார் " அண்ணா ஏதும் பணம் கட்டினனீங்களா?"

அண்ணா " இல்லையே!" என்றார். அப்படியாயின் எனக்கான முன்பணத்தைக் கட்டியது யார்? உடனே காரியாலயத்திற்கு நேரில் சென்று

" எனக்கான பணத்தைக் கட்டியது யார்? என விசாரித்தார். அதற்கு அவர்கள் " மாஸ்டர் நீங்கள் வாங்கும் மாடிக்குப் பக்கமாக அடுத்த மாடியை வாங்குகின்ற நந்தகுமார் என்ற பொறியிலாளரே

உங்களுக்கான பணத்தைக் கட்டினவர்". என்று கூறித் தொலைபேசி இலக்கத்தையும் கொடுத்தார். உடனே ஆசிரியர் அவரைத் தொடர்பு கொண்டு அண்ணாவின்

வீட்டிற்கு வருமாறு வேண்டுகோள் விடுத்தார். சில மணி நேரங்களில் நந்தகுமார் ஆசிரியரின் அண்ணா வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

" சேர் என்னை நீங்கள் மறந்திருக்கலாம். உங்களை என்னால் மறக்க முடியாது. இந்த வானுயர மிளிருகின்ற கட்டடத்தைக் கட்டுகின்ற பொறியியலாளராக நான் நிற்பது நீங்கள் காட்டிய பரிவினால்தான். என்னை உங்களுக்குத் தெரிகிறதா?" அந்தக் கீழ்ப்படிவு அடக்கம் இவை அனைத்தும் ஆசிரியரின் எண்ணங்களைப் பல வருடங்கள் பின்னோக்கி ஓட்டிச் சென்றன.

---

மல்லாவி மகாவித்தியாலயத்திற்கு மாற்றலாகிப் புதிதாகக் கிராமப் பாடசாலைக்கு வரும் எனக்கு அதிபர் இராமநாதன் நல்ல வரவேற்புக் கொடுத்து " இதுவரை நாளும் எங்களுடைய பாடசாலைக்குக் கணக்குப் பாடத்திற்கு இருந்த ஆசிரியர் பிரச்சினை உங்களுடைய வருகைக்குப் பின் தீர்ந்திடும்" எனக் கூறி என்னை வகுப்பறைக்கு அனுப்பிய முதல்நாள். பாடசாலை மணி அடிக்கின்றது. மாணவர்கள் அனைவரும் வகுப்பறைக்குள் வந்துவிட்டனர். நான் 9 ஆம்தர வகுப்பிற்குக் கணிதபாடம் படிப்பிக்கச் செல்கின்றேன். எல்லா மாணவர்களும் எழுந்து நின்று "வணக்கம் சேர்" என்று கூற ஒரேயொரு மாணவன் மட்டும் எழுந்திருக்கவில்லை . அது என்னை மனம் கோணச் செய்த போதிலும் அவசரப்படாது பாடத்தை நடத்தி முடித்து மதிய இடைவேளையில் அந்த மாணவனை அழைத்து "நீ ஏன் எழுந்திருக்கவில்லை உனக்கு மரியாதை தெரியாதோ? என்று கேட்க அந்த மாணவன் "சேர் என்னை மன்னித்து விடுங்கள். நான் உங்களை அவமதிக்க வேண்டுமென்பதற்காக எழுந்திருக்காமல் விடவில்லை. நான் சாப்பிட்டு மூன்று நாள். என் தந்தை ஒரு கூலித் தொழிலாளி. தற்போது தொடர்ந்து மழை பெய்வதால் எந்த வேலையும் கிடைக்காது வீட்டிலேயே இருக்கிறார்." என்று கூறி அழுதான். நான் அவசரப்படவில்லை. அப்படி அவசரப்பட்டு ஏதும் தண்டனை வழங்கியிருந்தால்! கடவுளே இளமையில் வறுமை கொடியது என்றார் ஔவையார். அதுவும் இந்த வளமான வன்னி மண்ணில். உடனே நான் ஒரு முடிவுக்கு வந்தேன். அன்றிலிருந்து மாற்றலாகும்வரை அந்த மாணவனுக்கு மதிய உணவாகக் கன்ரீனில் எனது செலவில் சாப்பிட ஒழுங்கு செய்தேன்.

---

இப்போது என் நினைவுகளை நிலைப்படுத்திக் கொண்டேன். ஆம் என் முன்னே நிற்பது அந்த மாணவன் நந்தகுமார் என்றதும்

"தளரா வளர் தெங்கு தானுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால்" என்ற அருள் மொழி என்னுள் ஒலித்தது. அன்று ஏழைச் சிறுவனான குமார் இன்று ஒரு பொறியியலாளன். அவனுடைய உயர்வு என்னை மகிழ்வில் ஆழ்த்தியது. அவனை ஆனந்தத்தில் அணைத்தேன்

"சேர் நீங்கள் லண்டன் போய் விட்டதாகக் கேள்விப்பட்டேன். விடுமுறையில் அண்ணாவிடம் வந்திருப்பதை அறிந்தேன். உங்களுடைய பெயர் என் லிஸ்டில் இருந்ததைக் கண்ணுற்றேன். என் வாழ்வில் ஒளியேற்றிய கதிரவன் நீங்கள். அதனால்.." எனத் தயக்கத்துடன் கூற அசிரியர் தனக்கே உரிய உயர்ந்த குணத்தோடு கூறினார்

"குமார் அன்று உன் நிலை குன்றியிருந்ததால் உன்னை வளப்படுத்த எனது சிறு உதவி பயன்பட்டது. இன்று நீ எனக்கு உதவுவதாக இருந்தால் 30 வருட கொடிய போரில் அனாதையாகிய ஏதிலிகள் பலர் எம் தேசத்தில் உள்ளார்கள். அவர்களில் கல்வி கற்க இயலாத வறிய பிள்ளைகளைப் பொறுப்பெடுத்து உதவு. அதுவே நீ எனக்குச் செய்யும் கைமாறு." என்று கூறி 10 லட்சம் ரூபாவுக்கான காசோலையைக் குமாரிடம் கொடுத்தார்.

## ஆய்த எழுத்து

ஆய்தம் என்பது குற்றியல் அகரம் குற்றியல் இகரம் குற்றியல் உகரம் ஆகிய மூன்று நுண் உயிர் எழுத்துக்களைக் கொண்டது. வல்லின எழுத்தின் இடது புறத்தில் ஆய்தப் புள்ளியைப் போட்டால் அது இடையின எழுத்தாக மாறிவிடுகிறது. ஓர் எழுத்தின் மேற்பகுதியில் அந்த எழுத்தின் ஒலி அளவை பாதியாகக் குறைத்துவிடும். ஓர் எழுத்தின் வலது பகுதியில் போட்டால் அந்த எழுத்தின் ஒலி அளவை இரண்டு மடங்காக உயர்த்திவிடும். இவ்வாறு மூன்று செயல்களைப் புரிவதால் இதற்கு முப்பாற் புள்ளி என்ற பெயரும் உண்டு.

– தொல்காப்பியம் –



# மஞ்சரிபற்றி மனந் திறந்து...

“சிறுகதை மஞ்சரி” இதுவரை மூன்று இதழ்கள் கையிலே கிடைத்துள்ளன. முதலாவது இதழுக்கும் மூன்றாவது இதழுக்கும் இடையில் உள்ள வளர்ச்சி உங்களின் அயராத முயற்சி. சஞ்சிகையின் முகப்பு, உள்ளடக்கம், அமைப்பு எல்லாவற்றிலும் ஏறுமுகம் இருப்பதை அதானிக்க முடிகிறது.
தனிப்பட்ட இலவசங்களைத் தவிர்ப்பது ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சிக்கும், எழுத்தாளர்களின் கௌரவத்திற்கும் துணை நிற்கும் என்பது எனது கருத்து. இலை மறை காய்களாக இருந்த பல எழுத்தாளர்கள் இனம் காணப்படுவது மகிழ்ச்சியாயுள்ளது. இதன் வளர்ச்சியில் எமது பங்கும் இருக்க வேண்டுமென்பதில் ஆர்வமாயிருக்கிறோம். மூன்றாவது இதழில் வந்த ஆக்கங்கள்பற்றிய என் பார்வை:

**எட்வேட் சூசையின் அவளும் நானும்.**

மனைவியினுடைய பொறுப்புக்களும் வேலைப்பழுக்களும் அவள் இயல்பாக இயங்கும்போது கண்டுகொள்ளப்படாமையும்,அவள் இல்லாதபோது தடுமாறுவதும் அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. எப்படி இருந்த தமிழ்-முஸ்லீம் உறைவை சீரழித்தது வெறும் அரசியல் மட்டும ல்ல பல்லின சமூகங்கள் வாழும் நாட்டில் எழுபதுகளின் பின் வந்த அரேபிய நாட்டுத் தொடர்புகளும்தான் என் பதை எத்தனைபேர் ஏற்றுக்கொள்ளப்போகிறார்கள்.

**அலெக்ஸ் பரந்தாமனின் மடத்துச்சோறு.**

தானம் என்ற பெயரில் பாவ மூட்டை சும்பவர்களைத் தனது எழுத்தினால் அழகாக படம் பிடித்திருப்பது அவரின் எழுத்தின் முதிர்ச்சி. இவர்கள் வெவ்வேறு வடிவங்களில் அப்பாவிகளை ஏழைகள் என்று முத்திரை குத்துவது தொடர்வதுதான் சோகம்.

**சி.சிறீரங்கனின் தாய்மை.**

தன்னைப் பாதித்த ஒரு கருவுக்கு கற்பனை கலந்து உருவம் கொடுத்திருந்ததால் கதை என்று பார்வையில் சிறப்பாகவே இருக்கிறது. அதேவேளை எங்கள் மண் சுமந்து நிற்கும் பல்லாயிரக் கணக்கான இளம் விதவைகள் இதிலிருந்து என்ன புரிந்துகொள்ளப்போகி றார்கள் என்று நினைக்கும்போது ஒரு நெருடல் வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

**N.K.வேணியின் துளிர்ந்த தேயிலைச் செடி.**

இந்தச் சிறுகதை வாழும் மலையகம் வளரத்துடிப்பதை வசப்படுத்தியிருக்கிறது. அவரின் எழுத்து இன்னும் வளரும் என்ற நம்பிக்கையைக் கதையை வாசிக்கும்போதே தந்திருக்கிறார்.

**என்னுடைய தெய்வங்கள்.**

ஆஸ்பத்திரிக்குக் குறைந்தது ஒரு சரவணனும், ஆதரவற்ற நோயாளர்மீது அன்புகாட்ட சில அன்னை திரேசாக்களும், புலோறன்ஸ் நயிற்றிங் கேல்களும் வரமாட்டார்களா என்ற ஏக்கமான எதிர்பார்ப்பு. அவ்வளவுதான். அதே வேளை உலகளாவிய ரீதியில் கொரோனா நோயாளிகளுக்காக உயிரைப் பணயம்வைத்து மக்கள் பணியாற்றிக்கொண்டிருக்கும் அனைத்துப் பணியாளர்களுக்கும் தலை வணங்குகிறேன்.

**குலசிங்கம் வசீரனின் தயவான தத்துவனே.**

வன்னிப் போர்முனை விதைத்து விளைவித்து விட்ட பல்லாயிரக்கணக்கான வலிசுமந்த இதயங்களின்“ மாதிரி”தான் தமிழ்நிலாவும் அம்மம்மாவும். பல மனங்களின் வலியை எழுத்தின் வலிமையால் பதியம் போட்டுச் சென்றுள்ளார்.

**சமரபாகு சீனா உதயகுமாரின் சத்தியசீலன்.**

வாசிக்கும்போது மீண்டும் ஒருமுறை ஏழாம் வகுப்பில் இருந்து படித்த அனுபவமே வந்தது. வாசிப்பதற்கு அதிக நேரம் தேவைப்பட்டது. சில புதிய நுணுக்கங்களை இங்கே கற்றுக்கொண்ட திருப்தி ஏற்படுகிறது. நான் இன்னும் இரட்டைக் கொம்பை மேலேயிருந்து கீழ் நோக்கித்தான் எழுதிக்கொண்டிருக்கிறேன். கதையோடு கற்றலும் நன்று. மாணவர்களின் வளர்ச்சியில் ஆசிரியர்களின் புரிந்துணர்வின் தேவை சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

**சோ.நளாயினியின். வீடு.**

திருமணமும் வீடும் ஒரு நடுத்தர குடும்த்தில் உள்ள ஒவ்வொரு பெண்களுக்குமுள்ள வலிமிகுந்த எதிர்பார்ப்புத்தான். அவர்களின் ஏக்கங்களையும எதிர்பார்ப்புகளையும் எழுத்துக்களுடன் நகர்த்திச் செல்லும் அழகில் அவரின் அனுபவமும், அவதானிப்பும் ஆச்சரியப்பட வைக்கிறது.

**திருமலை ரதி தனஞ்செயனின் வாழ்தலே இனிது.**

கதையை வாசித்துக்கொண்டு போகும்போது ஒரு அனுபவ எழுத்தாளரின் கதை நகர்த்திச் செல்லும் ஒழுங்கை இரசிக்க முடிகிறது. தொடர்ச்சியாகத் தொய்வின்றிக் கனவுகாணும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தவரம். நட்பின் ஆழத்தை வெளிப்படுத்த உருவாக்கப்பட்ட வார்த்தைகள் காட்சிகளாய் தெரிவது எழுத்தின் ஆழுமை.

அன்புடன் நான்

**குரு.சதாசிவம்.**



# எழுத்தின் அனுபவங்கள்

## சேவியர் நந்தினியாகி, நந்தினி சேவியராகிய கதை


நான் எனது ஆறாம் ஆண்டிலிருந்தே வாசிக்கத் தொடங்கிவிட்டேன். துப்பறியும் கதை, சித்திரக்கதைகள், கண்ணன் அம்புலிமாமா, இப்படி.... அம்புலிமாமா தீபாவளி மலரை பாடசாலை நூல்களோடு வகுப்பில் வைத்திருந்த காரணத்தால் மற்ஸ் ஆசிரியரால் வெளியில் துரத்தப்பட்டவன். அவ்வாண்டு இரண்டாம் தவணைப்பரீட்சையில் மற்ஸ் பாடத்தில் நான் எடுத்த புள்ளிகள் 95. தொடர்ச்சியாக மற்ஸ் பாடநேரம் நான் வெளியில் விடப்பட்டேன். எனக்கு மற்ஸ் ஏறவே இல்லை க.பொ.சாதா 1966 இல் எண்கணிதம் எடுத்துத் திறமைச் சித்தி பெற்றேன். அதனால் எனக்கு எழுது வினைஞர் பரீட்சைக்குத் தோற்றக் கூடியதாக இருந்தது. பல வருடங்களின் பின்னரே நான் எழுதுவினைஞரானேன். (முகாமைத்துவ உதவியாளர்) 2009 இல் ஓய்வு பெற்றேன். நான் வாசிப்பின் மூலம் எழுதத் தொடங்கியவன். துப்பறியும் கதைகளிலிருந்தும், ஜனரஞ்சக எழுத்திலிருந்தும் பின்னர் விலகிக்கொண்டவன். சேவியர் என்ற பெயரில் எழுதிப் பிரசுரமாகாத காரணத்தால் "நந்தினி " எனும் பெயரில் சுதந்திரனில் பொய்ப் பெயரில் எழுதிப் பிரசுரம் பெற்றவன். ஒளி, இதயம், மல்லிகை, தாயகம் வீரகேசரி,சிந்தாமணியில் நந்தினியாகவே எழுதினேன். ஈழநாடு 10 ஆவது ஆண்டு நாவல்போட்டியில் 2 ம் பரிசு பெற்ற நாவல் "நந்தினிசேவியர் " எனும் பெயரில் சுமார் 56 வாரங்கள் பிரசுரமாகி வந்தது. நான் "நந்தினி சேவியர்" ஆகிவிட்டேன். இன்றுவரை அது தொடர்கிறது. நிரந்தரமாகிவிட்டது. எனது நண்பர்களுக்கு நான் சேவியரல்ல.. நண்பன் தயாளன் உட்பட எல்லோரும் என்னை அன்போடு அழைப்பது. "நந்தினி " எனும் ஆரம்பப் புனைபெயரோடுதான். ஆனால் வாசகர்களும் ஆர்வலர்களும் நந்தினிசேவியராகவே என்னை அறிந்து வைத்துள்ளார்கள். நந்தினி என்பது எனது புனைபெயர். அந்தப் பெயரை நான் வைத்துக்கொண்டது தற்செயலானது. நிச்சயமாக வேறுகாரணங்கள் எதுவுமில்லை.!

**சிறுகதை**

சிறுகதை ஒரு குறிப்பிட்ட மனோநிலையை அல்லது உணர்வு நிலையைக் காட்டுவதாக அமைத்தல் அவசியம். இந்த மனோநிலையை வார்த்தைகளால் சுட்டிக்காட்டாது கதைகளை வாசிக்கும் வாசகரிடம் அவரை அறியாது அவ்வுணர்வு தோன்றும்படி சொல்லவேண்டும்

**பேராசிரியர் கா. சிவத்தம்பி**

# லட்சுமி புத்தகசாலை




**உங்களுக்குத் தேவையான சகல புத்தகங்களுக்கும் எம்மை நாடவும்**

101 A Blyth Road, Hayes, UB31DB, UK Tel: 07852810285


WESTERN
Jewellers
அற்புதமான அழகு மிகு வடிவங்களில் குறைந்த விலையில்
நிறைந்த சேவையினைத் தருவது வெஸ்டன் ஜுவலர்ஸ்.
First and Best Jewellery shop in the UK
Specialised in 22ct Gold, White Gold, Platinum & Diamond Jewellery.
Wembley Branch:
5, Plaza Parade
29-33 Ealing Road
Wembley, HA04YA
Tel: 0208 903 0909
Tooting Branch:
230 Upper Tooting Road
London SW17 7EW
Tel: 02087673445
Silk Emporium
122 Upper Tooting road
London
SW177EN
Tel: 02086721900
Opening Hours: Monday to Saturday (10.30am - 6.30pm), Sunday (11.30am - 6.30pm)